# இலக்கணாகரம்.

# HINTS ON THE STUDY OF TAMIL.

BY

C. AREAKUTTIA PILLAY,

*Professor of Tamil Literature,*

*Graduate of J. College.*

INTENDED

FOR THE MATRICULATION& F.A. CLASSES.

MADRAS:

PRINTED AT THE "VICTOR" PRESS.

1893.

# PREFACE.

The sweetness, flexibility and copiousness of the Tamil Language are too well known to need an account The study of its Grammar provides us with a key to unlock the Cyclopean gates of the Tamil Literature; and helps us to have a free accses to its most valuable treasures of the past. But the beauty, clearness, and nice arrangement, of its Grammatical works, have been all through, mar'ed by its elaborate commentaries, which are in themselves almost unintelligible.

All the time of my connection with the Educational Departments, both in India and Ceylon, I had been conscious of the difficulty the students had to undergo in understanding the Tamil Grammar, and felt, the need of a work that would facilitate its study. And thus I began to prepare this work which I suppose is new in its kind and well suited to meet the wants of a busy student preparing for the University Examinations.

Any remarks on the work and corrections will be most thankfully received.

JAFFNA,
1st *October* 1893.

**C. A.**

# முகவுரை.

பூமியின்கண்ணே, அறிவென்னுஞ் சித்துப்பொருளானது கால
நீட்சியிலதிக மதிகமாயோங்கி வளர்ந்து வருகின்றதென்பதெவர்க்
குமொத்தத் துணிபேயாம். ஆகவே யொத்த தன்மையின்றி விகார
மேற்று, முன், பின்னோடு, முரணுமென்பது பெற்றும். இதுபற்றியே
"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையி
னானே" என்று நன்னூலாருஞ் சூத்திரமியற்றினரென்க.

இந்நூலானது மற்றெந்நூல் போன்றும் நன்னூலாயிராமற், பி
ழைவிரவிப்பிறழ்ந்தபோதினும், தழைந்த மதியுடைத்தண்ணளியோர்
கள், குழைந்தவன்புடன் குற்றங்களைந்து, விழைந்துகொள்வர் விழு
மிதாக வென்பதே யென்பூரண நம்பிக்கையாம். தமிழிலனேக விலக்
கண நூல்களிருந்தபோதினு மவை சாதாரணமா யெல்லோர்க்கு மு
பயோகப்படா. அது பற்றியே பொதுவா யெல்லோர்க்கும் விசேஷ
மாய்க் கல்லூரி மாணாக்கர்க்கு மெளிதி லனுகூலப்படும்வகை யெண்
ணிக் கூடியளவினிதாய் விளங்கச் சுருக்கிப் பிரசுரிக்கப்பட்டது.

பதமுடிவு - சொல்லிலக்கணம் - சொற்றொடரிலக்கணம் - செ
ய்யுட்பொருள் கோடல் - அந்நுவயஞ்செய்தல் - பஞ்ச லக்கணைப்பிர
யோகமாகிய விவைகளையு மின்னும்மாணாக்க ரறியவேண்டிய வநே
கங்காரியங்களையு மிந்நூலடக்கியிருக்கின்றது.

திருச்சிராபள்ளியைச் சேர்ந்த முருகூர், பெருமாள் பாளையம்,
சிக்கத்தம்பூர், ரங்கநாதபுரமென்னு மிடங்களிலுள்ள தர்மசீல தன
வான்கள் இந்நூல் வெளிவரவேண்டுமென்று விருப்புடையவர்களா
யிருந்ததுமல்லாமல தற்கேற்றவுதவியுஞ்செய்தார்களென்று அன்போ
டுமறிவிக்கின்றேன். விசேஷமாய்ப் பெருமாள்பாளையம் ம-ள-ள-ஸ்ரீ
கனம் மு. வி. அருணாசலரெட்டியாரு மவர் சகோதரனு மிதின்
பேரிற் காட்டிய விருப்பமுஞ் சிரத்தையும் விவரிக்கப்படத்தக்கதும்
வியக்கப்படத் தக்கதுமாம்.

யாழ்ப்பாணம்,<br>
1893-௵ அக்டோபர்௴ 1-௳. கா. அ.

# அட்டவணை.


(1) முகவுரை.
(2) கடவுள்வணக்கம்.
(3) குருவணக்கம்.
(4) அவையடக்கம்.

I.—அதிகாரம்.
(1) மாணாக்கர்மாண்பு.
(2) ஆரியம்.
(3) தமிழ்.

II.—அதிகாரம்.
(1) பதமுடிபு.
(2) அரும்புணர்ச்சிவிதி.
(3) எதிர்மறை.
(4) வடமொழிப்புணரியல்.

III.—அதிகாரம்.
(1) பரியாயநாமங்கள்.
(2) தொகைக்குறிப்பு.
(3) அரும்பதவிளக்கம்.
(4) மொழிவேற்றுமை.

IV.—அதிகாரம்.
(1) சொற்றொடர்.
(2) சொல்லிலக்கணம்.

V.—அதிகாரம்.
(1) செய்யுட்பொருணடை.
(2) அடைமொழி.
(3) பொருண்முடிப்பு.
(4) மொழிமாற்று.
(5) மொழிப்பிரிப்பு.

VI.—அதிகாரம்.
அந்வயம்.

VII.—அதிகாரம்.
பொருள்.

VIII.—அதிகாரம்.
(1) யாப்பு.
(2) செய்யுள்விகற்பம்.
(3) செய்யுட்பொருத்தம்.

IX.—அதிகாரம்.
(1) அணி.
(2) சொல்லணி.
(3) பொருளணி.

X.—அதிகாரம்.
(1) பஞ்சலக்கணப்பிரயோகம்.
(2) பரீக்ஷைவினாக்கள்.

## கடவுள் வணக்கம்

கருணை யன்பு கடந்த ஞானந்
தருமம் நீதி தளராப் பொறையே
உருவா யமர்ந்த வொருதனி முதலாங்
குருவே யிந்நூற் குறுதி பகரே.

## குருவணக்கம்.

சிவ மெனும் பொருளைச் சிரத்தையோடு
மகமதில் வைத்தே யன்புட னுளும்
பவமெனும் பெரிய பரவை நீந்துஞ்
சுகமுடை வயித்தி லிங்க சுகுணன்
இதமுறு சங்கை யெழினகர் வந்தோன்
பதமலர் தொழுதேன் பன்முறை யுளத்தே.

## அவையடக்கம்.

பிறங்க வொலியே பேசுங் கிள்ளை
கறங்கு முழவே நிறங்கிள ராடி.
திறம்படு பினைய தெரிந்த வான்றோர்
புறம்பே யிகழார் போற்றுவ ரெனையே

# க. அதிகாரம்.

உய்தருமுயிர்போ லுலவி நிறைந்த
அய்யனதடிக ளன்புட னேத்தி
இலக்கணனவமா யிளையோர் தமக்கே
வலக்கணாய் விளங்க வகுத்தேன் புவியே.

## மாணாக்கர் மாண்பு.

1.—காலை மாலை கடும்பகல் சாமம்
ஆயவெந் நேரமு மன்புட னுருகிப்
பாலைப் பருகும் பான்மையே போன்று
பரமனை நினைந்து பன்முறை பணிந்து
நூலை நுவன்றும் நுவலக் கேட்டும்
பொருளை யறிந்தும் போற்றி நடந்தும்
வாலப் பருவம் வறிது படாமல்
ஆர்வமாய்க் கற்ற லார்க்குங் கடனே.

2.—தெய்வந் தேசிகன் றிருந்தகு பெரியோர்
மாதாத் தந்தை மாநிலத் தெவர்க்கும்
செய்யுங் கடமை செவ்விதாய்ப் புரிந்து
கல்வி மமதை கருத்துட னீக்கி
மெய்ம்மை பகர்ந்து மேன்மையோர் கூட்டம்
நாடி யணைந்து நாளுமே பயின்று
உய்யும் போற மோங்க வைத்தன்
மாணாக்கர்க் காகும் மாண்புடைக் கலனே.

3.—கற்றன வோம்பன் மற்றவை யுரைத்தல்
கலை பலவாய்த் தலைவைகளைத் தேறல்

முற்று மேவரப் பணன்முலங் கிளோதல்
ஆதியிற் பொருளு மாக்கிய பொருளும்
ஒற்றுமைப் பொருளு மொன்று வேறாய்த்
திரிந்த பொருளுந் திசைச்சொற் பொருளுந்
தெற்றென வுணருந் திறம்பா நிலைமை
ஆகு மிவைக ளறிஞர்க் குரித்தே.

4.—ஞானம் பிறத்தல் ஞாலம் வெறுத்தல்
தீயன கழித்தல் தூயன சேர்த்தல்
ஈனந் தவிர்த்தல் ஈசனைத் துதித்தன்
முத்தி பெறுதல் சித்தி யடைதன்
மானம் விரும்பன் மாண்டன பயிறல்
பாவம் விடுத்தல் கோப மொழித்தல்
ஆன தொழில்க ளாவன கல்வியாற்
கனவிலுங் காப்பர் கலை பயில்வோரே.

5.—வீடே கடைசி விரும்புவ ததுவே
நாளும் பெரியோர் நலிந்து வருந்தியு
பீடே யில்லா வின்பப் பெருக்கை
மனதி லெண்ணி மதித்தே நிதமுமிக்
கூடே சதமெனக் கொண்டு திரியார்
உலக மயக்கை யுள்ளா தெள்ளுவர்
நாடே கல்வி நன்கு மதித்தே
கல்வியே முத்தி கடைப்பிடி யிதுவே.

## ஆரியம்.

ஆதிகாலத்தில், மனுஷனானவன் பூமியின் கண்ணே, அதிகஞ்சிறப்புற்று விளங்கிய, மத்திய ஆசியாவின் ஓர் பாகத்தி லுற்பத்தியாய் ஆங்கே யமர்ந்தா னென்றும், அதினின்றுஞ் சனங்கள் பல்கிப்பெருகி அயலான தேசங்களிற் குடியேறினார்க ளென்றும், அவர்கள் ஒரு அடி யென்றும், பாஷை பழக்க வழக்கங்களில் ஒற்றுமையுடையரென்றும்; பின் ஏதோ ஓர் நவீன மனவெழிற்சி காரணமாயாண்டுப் பெயர்ந்து வடபான் நோக்கிப் போயினு

ரென்றும், அவரே பெயர்பெற்ற ஐரோப்பையெ ரென்றும், மேலும் எஞ்சியி ருந்தோரு மவ்வகை யுணர்ச்சியா லவ்வயினீங்கிக் கீழ்பான் னோக்கிப்போயினு ரென்றும் அவரே ஆரிய ரென்றும், அவர் பாஷையே ஆரிய மென்றுஞ் சரித் திரங்கள் கூறும். ஆரியர் என்பதின் கருத்து அறிவுடையோர் என்றும், இன்னும் உழுநர் என்றும், அனேகர் மூலார்த்த பேதமாய்க் கூறுவார்கள். அதெப்படியாயினு மாகுக. ஆயினிவர் சிந்து,கங்கை, நதியோரங்களிற் குடி யேறினர்க ளென்றும், ஆதியில் அவரிருந்தவிடம் ஆரியாவர்த்த மென்றும் சொல்லப்படும். மேலு மாங்காங்கு இலைமறை காய்போற்செறிந்திருந்த புரா தன வாசிகள் இவ்வாரியராற்றுஞ் சுதந்தர மிழந்து சுயேட்ட பங்க முறுவ திலுந், தனிவழிசேறல் தகுமென வெண்ணித் தக்கணம் போயினு ரென்றுங் கூறப்படும்.

கிரேதகர், உரோமர், ஜர்மானியர், ஆரியர் என்னு மிவர்கள் ஒரு அடியிற் பிறந்தார்கள், ஒரு இடத்திலிருந்தார்கள் என்பதற்கு அவ்வப் பாஷையிலுள்ள பொதுமொழிகளே போதிய சான்றும். இவ்வாரிய பாஷையானது மற்றெந் தப் பாஷைகளினுஞ் சிறந்ததுஞ் சீருடையதுஞ் சத்த பேதங்களை யறிவிக்குங் குறைவில்லாத வெழுத்துக்களையும், ஐவர்க்கம், கூட்டெழுத்து, முதலியவற் றையு முடையதாம்.

## தமிழ்.

தமிழென்னும் மொழியானது தனிமைப் பொருள் குறித்த தமியென்னு மடியாய்ப் பிறந்து, தனக்கிணையில்லாப் பாஷையென்னும் பொருள் பயக்கு மென்றும், அன்றியுஞ் செவிக்கினிமை பயத்தலால் மதுரமென்னும் பொருட் பேறுடைத்தாகித் தமிழெனப் பெயர்பெற்ற தென்றும், மேலு மிவைகளை யொழித்துத் திராவிட மென்னும் வடமொழியே தமிழென்றாய தெனப் பல வாறு கூறுவர்.

வடமொழியானது தமிழ்மொழிக்குத் தாய்மொழியன்று, தமிழ்ப் பாஷை தற்பாஷையேயாம். இருமொழி உற்பத்தி யொற்றுமை வேற்றுமைகளைப் பற்றி யாழ்ப்பாணம், ம-௱-௱-ஸ்ரீ, சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களால் வீர சோழியப் பதிப்புரையில் விரிவா யுரைக்கப்பட்டதைக் கண்டுணர்க. இப்பா ஷையின் காலவர்த்தமானம் எண்வகைப்படும். அவை யாவன :—

1. அபோதகாலம்.
2. அட்சரகாலம்.
3. இலக்கணகாலம்.

4. சமுதாயகாலம்.
5. அநாதாரகாலம்.
6. சமணர்காலம்.
7. இதிகாசகாலம்.
8. ஆதினகாலம்.

I. அகத்தியர் காலத்திற்கு முன்னே வரிவடிவின்றி யொலிவடிவுமாத்திரமாய் வழங்கிய காலம் அபோதகாலமாம்.

II. அகத்தியரால் நெடுங்கணக் கேற்பட்டதுமுதல் அகத்தியம் நிறைவேறியது வரைக்குஞ் சென்றகாலம் அட்சரகாலமாம்.

III. தொல்காப்பியன்முதல் வாமனனீறாக அகத்தியருடையபன்னிரு சிஷ்யரும், அவரிடத்தே கற்றுத் தேர்ந்தபின் தனித்தனியாயு மொருங்கு சேர்ந்தும் நூல்களை இயற்றி அரங்கேற்றியகாலம் இலக்கண காலமாம்.

IV. மதுரைச்சங்கத்தார் காலம் சமுதாயகால மெனப்படும், இச்சங்கமானது முதல், இடை, கடை, என மூன்றுவகையாம்.

| | | | |
|---|---|---|---|
| முதற் சங்கத்தார் காலம் | — | 4500 | வருஷம். |
| இடை | ,, | 3500 | ,, |
| கடை | ,, | 2000 | ,, |
| ஆகமொத்தம் | ,, | 10000 | வருஷம். |

முதற்சங்கத்தார் அரங்கேற்றிய நூல்கள் தொல்காப்பியம் முதலியன, இடைச்சங்கத்தார் அரங்கேற்றிய நூல்கள், கலி, குருகு, வெண்டாளிமுதலியன, கடைச்சங்கத்தார் அரங்கேற்றிய நூல்கள் நெடுந்தொகை, நானூறு, முதலியன, இம்மூன்று சங்கங்களிலு மரங்கேற்றிய நூல்கட்கு அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசைநுணுக்கம், புதியாநுட்பம், சாயித்தியம் முதலியன, முதல் நூல்களாம்.

V. இதன்பின் 200 வருஷங்களாய்ச் சேர சோழபாண்டியருடைய ஆதரவின்றித் தமிழிருந்தது, இதுவே அநாதார கால மெனப்படும்.

VI இதன்பின், நிகழ்ந்தகாலஞ், சமணர்கால மெனப்படும், இச்சமணர் புத்த வைஷ்ணவ வித்துவான்களைப் போலாது, சிந்தாமணிபோன்ற பெருங் காப்பியங்களையு மின்னுமரிய, பெரிய, சிறந்த நடையையுடைய வநேகங் கிரந்தங்களையு மியற்றினர்.

VII. இதன்பின் சென்ற, 800 வருஷங்கள் இதிகாசகாலமாம், இதில் பாரதம், நைடதம், இராமாயணம், இரகு வமிசம், முதலிய நூல்கள், ஈழமண்டலம், இந்தியா, என்னு மிரண்டிடங்களிலுமுள்ள விசேஷ புலவரா லியற்றப்பட்டன.

தமிழ்.

சோழசோழ பாண்டியதேசப் புலவர்.

*அதிவீரராமன், புகழேந்தி, ஒட்டக்கூத்தன், கம்பர், அம்பிகாபதி, தண்டி, வில்லிபுத்தூராழ்வார், வரந்தருவார்,.*

தொண்டைமண்டலப் புலவர்.

*கச்சியப்பர், சேக்கிழார்.*

ஈழமண்டல வித்துவான்கள்.

*சிவப்பிரகாசர், அரசகேசரி, செகராசசேகரன்.*

VIII. *தற்காலமே ஆதீனகாலமாம் இது ஏறக்குறைய இற்றைக்கு 700 வருஷங்களின் முன்றொடங்கியது, கல்விக்கழஞ்சியமாகிய ஆதீனத்தை முதல் ஏற்படுத்திப் பெயர்படைத்தவர், கைலாசபரம்பரை, திருவாவடுதுறை ஆதீனம் ம-ா-ா-ஸ்ரீ நமச்சிவாய தேசிகராம், கல்வியை விருத்தி செய்யும்படியாய்த் தமிழ் நாட்டிற் சிறந்த ஆதீனங்கள் ஏற்படுத்தப்பட்டன.*

*விசேஷ ஆதீனங்களு மவைகளிற்றோன்றிய விசிட்டதேசிகர் நாமங்களும்.*

*திருவாவடுதுறை ஆதீனம்.*

1. *நமச்சிவாயதேசிகர்.*
2. *உமாபதிசிவாசாரியர்.*
3. *அருணந்திசிவாசாரியர்.*
4. *ஈசானதேசிகர்.*
5. *சங்கரநமச்சிவாயர்.*
6. *வேலப்பதேசிகர்.*
7. *சிவஞானமுனிவர்.*

*தருமபுரத்தாதீனம்.*

1. *சம்பந்தசரணாலய சுவாமிகள்,*
2. *சம்பந்தசுவாமிகள்.*
3. *வெள்ளியம்பலத்தம்பிரான்.*
4. *சச்சிதானந்ததேசிகர்.*
5. *சிவப்பிரகாசசுவாமிகள்.*
6. *வைத்தியநாதநாவலர்.*

*திருவண்ணாமலை ஆதீனம்.*

1. *அமிர்தலிங்கசுவாமிகள்,*
2. *குகை நமச்சிவாயர்.*
3. *ஞானப்பிரகாசசுவாமிகள்,*
4. *ஆடியபாதசுவாமிகள்,*

## தமிழ்.

## மதுரை ஆதீனம்.

### 1. பரஞ்சோதிமுனிவர்.

## மங்கலபுரத்தாதீனம்.

### 1. சிவப்பிரகாசசுவாமிகள்.

தற்காலத்தில் அரசாட்சியார் வித்தியாசாலை மாணாக்கர்க்கு அவர் சொந்தபாஷையாகிய தமிழைக் கற்பிக்கும் கருத்துடையராயும் விருப்புடையராயுமிடையறு முயற்சிசெய்து வருகின்றனர், ஆயினு மம்மாணாக்கர், தமிழைச் சரியாய்க் கற்று அதன்பயனைப் பெற்று, மனோவிர்த்தியடைதற் கேற்றவழி வகைகளை உபயோகிக்கத் தெரியாமலிடர்ப்படுகின்றார், கிரமமும் வரையறையுமின்றி, நேர்ந்தபடி சிலநூல்களிற் சிற்சில பகுதிகளைப் படிப்பதாலும், பரீட்சைக் காயத்தப்படுத்துவதாலும், அரசாட்சியார் நோக்கம், நிறைவேறுமற் போவதுமன்றி அம்மாணாக்கரும், ஆனையைத்தொட்ட அந்தகர்போல் மயங்குவாரென்க.

# TABLE—I.

## பெயர்.

- 1. பொருள்.
- 2. இடம்.
- 3. காலம்.
- 4. சினை.
- [அடியாய்வரும் பெயர்கள்]

- 5. குணப்பெயர்.
  - (a) வண்ணம்
  - (b) வடிவு.
  - (c) நாற்றம்.
  - (d) சுவை.

- 6. தொழிற்பெயர்.
  - (a) முதனிலையோடும்,
  - (b) முதனிலையின்றியும்,
  - (c) முதனிலை திரிந்தும்,
  - [வரும் பெயர்கள்.]

- வினையாலணையும்பெயர்.
  - தெரிநிலைவினையால் அணையும்பெயர்.
    - 1. உடன்பாட்டுவினையால் அணையும்பெயர்.
    - 2. எதிர்மறைவினையால் அணையும்பெயர்.
  - குறிப்புவினையால் அணையும்பெயர்.

# TABLE—II.

## வினை.

- முற்று.
  - தெரிநிலைவினைமுற்று.
    - 1. செய்பொருள்குன்றிய வினைமுற்று.
    - 2. செய்பொருள்குன்றாத வினைமுற்று.
    - 3. தன்வினைமுற்று.
    - 4. பிறவினைமுற்று.
    - 5. செய்வினைமுற்று.
    - 6. செயப்பாட்டு வினைமுற்.
  - குறிப்புவினைமுற்று.
    - 1. ஆக்கவினைமுற்று.
    - 2. இயற்கைவினைமுற்று.

- எச்சம்.
  - தெரிநிலைவினையெச்சம்.
    - 1. தெரிநிலைவினை வினையெச்சம்.
    - 2. தெரிநிலைவினைப் பெயரெச்சம்.
  - குறிப்புவினையெச்சம்.
    - 1. குறிப்புவினை வினையெச்சம்.
    - 2. குறிப்புவினைப் பெயரெச்சம்.

# உ. அதிகாரம்.

## பதம்.

எழுத்துத் தனித்தேனு மிரண்டு முதலாயத் தொடர்ந்தேனும் பொருளை யறிவிப்பது பதமாம். (உ-ம்) நிலம், நீர்.

பகுக்கப்படுந் தன்மையுடையது பகுபதமாம். (உ-ம்) பொன்னன், நடந்தான். தொன்று தொட்டுப் பகுக்கப்படாத் தன்மையுடையது பகாப்பதமாம். (உ-ம்) மண், மரம், தாது=பகாப்பதம். தத்திதம்=பகுபதம்.

## பெயர்.

காலத்தைக் காட்டாது வேற்றுமை யேற்றுப் பொறிகட்கும் மனதிற்கும் விடையமாகிய பொருளை யுணர்த்துஞ் சொல்லே பெயராம். [Se Table I.]

விடையம்=ஆதாரம்.

## பெயர்.

1. பொருட் பெயர் ... ... ... ... பொன்னன்.
2. இடப்பெயர் ... ... ... ... காசியான்.
3. காலப்பெயர் ... ... ... ... மாசியான்.
4. சினைப்பெயர் ... ... ... ... கண்ணன்.

### 5. குணப்பெயர்.

(a) வண்ணம் ... ... ... ... ... கரியன்.
(b) வடிவு ... ... ... ... ... இருகோணம்.
(c) சுவை ... ... ... ... ... கைப்பு.
(d) நாற்றம் ... ... ... ... ... நற்கந்தம்.

### 6. தொழிற்பெயர்.

(a) முதனிலையோடும் ... ... ... மடி, பிடி.
(b) முதனிலையின்றியும் ... ... ... கூத்து, வேட்டம்.
(c) முதனிலைதிரிந்தும் ... ... ... கேடு, பாடு.

[வந்தபெயர்கள்]

## வினையாலணையும் பெயர்.

1. தெரிநிலைவினையால் ... ... ... ... நடந்தான்.
2. குறிப்புவினையால் ... ... ... ... குழையன்.
[அணையும் பெயர்கள்]

ஒரு பொருளின் குணத்தை யுணர்த்திப் பெயர்த் தன்மைபூண்டு நிற்பது குணப்பெயராம்.

வினையடியாய்த் தோன்றி வினைநிகழ்ச்சியை யுணர்த்தி வேற்றுமை யேற்றுக் காலங் காட்டாது நிற்பது தொழிற் பெயராம்.

காலத்தை வெளிப்படையா யல்லது குறிப்பாய்க் காட்டி யத்துடன் வேற்றுமை யேற்றுவரின் வினையா லணையும் பெயராம்.

## வினை.

ஒரு பெயரினது தொழில் நிகழ்ச்சி, அல்லது புடைபெயர்ச்சி வினையாம் (See Table II.)

### (முற்று)

1. தெரிநிலை வினைமுற்று—நடந்தான், போயினான்.
2. குறிப்பு வினைமுற்று—பொன்னன், குழையன்.

### (எச்சம்)

1. தெரிநிலைவினை வினையெச்சம்—நடந்து, இருந்து.
2. தெரிநிலைவினைப்பெயரெச்சம்—போன, வந்த.
3. குறிப்புவினை வினையெச்சம்—அன்றி, இன்றி.
4. குறிப்புவினைப்பெயரெச்சம்—கரிய, பெரிய.

பால்காட்டும் விகுதியோடு கூடி நிறைந்து நின்று பெயரைக்கொண்டு முடிவதே முற்றெனப்படும். செய்பவனையுங் காலத்தையுந், தொழிலையும், முறையே விகுதியாலும், இடைநிலையாலும், பகுதியாலுங் காட்டிநிற்பது தெரிநிலை வினைமுற்றெனப்படும்.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், என்னு மாறடியானும், பிறந்து, செய்பவனைமாத்திரம், வெளிப்படையாயும், எஞ்சியவைகளைக் குறிப்பாயுங் காட்டுவது குறிப்புவினை முற்றாம்.

தெரிநிலை வினைப்பெயரெச்ச வினையெச்சங்களிலே செயலுங், காலமு மாகிய விரண்டும், வெளிப்படையாயும், எஞ்சியவைகள், குறிப்பாயுந்தோன்றும்.

குறிப்பு வினைப்பெயரெச்ச வினையெச்சங்களிலே, வினைமுதன் முதலிய வெல்லாங் குறிப்பாய்த்தோன்றும்.

## பகுபதவுறுப்புகள்.

| | |
|---|---|
| 1. பகுதி. | 4. சாரியை. |
| 2. விகுதி. | 5. சந்தி. |
| 3. இடைநிலை. | 6. விகாரம். |

பகுபதங்களின் முதலிலே நிற்கும் பகாப்பதங்களே பகுதியாம். அவைகளினிறுதியிலே நிற்கு மிடைப்பகாப்பதங்களே விகுதியாம். மொழிகளின் நடுவிலே நியதியாய் நின்று காலத்தை யுணர்த்துவன இடைநிலைகளாம். மொழிகளிற் சார்ந்து, தமக்கு ஒருகருத்தின்றி, வருவது சாரியையெனப்படும். தோன்றல், திரிதல், கெடுதன்முதலிய விகாரங்களே சந்தியெனப்படும். வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல் முதலிய விகாரமெனப்படும்.

பெயருக்கும், குறிப்புவினை முற்றிற்கும், பொருண்முதலாறுஞ் சிறுபான்மை, சுட்டும், வினாவும், பகுதிகளாய் வரும். (உ-ம்)

| | |
|---|---|
| (1) பொருள்—பொன்னன். | (5) குணம்—கரியன். |
| (2) இடம்—அம்பலத்தான். | (6) தொழில்—நடையன். |
| (3) காலம்—தையான். | (7) சுட்டு—அவன். |
| (4) சினை—மூக்கன். | (8) வினா—எவன். |

வினைப் பகுபதங்கட்குப் பெரும்பான்மை வினையுஞ், சிறுபான்மை, பெயர், இடை, உரிகளும், பகுதியாம். (உ-ம்)

(1) வினையடி—(நட) நடந்தான்.
(2) பெயரடி—(சித்திரம்) சித்திரித்தான்.
(3) இடையடி—(போல்) போன்றான்.
(4) உரியடி—(சால்) சான்றான்.

## பதமுடித்தல்.

1. அவன்=அ+அன் [இரண்டுறுப்பால் முடிந்தது.]
2. தின்றான்=தின்+ற்+ஆன் [மூன்றுறுப்பு]
3. தின்றனன்=தின்+ற்+அன்+அன் [நாலுறுப்பு]

4. கடித்தனன்=கடி+த்+த்+அன்+அன் [ஐந்துறுப்பு]
5. நடந்தனன்=நட+த்+த்+அன்+அன் [சந்தியால்வந்த தகரம், நகரமானதுடன் ஆறுறுப்பு.]

## பொதுப்பகுபதம்.

ஒரு சொல்லானது உருவமாத்திரையில் விகாரமேலாது உறுப்பாற்றலால் வேற்றுப்பொருளளிக்கும்போது பொதுப்பகுபதமெனப்படும். (உ-ம்)

### 1. சாவான்.

சாவான்=சா+வ்+ஆன்—உடன் பாட்டுத் தெரிநிலை வினைமுற்று.
சாவான்=சா+ஆ+ஆன்—எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்று.
சாவான்=சா+வான்—எதிர்காலவினை எச்சம்.

### 2. தேடிய.

(a) இறந்தகால வினைமுற்று. (c) இறந்தகாலப் பெயரெச்சம்.
(b) வியங்கோள் வினைமுற்று. (d) எதிர்கால வினை எச்சம்.

### 3. தழைப்ப.

(a) பலவின் பாற்படர்க்கை வினைமுற்று.
(b) பலர்பாற்படர்க்கை வினைமுற்று.
(c) செயவென்னெச்சம்.

### 4. அன்ன.

(a) குறிப்பு வினைமுற்று.
(b) குறிப்பு வினைப்பெயரெச்சம்.

## சொற்றொடரியல்.

பெயர் வினைமுதலிய சொற்கள் கருத்தோடு மொழுங்குபடத் தொடர்ந்து நிற்குந்தன்மையே சொற்றொடராம் அது தொகைநிலை தொகாநிலைத் தொடர்களென விருவகைப்படும் உருபுகள் மறைந்து நிற்கின் தொகைநிலையென்றும் வெளிப்படையாய் நிற்கின் தொகாநிலையென்றுங் கூறப்படும்.

### [வேற்றுமை.]

| வேற்றுமைத்தொகை. | | வேற்றுமைவிரி. |
|---|---|---|
| (2) நிலங்கடந்தான் | [ஐ] | நிலத்தைக்கடந்தான். |

(3) கல்லெறிந்தான் [ஆல்] கல்லாலெறிந்தான்.
(4) கொற்றன்மகன் [கு] கொற்றனுக்குமகன்.
(5) மலைவீழருவி. [இன்] மலையின்வீழருவி.
(6) சாத்தன்கை [அது] சாத்தனதுகை
(7) குன்றக்கூகை [கண்] குன்றத்தின்கட்கூகை.

[தொகைநிலைத்தொடர்.]

(1) வினைத்தொகை ... ... ... கொல்யானை.
(2) பண்புத்தொகை ... ... ... கருங்குதிரை.
(3) உவமைத்தொகை ... ... ... மதிமுகம்.
(4) உம்மைத்தொகை ... ... ... இராப்பகல்.
(5) அன்மொழித்தொகை ... ... ... பூங்குழல்.

காலம் மறைந்து நின்றபெயரெச்சம் வினைத் தொகையாம். பண்புக்கும், பண்பிக்குமிடையே ஆகியவென்னு முருபு மறைந்துநிற்கும் நிலையே பண்புத் தொகையாம். உபமானத்திற்கும் உபமேயத்திற்குமிடையே போலப்புரைய வென்னு முருபுகள் கெட்டு நிற்பது உவமைத்தொகையாம். உம்மையிடையிலே மறைந்துநிற்பது உம்மைத்தொகை. இயல்பான புணர்ச்சியினீங்கி யல்லாத மொழியைத் தந்து நிற்பது அன்மொழித்தொகை. ஆகிய வென்னும் பண்புருபு கெட்டு நிற்கப்பெற்றுப் பொதுப்பெயரோடு சிறப்புப் பெயராயினுஞ் சிறப்புப்பெயரோடு பொதுப்பெயராயினும் ஒருபொருண்மேல் வந்துதொடர்ய இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம்.

[தொகாநிலைத் தொடர்.]

(1) எழுவாய் ... ... ... சாத்தன்வந்தான்.
(2) விளி ... ... ... சாத்தாவா.
(3) தெரிநிலைவினைமுற்று ... வந்தான் அரசன்.
(4) குறிப்புவினைமுற்று... ... பெரியன் சாத்தன்.
(5) வினையெச்சம் ... ... வந்துபோனான்
(6) பெயரெச்சம் ... ... வந்தமனிதன்.
(7) இடை ... ... ... மற்றொன்று.
(8) உரி ... ... ... நனிபேதை.
(9) அடுக்கு ... ... ... பாம்பு பாம்பு.

1. ஆயன்சாத்தன பொதுப்பெயரோடு சிறப்புப்பெயர்வந்தது.
2. சாரைப்பாம்பு சிறப்புப்பெயரோடு பொதுப்பெயர்வந்தது.

[காலமறியும் வழி.]

1. பகுதி யிரட்டியு மிடைநிலை பெறறும்
விகுதி நின்றும் நிலையினிற்றிரிந்தும்
உரிமையாய்க் காலமுவகையாய்க் காட்டுந்
தெரிநிலை வினையின்றிறமதாமே.

தெரிநிலை வினையானது பகுதியிரட்டுதலாலு, மிடைநிலை பெறுதலாலும், விகுதியாலும், விகுதி விகாரப்படலாலுங் காலத்தைக் காட்டுமென்க.

1. பெற்றான் ... ... ... பகுதியிரட்டல்.
2. நடந்தான் ... ... .. இடைநிலை பெறுதல்.
3. சென்றும் ... ... ... விகுதி காட்டல்,
4. தழீஇக்கொண்டான் ... விகுதிவிகாரப்பட்டுக் காலங்காட்டல்.

[வினைப்பகுதிகள் விகுதியோடு புணர்தல்.]

2. பொழுதுகொள் வினையிற் பொருந்து முறைப்புகள்
விழுமிதாயத் தம்முளி சையுங்காலை
ஒழுகுபல் விகாரமுற்றிடப்பெறுமே.

(1) முதனீழல் ... ... ... (செல்) சேறல்
(2) தனிநெடில் குறுகல் . . ... (தா) தந்தான்
(3) முதல் ஆ. எ. ஆதல் ... ... (சா) செத்தான்
(4) முதலெழுத்துக் குறுகிரகரமெய் விரிதல்(கொணு) கொணர்ந்தான்
(5) நடுக்குறின் நீழல் ... ... (விரவு) விராவினன்
(6) இயல்பும் விகாரமாயு முறழ்தல் ... (முழுகு) முழுகினன், மூழ்கினன்.
(7) தனிநெடில் குறுகியொருயிர் மெய்விரிதல் (வா) வருகின்றான்
(8) ஈற்று மெய்வரு மெய்யாய்த்திரிதல் (கல்) கற்றான்
(9) ஈற்றுமெய்வரு மெழுத்திற்கினமாய்த் திரிதல் (சொல்) சொன்னான்.

[இன்னின்ன விகுதி யெஞ்சப்பெறு மென்பது.]

3. முன்னிலையேவன் மொழியுந்தொழிலைப்
பன்னிய பெயரும் பகரும் பெயரே
எஞ்சியகிழவி யிணையில் கன்மம்
விஞ்சவுணர்த்தும் விகுதியாமையும்,
வினைமுதற் பொருளை விளக்குமீயும
இனையனவிகுதி யெஞ்சப் பெறுமே.

1. நீநட ... ... ஆய்விகுதி புணர்ந்துகெட்டது
2. கேடு ... ... தொழிற்பெயர் விகுதி கெட்டது.
3. கொல்களிறு ... பெயரெச்சவிகுதி புணர்ந்துகெட்டது.
4. காய், தளிர் ... வினைமுதற் பொருளுணர்த்தும் இகரவி தி கெட்டது.
5. ஊண், தீன் ... செயப்படுபொருளுணர்த்தும் ஐவிகுதிகெட்டது.

கன்மம்=செயப்படுபொருள்.

4. அம்மொடை காணுகு மிகரம்
இம்முறைவிகுதி யிசைந்து தம்பிற்
கன்மம் கருவிகருதாம் வினையின்
நன்முதல்காட்டு நடையதாமே.

அம், ஐ, இ என்னும் மூன்று விகுதிகளும் செயப்படு பொருளையும், கருவிப் பொருளையும், வினைமுதற் பொருளையுங் காட்டும்.

1. தொல்காப்பியம்-தொடை-ஊருணி செயப்படுபொருள்,
2. நோக்கம்-பார்வை-மண்வெட்டி ... கருவிப்பொருள்
3. எச்சம்-பறவை அலரி ... ... வினை முதற்பொருள்.

5. "நஞ்விடைப்பகுபத நண்ணலுநெறியே"

கிளை + ந் + அர் = கிளைநர்
கிளை + ஞ் + அர் = கிளைஞர் } பெயர்ப்பகுபதம்.

## அரும்புணர்ச்சிவிதி.

மாணாக்கரும் மற்றயோரும் பலமுறையும் புணர்ச்சி, விகாரங்களிற் றெளிவு பொருந்தாமலிடர்படுதல் பற்றிச்சில அருமையானவிதிகளை எளிதில் ஞாபகப்படுத்தும்வகை செய்யுளிற் றருகின்றேன்.

1. நவைநீங்குமாருயிர் முன்வலியேற்றி டினம்பிரட்டித்
தவையாகு மென்றோதிடு மாங்கதுவே கற்றோர்க்கினிய
சுவையாது வீண்மயக்காமே புறனடைதோற்றுமிந்தக்
கவையாவுமின்னின்ன வென்றெடுத்தேயிங்கு காட்டுவனே.

(இ ள்.) குற்றம்நீங்கிய உயிர்முன்னர் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அந்த வல்லினம் மிகுமென்று சொல்லப்படும் ஆயின் சிலபுறநடைகள் ஆரையும்மயங்கச்செய்யும் தன்மையுடையன வாகையால் அவைகளை யிவ் விடத்து சிறப்புப் பொருந்தும்படி சொல்லுவேன் என்பதாம்.

2. அகரமிறும் பெயரெச்சவீறென்றுட னைகரப்
பகருமிழிதிணைப் பன்மைவிளிப்பெயர் பாய்மதமா
நிகரம் பரிக்குமதர் விழிநீ யென்பொதுவும் வினைப்,
புகுதொகை முற்றுமியல்பாம் வலிவரும்போதினுக்கே.

(1) அகரவீற்றுப்பெயரெச்சம்—கண்டகுதிரை, கரியகுதிரை.
(2) அகரவீற்றஃறிணைப் பன்மைப்பெயர்—சிலகை - பலபேர்.
(3) விளிப்பெயர்—புலவபாடு.
(4) நீ யென்னும் பொதுப்பெயர்—நீ பெரியை-நீ குறியை.
(5) வினைமுற்று—உண்டன குதிரைகள்; கரியனகுதிரைகள்.
(6) வினைத்தொகை—விரிகதிர்-அடுகளிறு.

[இவைகளின் முன்வலி யியல்பாம்.]

---

துவ்விறுஞ்சுட்டுடனீற்று விறுவொடுஞ் சொற்றிமேற்
றுவ்விறுமொன்றிரண்டாறேழ் விகாரமுஞ்சொற்பொதுவு
மொவ்விலுயர்திணைப்பேர்களின் முன்வலியுள்ளபடி
செவ்வே யியல்பெனமுன் வருநூலவர் செப்பினரே.

| | | | |
|---|---|---|---|
| (1) | அது ... ... ... ... | அதுகுறிது | துவ்விறுசுட்டு. |
| (2) | இது ... ... ... ... | இதுபெரிது | |
| (3) | உது ... ... ... ... | உதுசிறிது | |
| (1) | அவனே ... | அவனேகொண்டான் | ஈற்றுவிறு. |
| (2) | அவனோ ... ... | அவனோகொண்டான் | |
| (3) | அவனோ ... | அவனோகொண்டான் | |
| (1) | ஒரு ... ... ... ... | ஒருகை | விகாரப்பெண்ணுப்பெயர். |
| (2) | இரு ... ... ... ... | இருசெவி | |
| (3) | அறு ... ... ... ... | அறுகுணம் | |
| (4) | எழு ... ... ... ... | எழுசுடர் | |

1. உயர்திணைப்பொதுப்பெயர் - நம்பிபெரியன் விடலை சிறியன், சாத்தி பெரியள் என்றொட்டிக்காண்க.

[இவைகளின்முன் வலி யியல்பாம்.]

---

4. வேற்றுமை மூன்றுருபுகளோ டெதுவெவ்வெனுமாய்ச்,
சாற்றும் வினைப்பெயர் தம்மோடிளம்பிறை சார்நுதலாய்,
தேற்றும் வினைதொடர் நற்படியாகிய செப்புமொழிக்
கேற்றமுறும் வலியேயியல்பா மென்பரீதுணரே.

(1) ஒடு ... மகனொடுபோனான் } மூன்றாம்வேற்றுமை யுருபுகள்.
(2) ஓடு ... தந்தையோடுசென்றான் }

(3) அது ... ... ... தனதுகை }
(4) ஆது ... ... ... தனாதுசெவி } ஆறாம்வேற்றுமை யுருபுகள்.
(5) அ ... ... ... தனகைகள் }

(6) எது ... ... எதுபெரிது } வினாப்பெயர்கள்.
(7) என்ன ... ... என்னசெய்தான் }

(8) வினைதொடர் "படி" சொன்னபடி செய்தான்.

[இவைமுன் வலியியல்பாதல் காண்க.]

---

5. வன்றொடர்க் குற்றுயி ரெங்குமிகுமாம் வலிவரினே
அன்றேவினைத்தொகை முன்னிலையேவ லவற்றின்முனும்
மென்றொடரல்வழிக் கண்ணியல்பாம் வலிமேற்றொடர்கள்
என்றுமிருவழியு மியல்பாமென்ப ரேந்திழையே.

(1) வன்றொடர்க்குற்றுகரம்—கொக்குக்கடிது [இருவழியும்மிகும்]
(2) வன்றொடர்க்குற்றுகர வினைத்தொகை—ஈட்டுதனம் [மிகாது]
(3) முன்னிலை யேவன்முற்று—நடகொற்றா
(4) மென்றொடர்க் குற்றுகரம்—குரங்கு கடிது [அல்வழி மிகாது]

[ஏனையதொடர்க ளிருவழியு மியல்பாம்.]

---

6. உம்மை யெழுவாயிகரத்தொடை காரத்துற்றவந்தும்
செம்மையிழிதிணைச் செய்யியவென்னுந் நெறிநிலையு
மம்மகடூமுறையாமா முதலியவாயமுன்னும்
கொம்மை முலைமடமாதே மிகாதென்றுகொள்ளுதியே.

(1) பரணி கார்த்திகை ... எழுவாயில் இயல்பு
(2) யானை குதிரை ... உம்மையில் இயல்பு
(3) பரித்திகுறிது ... } இழிதிணைப்பேரில்
(4) யானை பெரிது ... } ஈ, யும் ஐ, யும் இயல்பு
(5) உண்ணிய சென்றான் செய்யியவென்னும் வினையெச்ச மியல்பு
(6) ஆசிறிது ... ... } அலவழி இயல்பு
(7) மாசிறிது ... ... }

---

7. செப்புறுநல்லுயிரீற்றிடைச் சொல்லொடுசேருரிச்சொல்
தப்பிலுறட்டியதாகும் பொதுவிலைவதன்முனுமே
ஒப்பில்யாழகுறையி னெதிர்மறை யோங்கிமிகும்
வைப்புணரேழின் முனமுமிகாவந்த வல்லினமே

(1) உயிரீற்றிடைச்சொல் ... அம்மகொற்றா [உறழும்]
(2) உயிரீற்றுரிச்சொல் ... குழக்கன்று ,,
(3) நொ ... ... ... நொக்கொற்றா [மிகும்]
(4) து ... ... ... துக்கொற்றா ,,
(5) ய, ர, ழ வீற்றுப்பெயர்... பேய்க்கோள் &c. ,,
(6) ஈறுகெட்டவெதிர்மறை... உண்ணாக்குதிரை ,,
(7) ஏழாம் வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற இடைச்சொல் } அன்றுகண்டான் [இயல்பாகும்.]

8. ஈறுகுறைந்தசுட்டோ டுருபெயரொட்டுப்பண்புங்
கூறுமுருபும்பயனுந் தொகுமிடங்கொண்டுமிகுந்
தேறுமவருமொழியே வினையாமிடஞ்சேருமியைப்
பேறுமிழிதிணைக் கண்ணியல்பாம் வலிமெய்வனையே.

(1) அ + கொற்றன் = அக்கொற்றன்
(2) இ + கொற்றனை = இக்கொற்றனை
(3) உ + கொற்றனை = உக்கொற்றனை } இறுதிகெட்ட முச்சுட்டின்பின் வலிமிகுந்தது.
(4) சாரை + பாம்பு = சாரைப்பாம்பு—மிகும்
(5) கை + களிறு = கைக்களிறு—மிகும்
(6) புலி + தின்றான் = புலிதின்றான்
(7) அடவி + புக்கான் = அடவிபுக்கான் } வருமொழி வினையாய்விடத்து ஈயுமையுமியல்பாம்.

## எதிர்மறை.

வினையானது, உடன்பாடு, எதிர்மறையென விருவகைப்படும், குறிப்புவினைக்கும தன்பிரிவுகளுக்கு மெதிர்மறைவாராது அல், இல், என்னும் பண்படியாய் மாத்திரம் குறிப்புவினை எதிர்மறக்கும். உ-ம்.

(1) உண்ணான் = எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்று.
(2) அல்லன் = பண்படியாய்ப் பிறந்த எதிர்மறை.

எதிர்மறை, அல், இல், ஆவென்னு மிடைநிலைகளாற் குறிக்கப்படும், (உ-ம்)

(1) நடக்கலன். (2) நடந்திலன். (3) நடவான்.

இவற்றுள் ஆகாரவிடைநிலை வருமெழுத்து மெய்யாயிற்கெடாதும், உயிராயிற்கெட்டும்வரும்.

(1) நடவாதான் = நட + வ் + ஆ + த் + ஆன் = வரு மெழுத்து மெய்யா
தனால் 'ஆ' கெடவில்லை.

(2) நடவான்=நட+வ்+ஆ+|ஆன் - வருமெழுத்து உயிரானபோது 'ஆ' கெட்டது.

[எதிர்மறையானது மூன்றுவகைப்படும்.]

(1) முன்மொழிமறை—உண்ணாமற்போயினான்.
(2) பின்மொழிமறை—உண்டிலரான்.
(3) இருமொழிமறை—உண்ணாமல்வரான்.

[தமிழில் எதிர்மறை நான்கு வகையாய்ப் பெறப்படும்.]

| | | |
|---|---|---|
| (1) இடைநிலை | ... | செய்யான். |
| (2) விகுதி | .. | செய்வேனோ. |
| (3) அவ்வியயம் | ... | அமலன். |
| (4) உபசர்க்கம் | ... | நிர்க்குணம். |

பெயரில் உபசர்க்கமும் இடைநிலையு மெதிர்மறுக்கும், வினையில் இடைநிலையும், விகுதியு மெதிர்மறுக்கும், எதிர்மறைக் கிடைநிலையின் றென்பர் தொன்னூல் விளக்கத்தார் அது நன்னூலார் முதலியோர்க் குடன்பாடன்று.

## வியங்கோள்.

| | | | |
|---|---|---|---|
| இது, | (1) ஆசிர்வாதம் | ... | வாழ்க. |
| | (2) சாபம் | ... | கெடுக. |
| | (3) வேண்டிக்கோடல் ... | | வருக. |
| | (4) பிரேரணை | .. | போக. [பிரேரணை=ஏவல்] |

என்னும் நான்கு பொருளிலும் வரும், எதிர்மறையும் வேறு எதிர்மொழியும் வேறு. இங்கே கெடுக வென்பதின் எதிர்மொழி வாழ்க வென்பதாம்.

## வடமொழி உபசர்க்கம்.

(1) பிர-பிரயோகம்.
(2) பரா-பராபவம்.
(3) அப-அபகீர்த்தி.
(4) சம்-சங்கதி.
(5) அநு-அநுபவம்.
(6) அவ-அவமானம்.
(7) நிர்-நிர்க்குணம்.
(8) துர்-துர்க்குணம்.
(9) வி-விகாரம்.
(10) நி-நிவாசம்.
(11) அதி-அதிமதுரம்.
(12) அபி-அபிவிருத்தி.
(13) சு-சுதினம்.
(14) உற்-உற்பாதம்.
(15) பிரதி-பிரதிகூலம்.
(16) பரி-பரிபாகம்.
(17) உப-உபயோகம்.
(18) ஆ-ஆகாரம்.

தமிழ்மொழி உபசர்க்கம்.

| | |
|---|---|
| (1) கை-கைவிடுதல். | (6) ஒல்லை-ஒல்லையுணரப்படும். |
| (2) கால்-கால்யாத்த மாலை. | (7) வல்லை-வல்லைகெடும். |
| (3) தலை-தலைப்பிரிந்த வூன். | (8) புறம்-புறங்கொடுத்தான். |
| (4) மேல்-மேற்கொண்டான், | (9) அகம்-அகப்படுத்தினான். |
| (5) மீ-மீக்கூறு மன்னனிலம். | (10) இலம்-இலம்படு புலவர். |

தமிழிலே உபசர்க்கங்கள் வினைச் சொல்லோடும் வினைப்பெயரோடும் வரும் "சோர்வுபடும்" "பொதுப்படும்" என்னும் பெயரடுத்துவரும் "படுவை யக்கு" என்றும் தொழிற்பெய ரடுத்துவரும் "படு வை ய" என்றும வட மொழி கூறும்.

[வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் பேதம்.]

திணையுணர்த்தும் வினைவிகுதியும் ஆண்பால் பெண்பாலுணர்த்தும் வினை விகுதியும் வடமொழிக் கில்லை. தமிழ் மொழிக்குப் பிரதமாவிபத்தியு மிலிங் கத் திரையமுமில்லை யென்றறிக. இதுவே இரண்டிற்கும் உள்ள வேறுபா

## வடமொழிபுணரியல்.

[வடநடைப் பகுபதங்களா மாறுணர்த்துதும்.]

"வடநடைப்பகுபதம் வரமொழிமுதற்கண்
இ ஏ யென ஐ ஔவும் உ ஓ வென ஔவும்
அவ்வென ஆவுமாம் ஐயிறினீறுபோய்
எயனீட்டீஉன்ற வெச்சமாமுளபிற."

பகுதியாகநிற்கும் பகாப்பதமுதற்கண், உயிராயினும், உயிர்மெய்யாயி னும் வரின், நிலைமொழி, இ. ஏ. என்னுமிரண்டும் ஐயாகத்திரிந்து பகுபதங் களாம்.

| | | |
|---|---|---|
| (1) | இந்திரனிருக்குங்குணதிசை | ... ஐந்திரி. |
| (2) | கிரியிலுள்ளன | ... கைரிகம். |
| (3) | சிலையாலாயமலை | ... சைலம். |
| (4) | மிதிலேயுட்பிறந்தாள் | ... மைதிலி. |
| (5) | நியாயநூலுணர்ந்தோன் | ... நையாயிகன் |
| (6) | வியாகரணமுணர்ந்தோன் | ... வையாகரணன். |

[இ ஔவாகத்திரியும்.]

(1) இரியிற்பிறந்தாள் ... கௌரி.

[ஏ ஐயாகத்திரிந்துவரும்,]

(1) வேதவழி நின்றொழுகுவார் ... வைதீகர்.

ஊவும் ஓவும் ஔவாகத்திரியும்.

(1) சூரன் என்னுஞ் சூரியன் மகன் சனி ... சௌரி
(2) கோசலையிடத்துப் பிறந்தாள் ... கௌசலை

[ஐயாகத்திரிவன அயியென்றும் ஔவாகத்திரிவன அவுஎன்றும் முடியும்.] உ-ம். கயிரிகம், சயிலம் என்றும் கவுரி, சவுரி என்றும்வரும்.

[அ, ஆவாகத்திரியும்]

(1) அதிதியின்மக்கள் ... ஆதித்தர்.
(2) தசரதன்மகனிராமன் ... தாசரதி.
(3) சநகன்மகளாஞ் சீதை ... சாநகி.
(4) தனுவின்மக்களிராக்கதர் ... தானவர்.
(5) சகரன்மக்கடோண்டியகடல் ... சாகரம்.

[ஐயீற்றுப் பகாப்பதங்களில் ஐயொழித்து விருதியாக எயன் என்று முடிந்தால் ஈன்றமகனென்று காட்டும் பகுபதங்களாம்.]

(1) கார்த்திகையின்மகன் ... கார்த்திகேயன்.
(2) தாரையின்மகன் ... தாரேயன்.
(3) கங்கையின் மகன் ... காங்கேயன்.

சொல்.

சொல்லானது சனுக்கிரமென்றுஞ் சங்கதமென்றும் அவப்பிரபஞ்சனமென்றும், பாகதமென்றும் நான்குவகைப்படும் இவற்றுள் முந்திய மொழியிரண்டுந் தேவர்மொழியென்றும், அவப்பிரபஞ்சன மிழிசனர் மொழியென்றும் பாகதமெல்லா நாட்டாலு மெல்லார் தம்மாலும் வழங்கு மொழியென்றுஞ் சொல்லப்படும். பாகதம், தற்பவம், தற்சமம், தேசிகமென முக்கூறாகி வழங்கும் ஆரியத்திற்குரிய சிறப்பெழுத்தானும், பொதுவுஞ் சிறப்புமாகிய வீரெழுத்தானும், வடமொழி தமிழிற்சிதைந்துவருவது தற்பவமெனப்படும். (உ-ம்) சுகி, போகி, சுத்தி, அரன்.

ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகிய ஆரியமொழி தமிழில் வழங்குவன தற்சமமெனப்படும். (உ-ம்) அமலம், கமலம், மலையம்.

அன்றிய மாரியவெழுத்துக்கள் சிதைந்தும் தமிழில் வந்துவழங்கும்
[ஆ - ஐயாயும் ஈ - இயாயும், மொழிக்கிடையில் ஜ - யகரமாயுந் திரியும்.]
(1) மாலா=மாலை. (2) கௌரீ=கௌரி. (3) புஜம்=புயம்.

[ஷ, முதலில் ச - ஆகவும், இடையிலுங் கடையிலும் ட - ஆகவும் திரியும்.]
(1) ஷண்முகம்=சண்முகம். (2) விஷம்=விடம். (3) பாஷை=பாடை.

[ஸ, முதலிலுங் கடையிலும் ச - ஆகவும், இடையிற் சகரமாயேனுந், தகரமாயேனுந் திரிந்துவரும்.]

(1) ஸபை=சபை. (3) வாஸம்=வாசம்.
(2) அஸி=அசி. (4) ஆஸநம்=ஆதநம்.

[க்ஷ, முதலிற் ககரமாயும், இடையிலிரு ககரமாயுந் திரியும்.]
(1) க்ஷீரம்=கீரம். (2) அக்ஷம்=அக்கம்.

[ய, முன்னின்ற மெய்களோடு இணைந்துவரின் முன்னின்ற மெய் இகரம் பெறும். இகரம்பெறுங்காற் சிலவிடத்து யகரம் கெடும்.]
(1) த்யாகம் = தியாகம் — இகரம்பெற்றது.
(2) வியகாரம் = விவகாரம் — ய, கெட்டது.

[ர, மொழிமுதலில் தன்முன்னின்ற மெயோடிணையுங்கால், முன்னின்ற மெய் இகரம்பெறும். சிலவிடத்து உகரம்பெறும்.]
(1) க்ரமம்=கிரமம். (2) க்ரோதம்=குரோதம்.

[ர, இடையில் அவ்வாறிணைந்துவரின், முன்னின்றமெய் இரட்டி இகரம் பெறும்.]
(1) வக்கிரம் (2) வச்சிரம்.

[ர, பின்னின்ற மெய்யோ டிணைந்துவரின், உகரம்பெற்று அம்மெய் இரட்டிக்கும்.]
(1) அருக்கன் (2) அருச்சனை.

[ல, முதலில் முன்னின்ன மெய்யோடிணைந்துவரின், முன்னின்றமெய் இகரம்பெறும். சிலவிடத்து உகரம்பெறும்.]
(1) கிலேசம். (2) சுலோகம்.

# ௩. அதிகாரம்.

## பரியாய நாமங்கள் - பிரதிநாமங்கள்.

1 தகுதி
2 யோக்கியதை

—

1 உலகவழக்கு
2 லௌகிகப் பிரக்கிரியை

—

1 வினைமுதல்
2 செய்பவன்
3 கர்த்தா
4 எழுவாய்

—

1 கருவி
2 காரணம்
3 ஏது

—

1 கெடுதல்
2 லோபம்

—

1 பெரும்பான்மை
2 பிராயிகம்

—

1 மேற்கோள்
2 பிரதிக்கினை

—

1 இறந்தகாலம்
2 பூதகாலம்

—

1 விகற்பம்
2 உறழ்ச்சி

—

1 தன்மை
2 உத்தமபுருடன்

—

1 ஆண்பால்
2 புல்லிங்கம்

—

1 பிராசீனர்
2 முன்னோர்

—

1 அலப்பிரதானம்
2 தலைமையின்மை

—

1 மயக்கம
2 சையுத்தம்

—

1 அவாய்நிலை
2 ஆகாங்கிஷை ?

—

1 செய்யுள்வழக்கு
2 வைதிகப்பிரக்கிரியை

—

1 செய்பொருள்
2 செயப்படுபொருள்
3 கன்மகம்
4 கன்மம்
5 கருமம்

—

1 திரிபு
2 ஆதேசம்

—

1 அளபெடை
2 புலுதம்

—

1 பிரேரணை
2 ஏவல்

—

1 அடைமொழி
2 விசேடியம்

—

1 நிகழ்வு
2 வர்த்தமானம்

—

1 உடன்பாட்டுவினை
2 விதிவினை

—

1 முன்னிலை
2 மத்திமபுருடன்

—

1 பெண்பால்
2 திரிலிங்கம்

—

1 ஆதுனிகர்
2 பின்னோர்

—

1 நெடில்
2 தீர்க்கம்

—

1 உடனிகழ்ச்சி
2 ஒருவினை

—

1 இயற்கை
2 சகசம்

—

1 செயற்கை
2 ஆகந்துகம்

—

1 குறில்
2 இரச்சுவம்

—

1 புணர்ச்சி
2 சையோகம்

—

1 சேடமிலேசம்
2 உம்மைத்தொகை

—

1 அளவு
2 பரிமாணம்

—

1 வினா
2 உசா
3 கடா
4 கேள்வி

—

1 திரட்டு
2 சங்கீர்த்தனம்

—

1 இடுகுறி
2 ரூடி

—

1 ஒழுக்கம்
2 ஆசாரம்

—

1 உபமானம்
2 அவர்ணியம்

—

உபமேயம்
வர்ணியம்

1 தாது
2 பகுதி

—

1 சம்பந்தப்பொருள்
2 சேஷார்த்தம்

—

1 விபத்தி
2 வேற்றுமை

—

1 கோடற்பொருள்
2 கோளிப்பொருள்

—

1 தொகை
2 சமாசம்

—

1 மெய்
2 அல்

—

1 நிறை
2 உன்மானம்

—

1 செப்பு
2 உத்தரம்
3 விடை
4 இறை

—

1 பகாப்பதம்
2 ரூடம்

—

1 காரணக்குறி
2 யோகம்

—

1 வழக்கு
2 வியவகாரம்

—

1 கலத்தல்
2 சங்கிரணம்

1 ஆகமம்
2 மிகுதல்

—

1 வினை
2 கிரியாபதம்

—

1 பெயரெச்சம்
2 சந்திராந்தம்

—

1 வினையெச்சம்
2 துவாந்தம்

1 அ
2

1 உயிர்
2 அச்சு

—

1 கருவி
2 கரணம்

—

1 அண்மை
2 ஆசத்தி

—

1 விகுதி
2 பிரத்தியம்

—

1 ஆதிகாரணம்
2 முதற்காரணம்
3 சமவாயிகாரணம்

—

1 அடை
2 விசேஷணம்
3 விசேடணம்

—

1 சிறுபான்மை
2 ஏகதேசம்

—

1 குணம்
2 பண்பு

—

1 குணி
2 பண்பி

—

1 எதிர்வு
2 பவுடியம்

—

1 எதிர்மறைவினை
2 மறைவினை

1 படர்க்கை
2 பிரதமபுருடன்

—

1 அலிப்பால்
2 நபுஞ்சலிங்கம்

—

1 பிரதானம்
2 தலைமை

—

1 எண்
2 சங்கியை

—

1 சொல்
2 பதம்
3 மொழி

—

1 பகுபதம்
2 யௌகிகம்
3 தத்திதம்

—

1 காரணவிடுகுறி
2 யோகரூடி

—

1 தெண்டம்
2 பிராயச்சித்தம்

—

1 மோனை
2 அறு

—

1 விரவுத்திணை
2 பொதுத்திணை

—

1 பயனிலை
2 கிரியை

—

1 பதிகம்
2 பாயிரம்
3 நூன்முகம்
4 முகவுரை

1 இலக்கணம
2 இலட்சணம்

1 ஆக்கியோன்
2 கர்த்தா

## அரும்பதவிளக்கம்.

வேற்றுமை, தன்னை யேற்ற பெயரினதுபொருளை வேறுபடுத்தல். இலக்கணை, பெயராக வினையாக நிற்குஞ் சொற்கள் தத்தம்பொருளை யுணர்த்தாது சம்பந்தப் பொருளையும், தாற்பரியப் பொருளையும், அன்னுவயப் பொருளையு மறிவிப்பது. ஆரோகணம், ஏறுதல். அவரோகணம், இறங்குதல். பிரேரித்தல், ஏவுதல். பிரத்தியாகரித்தல், கம்முதனவ்வீறாய் நின்றசொற்களை யடக்கிக் (கன) என்றாற்போல்வது. புரோவாதம், ஒருபொருளை முன்னர் எடுத்துக் கூறுவது. அநுவாதம், ஒருபொருளை யொருநிமித்தத்தாற் பின்னருமெடுத்துக் கூறுவது. ஆகாரியரோபம், புத்திபூர்வகமாகச் சிலையைத் தெய்வமாய்க் கொண்டு வழிபடுதலும் பிறனொருவனைத் தந்தையாய்க்கொண்டு அன்னச்சிராத்தம் புசிப்பிப்பதும் போல்வது. முதற்காரணம், செயப்படு பொருளோடு ஒற்றுமையுடையது. மண்ணாற்குடத்தை வனைந்தான் என்புழிமண் என்னும் முதற்காரணம் குடமென்னுஞ்செயப்படுபொருளோடு ஒற்றுமையுடையதாதல் காண்க. துணைக்காரணம், முதற்காரணத்திற்குத் துணையாய் அது காரியப்படுமளவு முடனிகழ்வது. திரிகையாற் குடத்தை வனைந்தானென்புழி, திரிகையானது முதற்காரணத்திற்குத் துணையாய் அது குடமாகக் கரியப்படுமளவு முடனிகழ்ந்து நின்றமை காண்க. நிமித்தகாரணம், துணைக்காரணங்களைப் பிரயோகித்துச் செயப்படுபொருளைக் காரியப்படுத்தும் வினைமுதலாம். குடம்வனைந்தானென்புழி தண்ட சக்கரங்களென்னுந் துணைக்கருவிகளை முதற்காரணத்திலுபயோகித்து அதைக்காரியப்படுத்தினோன் நிமித்தகாரணமாகிய குசவனாம். வினை, பெயரினது புடைபெயர்ச்சி அல்லது தொழில் நிகழ்ச்சியாம். கருவி, வினைமுதற்றொழிற்பயனைச் செயப்படுபொருளிற்சேர்ப்பது. வினைமுதற்பொருள், ஒருதொழில்நிகழ்ச்சியிலேதன்வயத்தாய்க் குறிக்கப்படும் பொருளாம். செயப்படுபொருள், வினைமுதற்றொழிற்பயனுறுவது. இடக்கரடக்கல், நன்மக்களிடத்தே சொல்லத்தகாததை மறைத்துச் சொல்வது மலங்கழீஇ வருதுமென்பதைக் கால்கழீஇவருது மென்றாற்போல்வது. மங்கலம், மங்கலமில்லாததை யொழித்து மங்கலமாய்க்கூறுவது. குழூஉக்குறி ஒவ்வொரு கூட்டத்தார் யாதேனும் ஒரு காரணம் பற்றி யொருபொருளினது சொற்குறியை யொழித்து வேறொரு சொற்குறியாற் சொல்வது. வேடர் என்னுமொரு சாரார்கள்ளைச் சொல்விளம்பி யென்றாற்போல்வன. மரூஉமொழி, தொன்றுதொட்டு வருதலின்றி இடையிலே சிலவெழுத்துக்

டுஞ், சிலவெழுத்துத்திரிந்துந், தோன்றியு, மிலக்கணத்திற்சிதைந்துதானே நவிவழங்குவது. இலக்கணமுடையது, இலக்கணநெறியால்வருவது. நிலம் என்றாற்போல்வன. இலக்கணப்போலி, இலக்கண மில்லையாயினும் இலக்கணம் போன்றுவருவது. இல்முன் என்றதை முன்றில் என்றாற் போல்வன. காரகம், ஒன்றைச்செய்து முடித்தலிற் கூடியபலவும் பொதுப்பெயராற் காரகமெனப்படும். செவ்வெண், எண்ணிடைச்சொல் தொக்கு நிற்கப்பெறுவது. தற்கிழமைப்பொருள், தன்னோடு ஒற்றுமையுடையது. பிறிதின்கிழமைப்பொருள், தன்னின்வேறாயபொருள். பத்தியம், பாவைந்தும் பாவினம்மூன்றுங்குமாகப் பதினேழுவகைச் செய்யுளும் பொதுப்பெயரால் வடமொழியிற் பத்தியமென்று வழங்கும். சத்தியம், இலக்கணஞ்சிதையினு மிலக்கணப்பாவினடையோடொப்பவருவது. கொன்றைவேந்தன் முதலாயின. ஆசுகவி, மற்றொருவன் குறித்துப் பாடுகவென்றவுடனே பாடுவது. மதுரகவி, பொருட்பொலிவு, சந்தவின்பங்கள் தோன்றப்பாடுவது. சித்திரகவி, சித்திரந்தீட்டினாற்போலப் பல அணிகளுந் தோன்றும்படி, செய்யுளில் அமைத்துப்பாடுவது. வித்தாரகவி, பலகவிகளினிலக்கணங்களை பொரு சிறிதுங்குன்றாது விரித்துப்பாடுவது. கவி, ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், என்னும் நாற்கவி பாடுவோன். கமகன், செம்பொருணடையின் எப்பொருளுங் குற்றமின்றி யுரைப்போன். வாதி, எதுவும் மேற்கோளுமெடுத்துக் காட்டித்தன் கோணிறீஇப்பிறன்கோண்மறுப்போன். வாக்கி, அறம், பொருள், இன்பம், வீடென்னுந்திறங்கள், கேட்போர் வேட்ப இனிதாய்க்கூறு மாற்றலுடையான். வாயுறைவாழ்த்து, வேம்புங் கடுவும்போல் வனவாகிய, வெஞ்சொற்கண் முன்னர்த் தாங்கக் கூடாவாயினும், பின்னர்ப் பெரிதும் பயன்றருமென, மெய்ப்பொருளுற வெண்பாமுதலு மாசிரியமிறுதியுமாய்க்கூறுவது. புறநிலைவாழ்த்து, வழிபடுதெய்வம்நிற்புறங்காப்ப, பழிதீர, செல்வமோடொருகாலைக் கொருகாற்சிறந்து பொலிவாயென வெண்பாமுதலு மாசிரிய மிறுதியுமாகப் பாடுவது. மாலைமாற்று, மீளவாசித்தாலு மதுவேவரப்பாடுவது. சுழிகுளம், நெட்டெழுத்தியன்ற நால்வரியாக வெழுதிச்சுழிந்து வாசிக்கச்செய்வது. ஏகபாதம், நான்கடியுமோர் அடிபோல் வரப்பாடி அடிக்தோறும் வேறுபொருள் விளக்குவது. தூசங்கொளல், ஒருவன் ஒருவெண்பாச்சொன்னால், அதனீறே யீறாக வதன் முதலே முதலாக மற்றொருவெண்பாப் பாடுவது, ஞாற்றி, முந்துறக்கொடுத்த வெழுத்துக் கீறுபாடிப் பின்னர்க்கொடுத்த வெழுத்திற் கீற்றயல் பாடி, அதன்பின்புகொடுத்த வெழுத்திற்கிரண்டா மடிபாடிய தன்பின் கொடுத்த

வெழுத்திற் பாடிமுடிப்பது. கோமூத்திரியாவது, இரண்டுவரியாக வெழுதிக் கோமூத்திரம் விட்டது தோன்றும் வளைவுபோல் வாசிக்கப்பாடுவது. ஒற்றுப்பெயர்த்தல், ஒருமொழியைப்பாடி, நிறுத்திவைத்துப் பிறிதொருபொருள் பாடுவது. ஒருபொருட்பாட்டு, ஒன்றனையே சிறப்பித்துப் பாடுவது. வினாவுத்தரம், வினாவிற்கு விடையளிக்கப்பாடுவது. விகற்பநடை, வேறுபட்ட நடையுடைத்தாகப்பாடுவது. வருக்கம், மொழிக்குமுதலாம் வருக்கவெழுத்தினுக்கு ஒவ்வோர், செய்யுட்கூறுவது. தாரணைப்பகுதி, சதுரங்கதாரணையோடும், பாடுதல். ஆனந்தம், ஆனந்தம் பயக்கச் செய்யுட்பாடுவது. சல்லாபம், வினாவும் விடையுங் கூடிவருவது.

## மொழி வேற்றுமை.

### 1. இடைநிலை. இடைச்சொல்.

ஒருமொழி, தொடர்மொழி, இருமொழிக்கண்ணு மிடைவிராயவற்றைப் பொதுவகையா லிடைநிலையென்ப மேலு மொருமொழிக் கிடையே பற்றுசு போற் பதப்பூர்த்திப் பொருட்டாய்ச் சாரியை யியலினும் அஃதொழித் தொழிந்தகாலக் காட்டுகின்றனவும் காட்டாதனவுமாகிய விடைநிலைகளை மாத்திரமிடைநிலை யென்பது பண்டையோர் வழக்கென்க. இடைநிலைகள் தம் மாத்திரையில் நியதிப் பொருளுடையன. இடைச்சொற் களோவது போலாது, மொழிமுதல் இடை, கடை, யென்னுமிடங்களில் வருவதுமன்றிச் சில விடங்களில் ஒன்று வேறொன்றாய்த் திரிந்தும், அதுவுமன்றிப் பெயர், வினை, உரிகளாயும் பிறழுமென்ப. இடைநிலைகள் சொற்களாகா விடினுஞ் சிறுபான்மை சொல்லின் தன்மை எய்துமாகையாற் சொல் என உபசரித்தார். அங்ஙனமாயினுங் காலவிடை நிலைகளைச் சொல் என்பது பொருந்தாதென்க-

### 2. இலக்கணை, ஆகுபெயர்.

பெயரும் வினையுமாய் நிற்குஞ் சொற்கள் தத்தம் பொருள்களையன்றி அந்நுவயம், சம்பந்தம், தாற்பரிய, மென்னும் பொருளவாய் அறிவுறுத்தற் கண்ணெய்தும். ஆகுபெயரோ அற்றன்று. ஒருமொழி யினியற்பொருட்கு அதனை முடிக்கவரும் மொழிப் பொருளோடு பொருட் பொருத்தமில்லாத விடத்து ஆக்கப்பொருள் கொள்ளப்படும். பெயரும் வினையு மிலக்கணையாய் வரும் ஆகுபெயரில் பெயர்மாத்திரமே வரப்பெறும். இனி இரண்டுஞ் சம்மந்தப் பொரு ளுணர்த்துவதி லொக்குமா லெனின், நன்று சொன்னாய், இலக்கணை சம்பந்தத்தையும் ஆகுபெயர், சம்பந்தம் பற்றிய பிறிதொன்றையு முணர்த்தும், “மயில்காள் சொற்றிடுந் தோன்றலுக்கே,” யென்புழி “மயில்காள் சொற்

றிடும்" என்பது அந்நுவயமாத்திரையையும் "புளிதின்றான்" என்பதிற் பழஞ் சம்பந்தக் குறிப்பையும், "எரியுமிழ் வேலான்" என்பது தாற்பரியப் பொருளையு மறிவித்து நின்றன.

### 3. செயற்கைப் பொருள், செய்பொருள்.

கற்றவர் கூட்டத்தாற் சாத்தன் குணனல்லன் என்புழி குணமானது முன்னியற்கையாய்த் தோன்றாது கூட்டமென்னுங் காரணத்தாற் றோன்றியவாறு காண்க. இனி வினைமுதற் றொழிற்பயனுறுவது செய்பொருளாம்.

### 4. பதம், தாது, பகுதி.

பதமாவது ஓரெழுத்தாலாயினும் இரண்டு முதலிய பலவெழுத்துக்களாலாயினும் ஆக்கப்பட்டு தானே தனித்தும் பிறமொழிகளோடு சென்றியைந்தும் பொருளையுணர்த்துஞ் சொல்லாம். சிசுவானது கருவானகாலத்தின் முண்டமாத்திரையாயிருந்து நாளடைவிற் சர்வாங்கமும பெற்றுப் பூரணமாதல் போலத் தாது முதனிலைமாத்திரையா யுறுப்புகளை யொழித்துப் பதப்பூர்த்தியின்றி நிற்கும் நிலையாம். பகுதி என்பது முண்டத்தனையாய் நில்லாது சில வுறுப்புகளை மாத்திரஞ் சேர்ந்த நிலையாம்.

### 5. உரு, உருபு.

கட்புலனுக்கு விடயமாகிய பொருளை உருவென்றும் அதின் காரியமாகிய தோற்றத்தையுமுருவென்றிருவகைப் படுத்துவர் "உருப்பட்டான்" "உருப்போனது" "உருவழிந்தது" "என்பதுபொருளையும்" "உருமறைத்தான் "குற்றியோமகனோவிவ்வுரு" என்றது தோற்றத்தையு முணர்த்தியவாறு காண்க. இனி உருவென்பது, ஒருபொருளானது செவ்வே தோன்றுதற் குபகாரமா யுடனிகழுமுறுப்பு. அல்லது வேந்து அரசு என்றாற்போல் அப்பொருளையுரு வாக்குந்தன்மையாம்.

### 6. குணத்தொகை, உவமைத்தொகை.

குணங்களின் கூட்டமே குணியாம் குணகுணிக ளொன்றிற்கொன்று சம்பந்தமுடையன, குணமில் வழிகுணியுங் குணியில் வழிகுணமுமில்லையாம். ஆதபத்திரமானது விரிந்தவழி வட்டமாதலும் ஒடுங்கியவழி தண்டாகாரமாதலும் போலக்குணி விரிந்தவழிகுணம் விரிந்தும் ஒடுங்கியவழி குறைந்தும் நிற்குமென்க. கருங்குவளை என்புழி பலகுணவீட்டமாகிய குவளை யென்னும் பொருளிலிருந்து கருமையென்னு மொருகுணம் பிரிந்து குவளையென்பதை வேறுபடுக்கும். தொழிலாகக் குணமாகப் பயனாக வேறுபாடுகள் அநேகமாம். அவற்றுள் குணவேறுபாடொன்றே விசேடியமாய் நிற்குமென்பதை

யுணராது சேனாவரையர் மயங்கிப் பொதுமையில் வேறுபடுக்கின்றவெல்லாம் விசேடியமென்றும் குண குணி யொன்றையொன்று விசேடிக்குமென்றுங் கூறியதென்னை? உவமைத்தொகையில் உவமான வுபமேயங்களிலொன்று பிரிக்கவழியு மற்றதிற் கிடையூறின்றெனக.

7. அன்மை, இன்மை.

அன்மை என்பது உண்மைக்கு மறுதலை, இன்மை யொருபோது மில்லாமை.

'உரை அன்மை காண்க' 'இருளின்மைகாண்க'

இதில், அன்மை மறுதலையையும் இன்மை ஒருபோது மில்லாமையையு முணர்த்தின.

8. உரி, பண்பு, குறிப்புப் பெயரெச்சம்.

பெயர்க்கும் வினைக்கு முரிமைபூண்டு நிற்றலானும், பெரும்பான்மை செய்யுள் வழக்கினும், சிறுபான்மை உலகவழக்கினு முரிமைபூண்டு நிற்றலானும் இன்னுமிசை குறிப்புப் பண்பென்னும் பொருள வாய்நிற்றலானும் உரியெனப் படுமென்று பலவாறு கூறுவர். இவ்வியல்பாய் வருமுரிச் சொற்கள், பெயருரி யென்றும் வினையுரி யென்று மிருவகைப் படும். பெயருரியாய் வரும்போது பண்பென்றும், வினையுரியாய் நிற்கும் போது ஆரோபனமென்றுஞ் சொல்லப்படும். பண்புப் பெயர்கள் வேற்றுமையேற்கும் உரிச்சொற்களோ அப்படியேலா. இவ்வுரிச் சொற்கள் பெயர், வினை, போன்று, நிற்பினும், பெயரையும், வினையையும்போ லீறுபற்றிப் பொருளுணர்த்தா. இன்னு மிவ்வுரிச் சொற்கள் தொழிற் பண்பை யுணர்த்தும் போது வினையுரியென்றும், வினைமுதலிய காரணங்களாற் புடைபெயர்ந்து தொழிற் பண்பின் காரியமாய்ப் பொருட்புடை பெயர்சியை யுணர்த்து மிடத்து வினைச் சொற்க ளென்றும் பெயர்பெறும். மேலு மிவ்வுரிச் சொற்களானவை வினையையும், பெயரையும் போல நிற்பதன்றியும், வினை, பெயர்களுக்கு, முதனிலைகளாயும் நிற்கும். அன்றியுங் குறிப்புப் பெயரெச்சத்திற்கும் உரிச்சொல்லுக்கும் வித்தியாச மென்னையெனின், முன்னையது பொருள், இடம், காலம், சினைகுணம், தொழில் என்னு மடிகளாய்ப் பிறக்கும். பின்னையது தொழிலொழிந்த மற்றவைகளை யேலாதெனக.

9. அன்மொழித்தொகை, ஆகுபெயர்.

அல்லாதமொழி தொக்கிவருவன அன்மொழித் தொகையாம். ஒரு மொழியினியற்பொருள் அத்னைமுடிக்கவரும் மொழிப்பொருளோடு பொருட்

பொருத்தமில்லாதவிடத்து அம்மொழியில் ஆக்கப்பொருள் கொள்ளப்படும், அதுவே யாகுபெயரெனப்படும். அன்மொழியிற் பொருள் இடையிட்டு மாகுபெயரிற்றொன்று தொட்டும், வழங்கும். அன்மொழித்தொகையிற் பொருளானது பாடுவோனது வியப்புமுதலிய காரணங்களினாற் கொள்ளப்படும். ஆகுபெயரில், வரும் பொருளானது நியதியாயுள்ளது. முன்னையதில் இருமொழிதொடர்ந்து வரும் பின்னையதில் ஒருமொழிக்கண்ணே பொருட்டோன்றும். அன்மொழித்தொகையியைபு வேண்டாதுபிறபொருளுணர்த்தும் ஆகுபெயரோ ஒரியைபு பற்றிப் பிறிதொன்றை யுணர்த்தும். இனி இருபெயரொட்டாகுபெயர் இரண்டுமொழிதொடரப் பெற்று அன்மொழித்தொகை போல்வருமன்றோவெனின், அன்மொழித்தொகைபோல் இருமொழியுந்தனித் தனி பிறபொருளுணர்த்தாது இருமொழியு மொருபொருளையே யொட்டி நிற்கும். "மக்கட்சுட்டு" என்பதைச் சேனாவரையர் அன்மொழித் தொகை யென்றும், நச்சினார்க்கினியர் ஆகுபெயரென்றுங் கல்லாடர்பின் மொழியாகு பெயரென்றுஞ், சிவஞானமுனிவர், இருபெயரொட்டாகுபெயரென்றும் பலவாறு கூறுவர், ஆயின் அவைகளின் ஒற்றுமை, வேற்றுமை, நயங்கள். [Part - II.] னிற் கூறப்படும்.

## 10. பெயர், தொழிற்பெயர், வினையாலணையும்பெயர்.

பெயர்ப்பகுபதம் பகுதி விகுதி யிரண்டாலும் பொருட் சிறப்புடைத்தாய்க் காலங் கொள்ளாது வேற்றுமை யுருபேற்றுவரும். வினையடியாய்த் தோன்றிக் காலத்தைக் காட்டாது வேற்றுமை யேற்பின் தொழிற்பெயராம். முற்றுப்போன் நின்று, காலத்தை வெளிப்படையாய் அல்லது குறிப்பாய்க் காட்டுதலோடு வேற்றுமை யேற்றுவரின், வினையால் அணையும் பெயராம். வினையாலணையும் பெயர்காலம் காட்டும். தொழிற்பெயரோ காலம் காட்டாது. இதுவே யிரண்டற்கும் வேறுபாடாம். சிறுபான்மை, மைவிகுதியுந் தவ்விகுதியு மேற்கும் பெயர்கள் மாத்திரம் காலம் காட்டும். உ-ம்.

மரம்—பெயர், நடையன்—தொழிற்பெயர், நடந்தான்—வினையாலணையும் பெயர்.

## 11. முதற்பெயர், பொருட்பெயர்.

ஒரு சினையின் முதலாய் நிற்பது முதற் பெயராம். பொன்னாதியாம் பொருட்களைப் பகுதியா யுடையது பொருட்பெயராம். பல உறுப்புகள் அல்லது சினைகளை யடக்கித்தானே யொருமுதலாய் நிற்பதால், உடம்பு முதற்பெயரெனப் படும், பொன்னன் நிலத்தன் என்பன முறையே பொருட்பெயர், இடப் பெயரென்று சொல்லப்படும்.

12. பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, குறிப்பு வினைப்பெயரெச்சம்,

ஆகிய வென்னும் உருபுகெட்டு நிற்கப் பண்புப் பெயரோடு பண்பிப்பெயர் தொடர்ந்து நிற்பது பண்புத்தொகையாம். ஆகிய வென்னும் பண்புருபு கெட்டு நிற்கப் பொதுப்பெயரோடு சிறப்புப் பெயராயினும், சிறப்புப்பெயரோடு பொதுப்பெயராயினும் ஒரு பொருண்மேல் வந்து தொடர்வது இருபெயரொட்டுப் பண்புத் தொகையாம். குறிப்பாய்க் காலங் காட்டுதலோடு அகரவிகுதியைப் பெற்றுப் பெயரை யொழித்து நிற்பது குறிப்பு வினைப் பெயரெச்சமாம். உ - ம்.

கருங்குதிரை—பண்புத்தொகை, ஆயன் சாத்தான்—இருபெயர், ஒட்டுப் பண்புத்தொகை, கரியகுதிரை—குறிப்பு வினைப்பெய ரெச்சம்.

13. தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று.

தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட்சிறப்புடைத்தாயக் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமை யுருபேலாதுவரும். குறிப்புவினைமுற்றுப் பகுபதம், பகுதியிற் பொருட் சிறப்புடைத்தாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமை யுருபேலாது வரும்.

இனித்தெரிநிலை வினையாலணையும் பெயரும் குறிப்பு வினையாலணையும் பெயரும் முற்றுகளாய் நின்றுமுறையே காலத்தை வெளிப்படையாயும் குறிப்பாயுங்காட்டி வேற்றுமை யேற்றுவருமெனக.

14. எழுவாய்த்தொடர். வினைமுற்றுத்தொடர்.

எழுவாய்க்குவினை முற்றைப் பயனிலையாய் கொள்ளுமிடத்து வினைமுதல் விசேடணமாக, வினை முக்கியப்பொருளாம். வினைமுற்றிற்குப் பெயரைப் பயனிலையாய்க் கொள்ளுமிடத்து, வினைவிசேடணமாக வினைமுதன் முக்கியப்பொருளாம். உ - ம்.

சாத்தன்வந்தான், வந்தான்சாத்தன்.

15. தொழிலாகுபெயர், தொழிற்பெயர்.

தொழிலாலுணர்த்தப்படு மியற்பொருளோடு பின்வரு மொழியானது பொருட்பொருத்தமின்றி நின்று அம்மொழியில் அத்தொழிலாலாக்கப்படு மின்னொருபொருளோ டிணங்குமாயின் தொழிலாகுபெயராம் அப்படியன்றி இயற்பொருண் மாத்திரையாய் நிற்கின் தொழிற்பெயராம். உ-ம்.

வற்றல் உண்பான். நீர்வற்றல்செய்யும்,

### 16. வேற்றுமையுருபு, சாரியை, எழுத்துப்பேறு.

தம்மையேற்ற பெயரினது பொருளை வேறுபடுத்தலே வேற்றுமை. ஒரு சொல்லானது தனக்கோர் பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்கும்போது சாரியையெனப்படும். மொழியினிடையில் நின்று சந்திகாரணமாய்த் தோன்றாது அம்மொழியானது பூரணப்பெற்று நடைபெறச்செய்வது எழுத்துப்பேறும். உ-ம்.

கல்வியிற்பெரியன் கம்பன் (இல்) வேற்றுமை உருபு.
வண்டின்கால், ... (இன்) சாரியை.
நடவாதான் ... (த்) எழுத்துப்பேறு.

எழுத்துப்பேறு சாரியைபோ லிறுதிக்கண் வராது.

### 17. அசைநிலை, இசைநிறை, உரையசை.

அசைநிலையென்பது வேறுபொரு ளுணர்த்தாது பெயர்ச்சொல்லோடும் வினைச் சொல்லோடும் சார்த்தப்பட்டு நிற்பது. இசைநிறையென்பது வேறு பொரு ளுணர்த்தாது செய்யுளில் ஓசைநிறைத்து நிற்பது. உரை அசையென்பது கட்டுரைக் கண்வரும் அசைநிலை.

### 18. சந்தி, விகாரம், விகற்பம்.

தோன்றல் முதலிய புணர்ச்சி விகாரங்களே சந்தியாம். வலித்தல் மெலித்தல் நீட்டல், குறுக்கல், நிலைமாறுதல் முதலியன விகாரமாம். நியதியின்றி யொருகால் லியல்பாயும், ஒருகால் மிகுந்தும் வருவது விகற்பமாம்.

### 19. தற்பவம், தற்சமம்.

ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொது வெழுத்தாலாகி விகாரமுறாமற் றமிழில் வந்துவழங்குந் தமிழ்மொழிகள், தற்சமமெனப் படும். ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்தானும் பொதுவுஞ் சிறப்புமாகிய வீரெழுத்தானுமாகித்திரிதல் முதலாகிய விகாரங்களைப் பெற்றுத் தமிழில்வந்து வழங்கும் வடமொழிகள் தற்பவ மொழிகளெனப் படும்.

### 20. எதிர்மறைவினை, பண்படியான எதிர்மறை.

இல், அல், ஆ, வென்னு மிடைநிலைகளைப் பெற்றுவருவம்வினை எதிர்மறைவினையாம். அல், இல் என்னும் பண்படி யாய்த் தோன்றி வருவன பண்படியாய்ப் பிறந்த எதிர்மறையாம். உ-ம்.

நடவான்—எதிர்மறைவினை, அல்லன்—பண்படியாய்ப் பிறந்த எதிர்மறை.

21. இன்னிசை அளபெடை. சொல்லிசை அளபெடை.

இன்னிசை நிறைக்க வருமளபெடையாவது குற்றெழுத்து நெட்டெழுத்தாய் நீண்டு அலகிடும் பொருட்டும் ஓசையை நிறைதற் பொருட்டு மளபெடுப்பது. சொல்லிசை நிறைக்கவருமளபெடையாவது, பெயர்ச்சொல்வினைச் சொல்லி னிசையை நிறைதற் பொருட்டு அளபெடுப்பது. உ-ம்.

கெடுப்பதூஉங் கெட்டார்க்கு - இன்னிசை அளபெடை, உரனசைஇ யுள்ளந் துணையாய் - சொல்லிசை அளபெடை.

நசையென்னும்பெயர ளபெடுத்து வினையினிசையை நிறைத்துநின்றது.

22. பெயர். குறிப்புவினைமுற்று.

காலத்தைகாட்டாது வேற்றுமையேற்றுப் பொறிகட்கும் மனதிற்கும் விடயமாகிய பொருளை உணர்த்துவதுபெயர். பொருளாதியாறையு மடியாய்க்கொண்டும் காலத்தைக் குறிப்பாய்க்காட்டியும் பெயர்க்குப் பயனிலையாய் நிற்கும்போது குறிப்புவினை முற்றாம். உ-ம்,

பொன்னன்—பெயர். அவன்பொன்னன்—குறிப்பு வினைமுற்று.

23. தன்வினை. செய்வினை.

எழுவாய்க்கர்த்தாவின் றொழிலாகி விகுதிமுதலிய பெற்று வேறுபடாம னிற்கும் முதனிலையடியாகத்தோன்றியவினைச்சொற்கள் தன்வினையாம். செய்வினையாவது படுவிகுதி புணராத முதனிலை யடியாகத்தோன்றி யெழுவாய்க் கர்த்தாவைக் கொண்டுவரும் வினையாம்.

24. முதல். சினை. பிண்டம். பிண்டிக்கப்படும்பொருள்

அநேக முறுப்புகள் சேர்ந்தும் பிரிக்கப்படுந் தன்மையிலவாய் ஒரு தனியாகி நிற்பது முதல் எனப்படும். பிரிக்கப்பட்டதின்மேல் தான் முதலாய் நிற்குந்தன்மை யொழிந்து நிற்பது சினையாம், பலபொருட்டொகுதியாய்ப் பிரிக்கப்படும்போது ஊறின்றிதானே தனியாய் நிற்பது பிண்டமாம். அது போலாது நிற்பது, பிண்டிக்கப்படும் பொருளாம். உ-ம்.

உடம்பு—முதல், கண்—சினை, நெற்குப்பை—பிண்டம், நெல் - பிண்டிக்கப்படும் பொருள்.

25. இரட்டைக்கிளவி. 2. அடுக்குத்தொடர்.

இரட்டைச்சொற்கள் ஒருபொருளையே யுணர்த்தும். பிரித்துத் தனித் தனிகூறிற் பிளவுபட்டுப் பயனின்றிச் சிதையுமென்க. அடுக்குத் தொடரோ அற்றன்று சொன்முழுமையும் வரும் பிரித்திசைக்கினும் பயன்படும். உ-ம்.

சலசல மும்மதம்—இரட்டைக்கிளவி, நெருப்பு நெருப்பு—அடுக்குத் தொடர்.

## 26. ஒரு பொருட்பல்பெயர். ஒரு பொருட்பன்மொழி.

ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தனென்றாற்போலப் பலபெயர்கள் விசேடணமாய் நின்று ஒருபெயரை விசேடிப்பது ஒரு பொருட்பல் பெயராம். இனி ஒரு பொருட்பன் மொழியாவ [illegible] சாற்கள் விசேடணமாய் நின்று ஒருபெயரை விசேடிப்பதாம். [illegible] ளங்கன்று.

## 27. தகுதி. வழக்கு.

ஒருபொருட்குரிய சொல்லாற் சொல்லுதல் நீர்மையன்றெனவது கழைந்து தக்கதோர் வாய்பாடாற் கூறுவது தகுதியாம். சுடுகாட்டை நன்காடென்றாற் போல்வன. காரணமின்றி வழங்கற்பாடே பற்றி வருவது வழக்காம். அடுப்பின் கீழ்ப்புடை யடுப்பை மீயடுப்பு என்றாற் போல்வன.

## 28. காரணப்பொருட்டெச்சம். காரியப்பொருட்டெச்சம்.

முடிக்குஞ் சொல்லா லுணரப்படுந் தொழிற்கு வினையெச்சத்தா லுணரப்படுந் தொழில், காரணமென்பது படவருதல் காரணப்பொருட்டாம். இனி முடிக்குஞ் சொல்லா லுணரப்படுந் தொழில் காரியமாய் வருதல் காரியப்பொருட்டென்க. உ-ம்.

மழை பெய்ய நெல் விளைந்தது - காரணப் பொருட்டு, உண்ண வந்தான் —காரியப் பொருட்டு.

## 29. இயற்சொல். திரிசொல். திசைச்சொல்.

இயல்பாற் பொருளுணர்த்துஞ் சொல் இயற்சொல் எனப்படும். திரிசொல்லானது இயற்சொற்போலாது அரிதிற் பயனுணரப்படுஞ் சொல்லாம். திசைச்சொல்லானது வேறு தேசப்பாடை மொழியாம்.

## 30. இலக்கணப்போலி. மரூஉமொழி.

இலக்கண மில்லையாயினு மிலக்கண முடையதுபோற் சான்றோரா றொன்றுதொட்டு வழங்கிவருவது இலக்கணப்போலி. அப்படி வருதலின்றி யிடையிலே சில வெழுத்துக்கள் கெட்டுந், திரிந்தும், தோன்றியும், அன்றியு மிலக்கணத்திற் சிதைந்தும், தானே மருவி வழங்குவது மரூஉ மொழியாம். உ-ம்.

முன்றில்—இல்முன், அருமந்தபிள்ளை—அருமருந்தன்னபிள்ளை.

## 31. தழுவுதொடர். தழாத்தொடர்.

பொருட் பொருத்தமுறத் தழுவிய தொடர்தழுவு தொடராம். வந்தசாத்தன் என்றாற் போல்வன. நிலைமொழியானது வருமொழியைப் பொருட் பொருத்தமுறத் தழுவாவிடின் தழாத் தொடராம். கைக்களிறு என்றாற் போல்வன.

## 32. முன்னிலைவினை, ஏவல்வினை.

தன்மைவினை படர்க்கை வினைகளுக் கினமாய் முன்னின்றான் றொழிலை யுணர்த்தும், வினை முன்னிலை வினை. இனி இனமின்றி முன்னிலை யொன்றிற்கே யுரித்தாய் முன்னின்றானைத் தொழிற்படுத்தும் வினை ஏவல்வினையாம்.

உண்டி, உண்டாய், உண்டனை - முன்னிலைவினை, கொணா - எறி, தாழ் ஏவல்வினை.

## 33. செய்யா எச்சம், செய்யா முற்று.

செய்யா வென்னு மெச்சத்தில் 'ஆ' வென்னும் விகுதி இறந்தகாலத்தைக் காட்டி நின்றது. செய்யாவென்னும் முற்றில் 'ஆ' வென்பது பலவின்பாற் பன்மை விகுதி. உ-ம்.

"தாழாத்தளாரத் தண்டேன்றா வீழாவிறக்குமிவள்" இதில் தாழாமுதலியன, செய்யாவென் னெச்சங்கள். அவை நடவா, இதில் நடவாவென்பது முற்று.

## 34. ஒழியிசை, பிரிநிலை, எதிர்மறை.

ஒழிந்தபொருளைக் கொடுப்பது ஒழியிசை, படிக்கவோ வந்தாய் என்பதில் படிக்க வல்லவின்னுமோர் வேலையா யென்பது பெறப்படும். பலபொருள் அல்லது பல பெயரினின்றும், ஒரு பொருளை யல்லது ஒரு பெயரைப் பிரிக்கும்போது, பிரிநிலையெனப் படும். இவனே கொண்டான் என்பதில் இவனல்ல, வேறுபேர் என்பது துணியப்படும். இது பலபேர் தொக்கிய கூட்டத்தில் ஒருவனைப் பிரித்துக் காட்டியது. இல்லையென்னு மெதிர்மறைப்பொருளைத் தருவது எதிர்மறை அவனே கொண்டான் என்பதில் அவன் கொள்ளவில்லை என்பதுபோ தரும்.

## 35. இடவாகுபெயர், தானி ஆகுபெயர்.

இடவாகு பெயரை முடிக்கவருஞ் சொல்லினது தொழிலானது ஆக்கப் பொருளோடு எங்கும் வியாபித்து நிற்கும், தானி ஆகுபெயரில் முடிக்கவருஞ்

சொல்லினது தொழிலானது ஓரிடத்திலே மாத்திரம்வியாபித்து நிற்கு மிது வே யிரண்டிற்கும் வேறுபாடாம்.

36. கருவியாகு பெயர், காரியவாகு பெயர்.

இயற்பொருளோடு முடிக்கவருஞ் சொல்லானது பொருட் பொருத்த மில்லாது அதன் காரியமாகிய ஆக்கப் பொருளைக் கொள்ளுமிடத்துக் கருவி யாகு பெயர். இனி இயற்பொருளாகிய காரியப் பொருளோடு அதனை முடிக்கவருஞ் சொற்பொருட் பொருத்தமுற நில்லாது, அம்மொழியிற் றன்கருவி யாகிய ஆக்கப்பொருளை கொள்ளும்போது காரியவாகு பெயர். உ - ம்.

திருவாசகமோதினன் - கருவியாகுபெயர், இந்நூல் அலங்காரம் - காரியவாகுபெயர்.

37. எனதுயிர், இம்மாடெனது, எனது போயிற்று.

இவைகளில் முறையே, 'அது' என்பது முதலில் ஆறும் வேற்றுமைப் பொருளையும், இரண்டில், விகுதியையு மகரச்சாரியையும் பெற்ற குறிப்புவினைமுற்றையும் மூன்றாவதிற் குறிப்புவினையாலணையும், பெயரையுங் காட்டுகின்றது.

38. பண்பு, விசேடியம்.

குணத்தைக்காட்டி நிற்கும் உரிச்சொல் பண்பு. இது நியதியாய்ப் பண்பைப் குறிக்கும் ஆயின் விசேடியத்திற், பெயர், உரி, வினைகளானது, ஒன்றும் பலவுமாகவரும்,

கருங்குதிரை - பண்பு, அம்பினுங்கூரியகண் - விசேடியம்.

39. எழுவாய் வேற்றுமை வினைமுதல், மூன்றும் வேற்றுமை வினைமுதல்.

எழுவாய் வேற்றுமையில் வரும் வினைமுதல், தன்வினை விகுதியினாலே முடியும், மூன்றும் வேற்றுமையில் வரும் வினைமுதற்பெயர், செயப்படு பொருள் விகுதி வினையினாலே முடியும். உ - ம்.

குயவன் குடத்தைவனைந்தான் - எழுவாய் வேற்றுமை வினைமுதல், குயவனாற் குடமவனையப்பட்டது - மூன்றும் வேற்றுமை வினைமுதல்.

40. பதச்சேதம், பகுபத முடிவு.

புணர்ச்சி விகாரங்களை நீக்கிச் சொற்களைத் தனித்தனியே பிரித்தல், பதச்சேதமாம். இனிச்சொற்களினது, உறுப்புகளைத் தனித்தனியே பிரித்து முடிதல், பகுபத முடிவாம்.

## தொகைக்குறிப்புச் சூத்திரம்.

பெயரடி, வினையடி, யிடையடி, யுரியடி, பண்படி, யோமெடியைந்தாகும். (2) முன்னரின்மையும், பின்னரின்மையும் என்று மின்மையும், ஒன்றிலொன்றின்மையுமென, நான்கென்பவ பாவலட்சணம். (3) மல்லிகை, முல்லை, இருவாட்சி, தும்மை, மந்தாரை, பிச்சி, புன்னை, ஊமத்தை கொன்றை, வெள்ளெருக்குடன் கூறிய பத்தும ருச்சிக்குமலரே. (4) இயற்கையளபெடை, செயற்கையளபெடை, எழுத்துப் பேறளபெடை, யிசைநூலளபெடை, யொற்றுப்பேறளபெடை, யொற்றெழுத்தளபெடை, குற்றெழுத்தளபெடை, கெட்டெழுத்தளபெடை, கூறுமிவ்வெட்டேயளபெடைக்குறியே. (5) சிங்கம், தருப்பை, திசழ்புலிச் சருமம், நவமணிப் பீடம, நன்மடன், மர, மிவ்வாறு மாசனமாகும். (6) சப்பாணி தாலஞ், செங்கீரையுடனே, சிற்றில் சிதைத்தல், சிறுதேரோட்டல், சிறுபறை கொட்டல், செழும்புனலாடல், பந்து பயிலல், பம்பரம் விடுதல், பொன்னூசலாடல், போர்பயிலல் வேட்டமென்றிப் பன்னிரண்டு மிறையவ ராடலே, (7) விடையவானந்தம், வித்தையானந்தம், வாசனானந்தம், மாயமையானந்தம், பிரமானந்தம், முத்தியானந்தம், ஆன்மவானந்தம், அதத்துவிதவானந்தம், என வட்டவகையேயானந்தம். (8) ஆகாரம், நித்திரை, மைதுன மூன்று மிச்சைத்தொழிலென விசைத்தனர் புலவர். (9) முதலிடை கடையென விடமூன்றாகும். (10) உயர்ந்தோனிரப்பு, இழிந்தோனிரப்பு, ஒப்போனிரப்பு, மூன்றேயிரப்பு. (10) சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, குரோசாணி, கஞ்சாவைந் தேயிலாகிரி. (11) எடுத்தல் படுத்தல் நலிதல் விலங்கல் நான்கு மெழுத்திசைத்தொனை. (12) இடைக்கணம, வன்கணம், உயிர்க்கணம், மென்கணமெனக் கணம் நான்காகும். (13) அத்தியாரோபம், அபவாத மிரண்டும், கற்பிதமென்று கட்டுரைத்தனரே. (14) ஈசன், சீவன், கூத்தன், பிரமமாகிய நான்கும், சித்தென வரைந்தனர். (15) பாசஞானம், பசுஞானம், பதிஞானம், மூவகையென்ப ஞானமூதுணர்ந்தோர். (16) கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை, நான்கும் ஞானமென நவிற்றினருளரே. (17) ஆத்தும தரிசனம், பாசதரிசனம், சிவதரிசனம் மூன்றுஞ் ஞானதரிசனமே. (18) பசுபதி, பாசம், இம்மூன்றையும் திரிபதார்த்தமென்று செப்பினருளரே. (19) எழுத்தின்றிரிபு, சொல்லின்றிரிபு, பொருளின்றிரி பொடுதிரிபு மூன்றே. (20) முதனிலைத் தீபமிடைநிலைத்தீபங் கடைநிலைத் தீபமொடு தீபமூன்றே. (21) ஆநந்தரியம், விடையமதிகாரி, பிரயோசன நான்கும் நூலின் சம்பந்தமாகும். (22) பட்சம், சுபட்சம், விபட்சம் மூன்றும் பட்சமென்று பகருவருளரே.

அபாவம் - இன்மை, சருமம் - தோல், அத்துவிதம் - ஒன்று, மைதுனம் புணர்ச்சி.

## தொகைக்குறிப்புச்சொல்.

அ.—அணி 2. (சொல்லணி, பொருளணி,) அறிவும் 6. அடி 4. அவத்தை 5. அலங்காரம் 35. அளவு 4. அளவை 3. (காட்சி, அனுமானம், ஆகமம்,) அன்னுயவலக்கணம் 5, [காத்தா, கன்மம், கிரியை, விசேடணம், விசேடியம்].

இ.—இசை 3. (மந்தரம், மத்திமம், தாரம்,) இசை 7. [குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்,] இடம் 3. [தன்மை, முன்னிலை, படர்க்கை,] இலக்கணம் 5. [எழுத்து சொல், பொருள், யாப்பு, அணி].

உ.—உரி 2. (வினையுரி, பெயருரி,) உரை 4. (கருத்துரை, பதவுரை பொழிப்புரை, அகலவுரை,) உரையிலக்கணம் 5. (பதம், பதப்பொருள், வாக்கியம், வினு, விடை).

எ.—எச்சம் 2. (பெயரெச்சம், வினையெச்சம்,) எழுத்துத்தானம் 5. (பாலன், குமரன், அரசன், விருத்தன் மரணம்).

க.—கவி 4. (ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்,) கணப்பொருத்தம் 10.

கா.—காலம் 3. (இறப்பு, எதிர்வு, நிகழ்வு,) காலம் 6. [கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்].

கு.—குற்றம் 10. குன்றக்கூறல், முதலியன.

சு.—சுட்டு 2. (அண்மை, சேய்மை).

சொ.—சொல் 4. (பெயர், வினை, இடை, உரி).

த.—தமிழ் 3. தமிழ்நிலம் 12. திணை 2.

நூ.—நூல் 3. (முதனூல், வழிநூல், சார்புநூல்).

நி.—நிலம் 5. (முல்லை, நெய்தல், குறிஞ்சி, பாலை, மருதம்).

பா.—பா 4. (வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பா,) பாலல் 5. (ஒருவன், ஒருத்தி, ஒன்று, பலர், பல,) பாலல் 5. [முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை].

பி.—பிரபந்தம் 96. புணர்ச்சி 2.

ம.—மணம் 8. (பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம்,) மதம், 7. முற்று 3.

வ.—வழக்கு 2. வழு 7. வாழ்த்து 2. வசை 2. வடிவு 4. வாசம் 5. வண்ணம் 5.

வி.—வினு 8. விடை 8. விகாரம் 9. வினை 2.

# ௪. அதிகாரம்.

## சொற்றொடரிலக்கணம்.

பெயர்வினைமுதலிய சொற்கள் ஒழுங்குபடத் தொடர்ந்துநிற்பது சொற்றொடராம். அது தொகாநிலை தொகைநிலையென இரண்டுவகைப்படும். உருபுகள் மறைந்துநில்லாமல் வெளிப்படையாய்நிற்பது தொகாநிலை. உருபுகள் மறைந்துநிற்பின் தொகைநிலையாம்.

"தந்தையடிபணிந்து தண்டுளவோன்செய்தி
சிந்தையுறவெல்லாந் தெரிந்துரைத்தான்."

(1) தந்தை அடி ... ... ... ஆறாம்வேற்றுமைத்தொகை.
(2) அடிபணிந்து ... ... ... இரண்டாம்வேற்றுமைத்தொகை.
(3) பணிந்து தண்டுளவோன் ... அல்வழி வினையெச்சத்தொடர்.
(4) தண்டுளவோன் செய்தி ... ஆறாம்வேற்றுமைத்தொகை.
(5) செய்திசிந்தை ... ... ... இரண்டாம்வேற்றுமைத்தொகை.
(6) சிந்தையுற ... ... ... ஏழாம்வேற்றுமைத்தொகை.
(7) உறவெல்லாம் ... ... ... அல்வழி உரிச்சொற்றொடர்.
(8) எல்லாந்தெரிந் ... ... ... இரண்டாம்வேற்றுமைத்தொகை.
(9) தெரிந்துரைத்தான் ... ... அல்வழி வினையெச்சத்தொடர்.

"பொன்பெற்றமாதரும் போவென்றுசொல்லிப்புலம்பிவிட்டார்."

(1) பொன்பெற்ற ... ... ... இரண் - வேற்று - தொகை.
(2) பெற்றமாதர் ... ... ... அல்வழி - பெயர் - எச்சத்தொடர்.
(3) மாதரும்போ ... ... ... அல்வழி - இடைச்சொற்றொடர்.
(4) போவென்று ... ... ... அல்வழி - முற்றுத்தொடர்.
(5) என்றுசொல்லி ... ... அல்வழி - இடைத்தொடர்.
(6) சொல்லிப்புலம்பி ... ... அல்வழி - வினையெச்சத்தொடர்.
(7) புலம்பிவிட்டார் ... ... அல்வழி - வினை எச்சத்தொடர்.

## சொல்லிலக்கணம்.

தொடர்களிற் பதங்கள் ஒவ்வொன்றிற்கு முள்ள சம்பந்தத்தையும் முடிவையும் கூறுவது சொல்லிலக்கணமாம்.

"வீடுநமக்குத் திருவாலங்காடு விமலர்தந்த
ஓடுநமக்குண்டு வற்றாத பாத்திரம்"

வசனம்.—I. வீடு நமக்குத் திருவாலங்காடு, II. விமலர்தந்த ஓடுநமக்குண்டு, III. வற்றாத பாத்திரம்,

I. வீடு, நமக்கு, திருவாலங்காடு.

வீடு.—பால்பகாவஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர் திருவாலங்காடு என்பதோடு முடிந்தது.

நமக்கு.—உயர்திணைப் பலர்பாற்பெயர், நம் என முதல்குறுகி நின்று கோடற்பொருளிற் குவ்வுருபெற்றது.

திருவாலங்காடு.—பால்பகாவஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர், வீடு என்னும் பெயர்ப்பயனிலை யேற்றது.

II. விமலர், தந்த, ஓடு, நமக்கு, உண்டு.

விமலர்—உயர்திணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர் தந்தவென்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது.

தந்த.—இறந்தகாலப் பெயரெச்சம், ஓடு என்பதோடு முடிந்தது.

ஓடு.—பால்பகாவஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர் உண்டு என்னும் குறிப்பு முற்றுப்பயனிலையோடு முடிந்தது.

நமக்கு.—உயர்திணைப் பலர்பாற்பெயர், முதல் குறுகி நம் என நின்று குவ்வுருபேற்றது,

உண்டு.—இருதிணை ஐம்பால் மூவிடப்பொதுவான குறிப்புவினைமுற்று, ஓடு என்பதற்குப் பயனிலையாய் நின்றது.

III. அது, வற்றாத, பாத்திரம்.

அது.—அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர் தோன்றா வெழுவாயாய் நின்று வற்றாதவென்னு மெதிர்மறைப் பெயரெச்சங்கொண்டு முடிந்தது.

வற்றாத.—எதிர்மறைப் பெயரெச்சம் பாத்திரமென்னும் பெயரோடு முடிந்தது.

பாத்திரம்.—பால்பகாவஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர் பயனிலையாய் நின்று அதுவென்னுந் தோன்றா எழுவாய்கொண்டது.

"பொன்பெற்றமாதரும் போவென்றுசொல்லிப் புலம்பிவிட்டார்."

பொன்,—அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர், மறைந்து நின்ற இரண்டாம் வேற்றுமை, ஐயுருபேற்றது,

பெற்ற.—உடன்பாட்டுத் தெரிநிலை வினைப்பெயரெச்சம், மாதர் என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது.

மாதர்.—உயர்திணைப் பலர்பாற்படர்க்கைப் பெயர் விட்டார் என்னும் பய னிலை கொண்டு முடிந்தது.

போ.—முன்னிலை யேவன்முற்று, என்று என்னும் இடை அடியாய்ப்பிற ந்த வினை எச்சத்தோடு முடிந்தது.

என்று.—இடைச்சொல்லடியாய்ப்பிறந்த வினையெச்சம் சொல்லி என்னும் வினையெச்சத்தோடு முடிந்தது.

சொல்லி.—உடன்பாட்டுத் தெரிநிலை வினை எச்சம், புலம்பி என்னும் வினை எச்சம் கொண்டு முடிந்தது.

புலம்பி.—வினையெச்சம் விட்டார் என்னும் முற்றைக்கொண்டு முடிந்தது.

விட்டார்.—இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று மாதர் என்னு மெழுவாய் கொண்டு முடிந்தது.

# ரு. அதிகாரம்.

## செய்யுட் பொருணடை.

தமிழ் பாஷையிற் செய்யுளே யதிகமாம், ஆகவே செய்யுட் பொருணடைகளை யெளிதிலறிந்து தனக்கும் பிறர்க்கு முபயோகப் படுதற்காக வேண்டிய இலட்சணங்களையறிதல் அத்தியந்த ஆவசியகமாம். அறிதற்பாலன அநந்தமாயிருப்பினும் விசேஷமா யறியவேண்டிய சிலவற்றை மாத்திர மிங்ஙனம் வரைகின்றேன்.

1. சொல்லே சொல்வோன் சொற்பொருண் மூலம்
புணர்ச்சிவிகாரம் பொருணனிவிளக்கல்
புல்லும்வேற்றுமை பொருந்தவுரைத்தல்
எச்சங்கூறல் எழுவழுக்களைதல்
ஒல்காப்பொருள்கள் ஓதியவிடன்கள்
காரணங்கருத்துக் கருதியபயனும்
சொல்லும்பொருணடை சேர்ந்தபுடையுரை
இற்றையறிதல் எவர்க்குமுரித்தே.

(1) சொல்லு.
(2) சொல்வோன்.
(3) சொற்பொருள்.
(4) ,, மூலம்.
(5) ,, புணர்ச்சி.
(6) ,, விகாரம்.
(7) பொருள்விளக்கல்.
(8) வேற்றுமை.
(9) எச்சங்கூறல்.
(10) எழுவழுக்களைதல்.
(11) பொருள்.
(12) இடம்.
(13) காரணம்.
(14) கருத்து.
(15) பயன்.
(16) புடையுரை.

[அகம், புறமெனப் பொருளு மிடனு மிருவகைப்படும்.]

2. அன்னுவயமும் மரும்பதவரைவும்
பொருந்துவழக்கம் புகழுமொழுக்கம்
துன்னுமெய்ப்பாடு தொழிலாமுரிமையும்
தொகையும்வகையுந் தோன்றுமுவமையும்

பன்னுமெதிர்நிலை பகருங்கருப்பொருள்
பதையாத்துணிபுடன் பற்றுதலுரிமை
மன்னுமீர்பொழுதா மதிக்குந்திணையும்
முற்றத்தேறுவர் முழுதுணர்ந்தோரே,

| | | | |
|---|---|---|---|
| (1) | அந்நுவயம், | (9) | உவமை. |
| (2) | அரும்பதவரைவு. | (10) | எதிர்நிலை. |
| (3) | வழக்கு. | (11) | கருப்பொருள். |
| (4) | ஒழுக்கம். | (12) | துணிபு. |
| (5) | மெய்ப்பாடு. | (13) | பற்றுதலுரிமை. |
| (6) | தொழிலுரிமை. | (14) | சிறுபொழுது. |
| (7) | தொகை. | (15) | பெரும்பொழுது. |
| (8) | வகை. | (16) | திணை. |

3. பதத்தின்முடிபே யவற்றின்றிரிபே
உற்றவியல்பே பற்றும்விழைவே
விதமாங்குறிப்பே வினையேசார்பே
வேண்டுமினமிடம் விரும்புவரணியே
இதமாய்எண்வகைப் பொருளைக்கோடல்
இன்னோரன்னவை யெடுத்துக்காட்டல்
சதமாய்க்கொள்வர் செய்யுட்கண்ணே
விதமாயறிமின் விரும்புவரிதையே,

| | | | |
|---|---|---|---|
| (1) | பதமுடிபு. | (7) | சார்பு. |
| (2) | சொற்றிரிபு. | (8) | இனம். |
| (3) | இயல்பு. | (9) | இடம். |
| (4) | விழைவு. | (10) | அணி. |
| (5) | குறிப்பு. | (11) | எண்வகைப்பொருள்கோடல். |
| (6) | வினை, | (12) | இன்னோரன்னவைகாட்டல். |

இவைகளின் விரிவையுமிவைகட் கிலக்கியங்களையும், [Part II.னில்] கண்டறிக.

[அடைமொழி.]

பெயரும், வினையும், பண்பும், உரியும், தனித்துஞ்சேர்ந்து மடைமொழிகளாய்வரும்; அடை, பண்பு, விசேடணமென்பன ஒருபொருட்சொற்கள்.

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | நகை - சாரைப்பாம்பு. |
| 2. | வினை | ஆடுபாம்பு - ஓடுங்குதிரை. |
| 3. | பண்பு | கருங்குதிரை - செம்பாம்பு. |
| 4. | உரி | நனிபேதை - கடிக்கமலம். |

இவைகள் பெயர்க்கு விசேடணமாய் வரும். மேலும், வினையும் உரியும், பெயர்க்கு விசேடணமாவதன்றி வினைக்கு அடையாய் அல்லது ஆரோபனமாய் வரும். "கொலைத்தொழில் மறலியையப்பயிற்றுங்கண்" என்பதிற் பல அடைகள் சேர்ந்து ஒருபெயரை விசேடித்து நின்றன "வந்து, இருந்து, நனி அயின்றுபோயினன்" என்பதில் போயின னென்னு மொருவினையைப் பல அடைமொழிகள் விசேடித்து நின்றன, இவ்வடைமொழிகள், இனமுள்ளன, இனமில்லாதன என விருவகைப்படும்.

1. நெய்க்குடம் ... ... ... ... இனமுள்ளன.
2. உப்பளம் ... ... ... ... இனமில்லாதன.

இனமுள்ள அடை பிறிதினையியு நீக்கிய விசேடணமென்றும், இனமில்லாதவடை, தன்னோ டியையின்மை, நீக்கிய விசேடணமென்றும் பெயர் பெறும், அளமெனவே உப்பென்பதுதானே போதரும் உப்பில்லா அளமில்லையாதலால்: இனி நெய்க்குடமாகிய, வினமுள்ளதை யடைகொடாது கூறிற் குறித்த பொருள் மயங்கிப் பொதுமையி னிற்கு மாகையால் அடைகொடுத்தலே மரபென்க. அடை மொழிகளிற் சிறப்புப்பெயரை முன்வைத்து, இயற்பெயரைப் பின்வைத்தல் உலகவழக்குச் செய்யுள்வழக்கு இரண்டினுஞ் சிறப்பாம். சிறுபான்மைஇயற்பெயர் பின்னிற்பதன்றி முன்னே நிற்குமெனினும் வழுவாகாதென்க.

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழியென்னுந் தொகைகளில் அடைமொழி இனம் விலகிநின்றால், முன்மொழியிலும் இனம் விலகாதுநின்றால், பின்மொழியிலும் விலகியும் விலகாதும்நின்றால், இருமொழியிலும் அன்மொழியிற் புறமொழியிலும் பொருள் சிறக்கும். அடைமொழிகள் முன்மொழிப் பண்பு, இருமொழிப்பண்பு, முன்மொழி விசேடியமெனப் பலவாறாய்ப் பிரியும்.

கருங்குவளை ... ... ... ... முன்மொழிப்பண்பு
பெருவெள்ளை ... ... ... ... இருமொழிப்பண்பு-
தெய்வப்புலவன் திருவள்ளுவன், முன்மொழி விசேடியம்.

[பொருளைமுடிக்குஞ்சொல் நிற்குமிடம்.]

வேற்றுமை உருபுகளையும், வினை முற்றையும், வினை யெச்சத்தையும்,

முடிக்கவருஞ் சொற்கள், முன்னும் பின்னு மிரண்டிடத்தினும் நிற்கும். ஆயின், ஆறனுருபின் கண்ணும் பெயரெச்சத்தின் கண்ணு மப்படியாகா.

(1) வந்தான் சாத்தன், சாத்தன் வந்தான், எழுவாய் வேற்றுமை.
(2) வெட்டினான் மரத்தை, மரத்தை வெட்டினான், இரண்டாம் வேற்றுமை.
(3) வீசினான் வாளால், வாளால் வீசினான், மூன்றாம் வேற்றுமை. [றுமை.
(4) கொடுத்தான் அந்தணர்க்குக் அந்தணர்க்கு கொடுத்தான், நான்காம் வேற்
(5) நீங்கினான் ஊரின், ஊரின் நீங்கினான், ஐந்தாம் வேற்றுமை.
(6) சென்றான் சாத்தன்கட், சாத்தன்கண் சென்றான், ஏழாம் வேற்றுமை.
(7) வா சாத்தா, சாத்தா வா, விளிவேற்றுமை.
(8) சாத்தன் போயினான், போயினான் சாத்தன், முற்றுத்தொடர்.
(9) போயினான் வந்து, வந்துபோயினான், எச்சத்தொடர்.

இவைகளில் முன் மொழிகளிற் பொருள் சிறந்தன.

மொழிகள் மாறாது இயல்பாய் நிற்கும்போது பின் மொழிகளிற் பொருள் சிறந்து நிற்கும்.

## [மொழிமாற்று.]

ஈண்டு மொழிமாற்றென்பது ஒருமொழியானது தன் நிலையிற் பிரிந் தின்னொன்றுடன் சேர்ந்து பொருள் கோடலையன்று, பின்னர்ப் பெயர்வினை யிடையுரிகள் ஒன்று மற்றொன்றாய் மாறி வருதலை யென்க.

(1) பெயர் பண்பாய் வரும், - ஆயன் சாத்தான்.
(2) பண்பு பெயராய் வரும், - வெள்ளை வந்தது.
(3) பெயர் வினையாய்வரும், - அவள் மொழிகண்டு பயந்தேன்.
(4) வினை பெயராய் வரும், - கெடுசெய்யா துலகம்.
(5) இடைவினையாய் வரும், - அம்மதோழி.
(6) இடை பண்பாய் வரும், - முன்னணி.
(7) இடை பெயராய் வரும், - முன்செய்வினை.
(8) உரிபெயராய் வரும், - வேந்தன் வயமுடையவன்.
(9) உரி பண்பாய்வரும், - நனிபேதை.
(10) உரிவினையாய்வரும், - மாண்ட உயிர்கள்.
(11) செய்யுமென்னச்சம் பெயராய்வரும் - ஆம் சொன்னான்.
(12) இடைபண்பாகும் - எலவளை.
(13) சுட்டுப்பண்பாகும் - அம்மனிதன்

கண்டுபயந்தேன்=கற்கண்டு, பால், தேன்.

[மொழித்திரிபு.]

(1) "வீரக்கழல்" உடையானது குணம் உடைமை மேனின்றது.

(2) "ஞாயிறுபட்டுவந்தான்" படவென்பதுபட்டு எனத்திரிந்தது.

(3) "வரிபுனைபந்து" வரிந்தவென்னும் வினையெச்சம் வரியென்னும் முன்னிலை யேவலானது.

(4) "பொருதகர்" முன்னிலைத்தாது பெயரெச்சப் பொருட்டாய் நின்றது.

(5) "அறிகொன்றறியான்" அறியென்னும் முன்னிலைத்தாது அறிதல் என்னும் பெயர்ப்பொருட்டாய் நின்றது.

(6) "கொள்வாரும் கள்வரும்நேர்" முதனிலைத்தாது முற்றாய் முடி

(7) "தேரான்பிறனைத் தெளிந்தான் வழிமுறை - தீராவிடும்பைதரும்" இதிற்றெளிந்தா னென்னும் முற்று வினைப்பெயரின், கண்ணின்றமுதனிலை தெளிதலாய் எழுவாயானது.

(8) "பொருள் செயல்வகை" - பொருள் செய்யும்வகை வினை செயல்வகை - வினைசெய்யும் வகையெனத் தொழிற்பெயர்கள் எச்சமாய் வந்தன.

(9) "வெய்யோன் குடதிசைச்சென்றது சென்றதாவி" இதிற் செலவென்னும் எச்சம் சென்றது எனமுற்றாய் மாறிநின்றது.

(10) "பெண்ணேவல் செய்தொழுகுமாண்மை" இதில் ஒழுகுமென்னு மெச்சம் ஒழுகுவாள் என முற்றாய்நின்றது.

(11) "தேரான்பிறனில் புகல்" - தேரான் என்பது தேராதவெனப் பொருடரும்,

(12) "பிறப்பென்னும் பேதமை" காரியங் காரணமானது.

(13) "தீவினையென்னுஞ் செருக்கு" காரணங்காரியமானது.

(14) "இல்லதெ னில்லவள் மாண்பானால்" குணம் குணியானது.

(15) "சிற்றினமஞ்சும் பெருமை" குணவினை குணிவினையானது.

(16) "முன்னின்று பின்னோக்காச்சொல்" ஒரு பொருளின்வினை மற்றோர் பொருளின் வினையானது.

(17) "இந்தப்பானை நாழுழி அரிசிபொங்கும்" இடத்து நிகழ் பொருளின்றொழில் இடத்தோடு வந்தது.

(18) "பீலிபெய் சாக்காடுமச்சிறும்" சினைவினைமுதல் வினையானது.

(19) "இன்சொல்" "வன்சொல்" பண்பு மாறிவந்தது.

(20) "செவிகைப்பச்சொற் பொறுக்கும்" புலன் மாறிவந்தது.

[விகுதி பிரித்துப் பொருள் கோடல்.]

அருங்கேடன்=கேடரியன்.

அறஞ்சொல்லு நெஞ்சத்தான்=நெஞ்சோடு அறஞ்சொல்வான் செய்த வேள்வியர்=வேள்வி செய்தவர்.

[உம்மை பிரித்துப் பொருள் கோடல்]

புணரியா ணிலையிடை குறுகலு முரித்தே என்பதில் குறுகலு மென்ற உம்மையை இடையுமென்று சேர்க்க·

[பண்பு பிரித்துப் பொருள் கோடல்.]

இனியவுளவாக வின்னாகூறல் கனியிருப்பக்காய் கவர்ந்தற்று. இதில் யகனி யின்னாத காயென்று சேரும்.

[உருபு பிரித்துப் பொருள் கோடல்.]

நடுவூருள் நச்சுமரம், ஊர் நடுவுள் நச்சுமரம்.

"யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறைவிற் பூட் - டாப்பிசையளை மறிபாப் புக் கொண்டு கூட் - டறிமறிமாற்றெனப் பொருள் கோளெட்டே."

இந்த எண்வகைப் பொருள் கோளையும் நன்னூல்சூத்திரம் (௪௰௧) ற் கண்டுணர்க.

# கா. அதிகாரம்.

## அந்நுவயலக்கணம்.

1. எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் வருஞ்சொற்க ளொண்ணிலவா
யழுத்தும் பொருண்முறை யுய்த்திடு மென்ப ரவைகளுதான்
விழுப்பந் தருமவாவண்மை தகுதியாம் வேற்றுமையி
லொழுங்கந் தருவாக்கி யந்நிலையுற்றிடு மொண்ணுதலே.

(இ-ள்.) எழுத்துக்கள் தனித்து மிரண்டு முதலாய்த் தொடர்ந்தும் பொருளைக் கொடுக்கும். அப்பொருள் வாக்கியத்தில் அவாய் நிலை அண்மை தகுதியென்று சொல்லப்படும். "அவாய் நிலை" யாவது ஒரு சொற்றனக்கு எச்சொல் இல்லாவிடின் வாக்கியப் பொரு ளுணர்ச்சி உண்டாகாதோ, அச்சொல்லை யவாவி நிற்றலாம். "ஆவைக் கொணு" என்னுமிடத்து இரண்டு சொல்லு மொன்றையொன்றவாவி நிற்றலு மதுகாரணம் பற்றிக் கருத்துணர்ச்சி யுண்டாதலு மறிக. அண்மையாவது கால மிடையீடின்றியும், வாக்கியப் பொரு ளுணர்ச்சிக்குக் காரணமல்லாத சொல் இடையீடின்றியும் சொல்லப் படுதலாம். ஆவைக் கொணு என்பதை நாழிகைக் கொன்றாய்ச் சொல்லின் பொருள்படாது, இனி மலையுண்டான் நெருப்புடையது, தேவதத்தன் என்புழி மலைநெருப்புடைய தென்னும் வாக்கியத்தி னுணர்ச்சிக்குக் காரணமல்லாத உண்டான்; என்னுஞ்சொல் இடையீடாக நின்றது. [இடையீடு = தடை.] தகுதியாவது பொருட்குத் தடை யுணர்ச்சி யில்லாமையாம்; நெருப்பானனை என்னுமிடத்து நனைத்தற்கு நெருப்புக்கருவியன்று என்கிற வுணர்ச்சி தடையுணர்ச்சி என்க.

---

2. ஒன்றானவந்நுவயலக்க ணமைந்தென் றோதுவர்காண்
நன்றானகன்மம் கிரியைகருத்தாவுநல்லடைதான்
பொன்றாமுதலும்வருமுறை சாற்றுவன் பூமலிநார்
குன்றாதணியுஞ்சுரிகுழன் மாதனைக்கேட்டணமே.

(இ - ள்) அன்னுவயவுறுப்புகள், கர்த்தா, கிரியை, கன்மம், விசேடணம் விசேடியமென வைந்தாம், [சண்டுமுதலென்றது விசேடியத்தை.]

3. ஆறுமுணர்ந்தாய்ந்தறிவாற்றல் பெற்றிடவாங்கருவி
சாருந்தனிவாக்கியமென் றுரை நனிசாற்றுவர்மை
யாருங்குழலுமணிமணிப் பூண்டிகழாரணங்கே
சேருங்கிரியைவினைமுதல் சேர்வுணர்செய்திடவே.

(இ-ள்) ஒருபொருளை யுணர்ந்து கொள்வதற்குக் கருவியானது வாக்கியமாம். அவ்வாக்கியமானது பொருள்படுதற்கு எழுவாய் பயனிலைகள் வேண்டுமென்பதாம். ஆகவேயேனைய கன்மம், விசேடியம் விசேடணமென்னு மூன்றுறுப்புகளுள் ஒன்றும், பலவுங் குறைந்தும், எழுவாய் பயனிலைகளில் ஒன்று குறையாமலும், நின்று வாக்கியம் பொருள்படுமென்க.

---

4. செப்புமெய்வாக்கிய மொன்றிரண்டாயிறுஞ் சீர்பெறத்தான்
றப்பிலடைமொழிசேர்ந்து மில்லாதமெய்த்தன்மையிதே
துப்புறழ்செவ்வாய்த்துடியிடைமென் மொழித்தோகைநல்லாய்
ஒப்புடைக்கன்மகம்பொன்றுமிலை யென்பருய்த்துணரே.

(இ-ள்) வாக்கியமானது விசேடணம் பெற்றும்பெறாதும்வரும், மேலு மது செயப்படுபொருள் குன்றியுங் குன்றாது மிருபிரிவாய் வருமென்பர்.

---

5. வழங்கும்பொருள்குணஞ்சுட்டுத் தொழிலுடன்வாய்ந்துவினு
மொழுங்கேவினையணைபேர்களு மற்றவுமின்னனவுங்
குழம்பாவினைமுதலா மென்றிலக்கணங்கூறிடுமாற்
கழங்காடுமென்மொழிக்கண்ணே யிவற்றினைக்கண்டறியே.

(இ-ள்) பொருட்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் சுட்டுப்பெயர், குறிப்புவினை தெரிநிலைவினை யாலணையும் பெயர்களும், மற்றுமிவை போன்றனவும் எழுவாயாகவருமென்பர் இவைகள் எழுவாயாகவரும்போது விசேடணம் பெற்றும், பெறாதும் வரும், என்க.

கழங்காடல் - பெண்கள் விளையாட்டிலொன்று.

---

6. பண்பானசுட்டுவினுவினை நற்பெயர்பார்மிசைதான்
எண்போயியலும்வியங்கோ ளினையனவேற்றமுறும்
விண்போனமின்னேபயனிலையா மென்பர்வீதவிலாக்
கண்போலும்பார்த்திடிற்கற் றோருரைத்தவைகாண்குதியே.

(இ - ள்) சுட்டுப்பெயரும், வினாவும், வினையும், பெயரு மதன் பிரிவுக ளாகிய, பண்புப்பெயர் முதலியனவும் வியங்கோளும் பயனிலையாய் வருமென்பார்.

7. கற்றோருரைகள்கவின்பெறுங் காரணகர்த்தனையே
பெற்றபெயரவை கன்மகமாய்வரும் பேசிடுங்காற்
குற்றமறுமன்முறையிதெனவுரை கூறுவர்மேற்
சுற்றும்விழியளிமாதே சுகமிகுசொற்றிடினே.

(இ - ள்) என்னென்ன எழுவாயாய் வருமோ அவைகள் செயப்படு பொருளாயும் வருமென்க.

8. அறுதொகையின்னுமை வேற்றுமையாரடையல்லவென்பர்
மறுதொகையோர்நான்கு மீரெச்சமுற்றிடுமோறனுமே
யுறுமடையாம்போர்க்கே கன்மமும்பெற்றிடுமுள்ளிடுங்கா
லிறுமிடையென்றுதொயிலே வரையாதவேந்திழையே.

(இ-ள்) வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி, வேற்றுமை என் னுந்தொகைகளாறனுள், உம்மையும் வேற்றுமையுமடையாகா வொழிந்த வினை முதலாகச்சொல்லப்பட்ட நான்குதொகைகளும் இருவகையெச்சங்களும், ஆறும்வேற்றுமையும் எழுவாய்க்கன்றிச் செயப்படுபொருளுக்கும் விசேடண மாய்வருமென்க.

உம்மை, இடைகுறைந்து உமையென நின்றது ஆறு, என்பது ஆறும் வேற்றுமையை யுணர்த்தி நின்றது.

9. மன்னும்பயனிலைக்காமடை யீரெச்சமன்றியுமேற்
றுன்னுமிருமுற்றுமாங்காங்கு வந்திடுந்தொன்றுதொட்டே
யின்னும்பலவுளவாய்த்தறிநூல் வழியிவ்வகையே
கன்னலுங்கைத்திடப் பன்னுங்கொடியிடைக்காரிகையே.

(இ - ள்) வினைஎச்சம், பெயரெச்சம், ஈர்முற்று, வினையுரி ஆகிய விவை யுமிவை போன்றனவும் வினை விசேடணமாய் வருமென்பார்.

10. வினைதன்விசேடணமீரெச்ச மாய்வரும்வெண்டிரைசேர்
கனைகடற்சூழ்புவிக்கண்வரு பேருமற்றேகாசினியி
வினையவுமன்னவிவைதாம் வரைமுறையிற்றழிந்தே
புனைந்தருங்கரங்கள் பொய்ச் சிற்றிடைத்தாய் முருகப்போற்றுமிடமே

(இ - ள்) வினைவிசேடணம் தனியாய் நிற்பதன்றியு மிரண்டடுக்கியும் வரும், பொருளிரண்டு, மூன்று அடுக்கிவரப்பெறும் மேலுமிவ்விடஞ் சொல்லப்பட்ட வரைவின்றிப் பிறழ்ந்துமடைமொழிகள் வருமெனக்கொள்க.

[அந்நுவயஞ்செய்தல்.]

"என்பெற்றதாயாரு மென்னைப்பிணமென்றே யிகழ்ந்துவிட்டார்."

I.

(1) எழுவாய் ... ... தாயார்.
(2) பயனிலை ... ... விட்டார்.
(3) செய்பொருள் ... ... என்னை,
(4) விசேடணம் ... ... என்பெற்ற.
(5) ஆரோபனம் ... ... இகழ்ந்துபிணமென்று.

II.

"ஆதியிற் றமிழ்நூலகத்தியர்க்குணர்த்திய மாதொருபாகனை வழுத்துதும்"

(1) எழுவாய் ... ... [நாம் தோன்றாஎழுவாய்]
(2) பயனிலை ... ... வழுத்துதும்.
(3) செய்பொருள் ... ... பாகனை.
(4) விசேடணம் ... ... ஆதியில்...உணர்த்திய&.
(5) ஆரோபனம் ... ... ————

III.

"பொன்பெற்றமாதரும் போவென்றுசொல்லிப் புலம்பிவிட்டார்"

(1) எழுவாய் ... மாதர்.
(2) பயனிலை ... விட்டார்.
(3) செய்பொருள் ... என்னை [மறைந்துநின்றது.]
(4) விசேடணம் ... பொன்பெற்ற.
(5) ஆரோபனம் ... போவென்று......புலம்பி.

IV.

"தார்கொண்ட பூமல்லிகைச் சேக்கையிற்றும் பிசாலப்பம்பும்."

(1) எழுவாய் ... ... தும்பி.
(2) பயனிலை ... ... பம்பும்.
(3) செய்பொருள் ... ...

(4) விசேடணம் ... ... தார்கொண்ட பூமல்லிகை.
(5) ஆரோபனம் ... ... சால.

V.

"தார்கொண்ட கம்பக்களியானை முன்னின்று காப்பதுவே."

(1) எழுவாய் ... ... யானை.
(2) பயனிலை ... ... காப்பது.
(3) செய்பொருள் ... என்னை [தோன்றாநின்றது.]
(4) விசேடணம் ... கார்கொண்ட......களி.
(5) ஆரோபனம் ... முன்னின்று.

# எ. அதிகாரம்.

## பொருள்.

ஒருவன் தானெடுத்துக்கொண்ட விஷயமானது யாவர்க்கு முபயோகப் படும்பொருட்டு இயற்கையின் தன்மைகளைத் துணையாகக்கொண்டு, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் விரித்துரைப்பது பொருளெனப்படும். இந்நான்கனுட் சிற்றின்பத்தைத் தருமொன்றை அகப்பொருளென்றும், படைச் சேவகத்தைப் புறப்பொரு ளென்றும் நூல்கள் கூறும்.

இத்தன்மைகளைச் செவ்வி தாயுணர்ந்து, மற்றையோர்க்குப் பயனுடன் இன்பத்தையு மொருங்கே கொடுத்தற்குப் பலவிதமான மனிதருடைய சுபாவ வியற்கைகளை யறிதலன்றி அவர்கள் சஞ்சரிக்கும் இடம், அவர்களின் சாதி தொழில், குணம், பாஷை, வேதம், தெய்வம் முதலானவற்றையும், இன்னும் உயர்ந்தோர், இழிந்தோர், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணா, பறை, யாழ், பண், காலபேதங்கள் முதலியவற்றையு மறிதல்வேண்டும்.

இவர்களிருக்குமிடப் பரப்பானது திணையெனப் படும். அது குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐவகைப்படும். மலையும் மலைசார்ந்த விடமுங் குறிஞ்சி, சுரமுஞ் சுரஞ்சார்ந்த விடமும் பாலை. காடும் காடுசார்ந்த விடமும் முல்லை. வயலும் வயல்சார்ந்த விடமும் மருதம். கடலுங் கடல் சார்ந்த விடமும் நெய்தல். மேற்சொல்லப்பட்ட பதினான்கு பொருளையும் கருப்பொரு ளென்பர். பொருளானது, கருப்பொருள், உரிப்பொருள் என இருவகைப்படும் [கருப்பொருள்] - உற்பத்தியை யவ்வவ்விடத்திலேயே பொருந்திய பொருள், [உரிப்பொருள்] - அவ்வவ் விடத்திற்கு உரிமையைப் பூண்டபொருளாம்.

பொருள்.

- அகப்பொருள்.
  - ஒருதலைக். காமம். or [கைக்கிளை.]
  - பொருந்தாக். காமம். or [பெருந்திணை.]
- புறப்பொருள்.
  - அன்புடைக். காமம். or ஐந்திணை.
    - (1) குறிஞ்சி.
    - (2) பாலை.
    - (3) முல்லை.
    - (4) மருதம்.
    - (5) நெய்தல்.
  - (1) வெட்சி.
  - (2) கரந்தை.
  - (3) வஞ்சி.
  - (4) காஞ்சி.
  - (5) நொச்சி.
  - (6) உழிஞை
  - (7) தும்பை.

## திணை.

| | I. குறிஞ்சி. | II. பாலை. | III. முல்லை. | IV. மருதம். | V. நெய்தல். |
|---|---|---|---|---|---|
| 1 | தெய்வம்-குமரன். | காளி. | விட்டுணு. | இந்திரன். | வருணன். |
| 2 | உயர்ந்தோர்-பொருப்பன். | காளை-எயிற்றி, &c. | குறும்பொறைநாடன். | ஊரன்-கிழவன், &c. | சேர்ப்பன்-புலம்பன். |
| 3 | இழிந்தோர்-குறவர், &c. | மறவர்-எயினர், &c. | இடையர்-இடைச்சியர &c | உழவர்-உழத்தியர், &c. | பரதர்-பரத்தியர், &c. |
| 4 | பறவை-கிளி, மயில். | புறு-பருந்து, கழுகு, &c. | காட்டுக்கோழி, &c. | கொக்கு-அன்றில். | கடற்காக்கை, &c. |
| 5 | விலங்கு-புலி, யானை, &c | புலி-செந்நாய், &c. | மான்-முயல், &c. | எருமை-நீர்நாய். | சுறு, &c, &c, &c. |
| 6 | ஊர்-சிறுகுடி. | குறும்பு. | பாடி, &c. | பேரூர்-மூதூர். | பாக்கம்-பட்டினம். |
| 7 | நீர்-அருவி, சுனை. | கேணி | குறுஞ்சுனை-கான்பாறு. | ஆற, &c, &c. | உவர்நீர்க் கேணி. |
| 8 | மலர்-சந்தனம், &c. | குரா-சிறுபூளை, &c. | துளசி-முல்லை, காந்தள். | மகிழ்-தாமரை, குவளை. | தாழை-மடம்பு, &c. &c |
| 9 | மரம்- ” ” | ” ” | ” ” ” | ” ” ” | ” ” ” |
| 10 | உணா-தினை, &c. | பறிபொருள், &c. | வரகு-சாமை, பயறு. | செந்நெல்-வெண்ணெல். | புலவு, மீன், உப்பு. |
| 11 | பறை-தொண்டகம். | துடி. | பம்பை. | கிணை-மணப்பறை. | பம்பை, கோட்பறை. |
| 12 | யாழ்-குறிஞ்சியாழ். | பாலையாழ். | முல்லையாழ். | மருதயாழ். | விளரியாழ். |
| 13 | பாட்டு-குறிஞ்சியிசை. | பஞ்சுரம், &c. | சாதாரியிசை. | மருதம், &c. | செவ்வழி. |
| 14 | தொழில்-வெறிகொளல். | பகற்சூறை, &c. | விரைத்தல்-வெட்டல், &c | விழாக்கொண்டால், &c. | மீன்விற்றல், &c. |

## புறப்பொருள்.

| I. வெட்சி. | II. கரந்தை. | III. வஞ்சி. | IV. காஞ்சி. | V. நொச்சி. | VI. உழிஞை. | VII. தும்பை. |
|---|---|---|---|---|---|---|
| பகைவர் நாட்டுள்புகுந்து நிரையை யோட்டுதல். | பகைவர் ஓட்டின தன் நிரையை மீட்டல், &c. | பகைவர்மேற் செல்லுஞ் சேவகம். | பகைவரோடெதிர்த்தல், &c. | தன்னரண் காத்தல். | பகைவர் அரண் கைக்கொள்ளுதல். | பொருது வெல்லுஞ்சேவகம். |

## பெரும்பொழுது உரிமை.

| கார். [ஆவணி-புரட்டாசி.] | கூதிர். [ஐப்பசி, கார்த்திகை] | முன்பனி [மார்கழி, தை] | பின்பனி. [மாசி, பங்குனி] | இளவேனில். [சித்திரை, வைகாசி.] | முதுவேனில். [ஆனி, ஆடி.] |
|---|---|---|---|---|---|
| வாடைவீசல், இந்திரகோபம், மயில்முதலிய தோன்றி மகிழ்தல், வெண் காந்தள், செங்காந்தள், கொன்றை, &c., மலர்தல், அன்னங் கிளி குயில் அகலுதல், தாமரைமலர் முதலியன ஒழிந்துபோதல். | கூதிர்வீசல், நாரை அன்னம், கொக்கு, சங்கு, நண்டு, நத்தை இவை மகிழ்தல், நீர் தெளிதல், மீனினஞ் செனித்தல், மேகஞ் சூற்கொளல், பாரிசாதம், &c., மலர்தல், மனிதர், விலங்கு, இவை வருந்துதல். | கோடைக்காற்று வீசல், தூக்கணங்குருவி, கூகை, ஆந்தை இவை மகிழ்தல், மா, சிவந்தி மலர்தல் இலந்தை பழுத்தல், குன்றி காய்த்தல் நெல்விளைதல், கரும்புமுதலியன முதிர்தல், &c | உலவை வீசல், புறாவினம், கானங்கோழி இவைமகிழ்தல், கோங்கு, இலவு பூச்சல், பேரீந்து, பனைபழுத்தல், பருத்தி வெடித்தல் இவை முதலியன நிகழுமென்ப, &c | தென்றல்வீசல், வண்டினம், கிளி, பூவை, அன்றில், குயில் இவை மகிழ்தல, மாங்கனி உதிர்தல், நீர்ப்பூ மலாதல், மகிழ், தாழை, புன்னை, சண்பகம இவை முதலியன மலர்தலுமாம. | கோடைவீசல், கானற் றோன்றல், காடை, வலியான், வானம்பாடி, காகம், சவுதாரி இவைமகிழ்தல், மல்லிகை, புளி, பாதிரி இவை பூத்தல், உயிர்கள் வருந்துதல் உலகமழக்குக் குன்றுதல் |

## சிறுபொழுது உரிமை.

| [விடியல்.] | [உச்சி] | [எற்பாடு.] | [மாலை.] | [யாமம்.] | [வைகறை.] |
|---|---|---|---|---|---|
| விலங்கு பறவை மக்கள் மகிழ்தல். மூவகைப்பூக்கள் மலர்தல். பூபாளம் முதலிய இராகம் பாடல். [மூவகைப்பூவான]-கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ. | சக்கர வாகம் மகிழ்தல். பேய்ததேரோடல், எருமை நீரிறங்கிடத்தல், சாரங்க இராகம் பாடல். | நிழல் நீழலவானஞ் சிவத்தல், ஆட்டுச்குட்டி வீளை பாடல், கல்யாணி முதலிய இராகம் பாடல். | குவளை மலாதல், புள்ளினஞ் சோலை சேர்தல், பசுமுதற் கறவைகள் கன்றை நினைத்திரங்கல், தாமரை கூம்பல், காம்போதி பாடல. | ஆகிரிபாடல், கூகை சகோரம் மகிழ்தல், கடல் பொங்கல், காமமிகுதல், ஒலியின்மை, கனவு இவை நிகழ்தல். | கோழி கூவுதல, சுறைத் தோன்றல், மின்னொளி குன்றல், முனிவர் எழுதல், தேவரை வணங்கல், இராம், கலி, இந்தோளமென வீரிராகம் பாடல். |

# அ. அதிகாரம்.

## யாப்பு.

விதியின் வழியே சொற்க ளியைந்து அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பொருள்களைத் தோற்றுவித்து நிற்பது செய்யுளாம். இம்மை மறுமைப் பயன்க ளுணர்ந்திற்றில் முத்தியடைதலே இதன்பயனும்.

செய்யுளானது எழுத்து, அசை, சீர், தளை அடி, தொடை என்னு மாறுறுப்புகளைப் பொருந்தும். எழுத்துக், குறில், நெடில் என இருவகைப்படும். அசை, நேர், நிரை யென்றிருவகைப் படும். சீர், அசைச்சீர், இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீரென நான்கு வகைப்படும். தளை, நேரொன் றாசிரியத் தளை, நிரையொன் றாசிரியத் தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, என எழுவகைப்படும். அடி, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐவகைப் படும்.

தொடையானது மோனை, இயைபு, எதுகை, முரண், அளபு என்று சொல்லப்படும். இவை யொவ்வொன்று மெண்வகையாய்ப் பிரியுமென்க.

குறிலும் நெடிலுந் தனியே நின்று மொற்றடுத்தும் வரின் நேரசையாம்.

(1) அ—குறில் தனித்த நேரசை.
(2) அன்—குறிலு மொற்றும் வந்த நேரசை.
(3) ஆ—நெடில் தனித்த நேரசை.
(4) ஆன்—நெடிலு மொற்றும் வந்த நேரசை.

குறிலிணைந்து மொற்றடுத்துங் குறினெடி லிணைந்து மொற்றடுத்தும் வருவன நிரையசை யெனப்படும்.

(1) வெறி—குறிலிணைந்த நிரையசை.
(2) நிறம்—குறிலிணை யொற்றடுத்த நிரையசை.
(3) சுறா—குறினெடி லிணைந்த நிரையசை.
(4) விளாம்—குறினெடிலிணை யொற்றடுத்த நிரையசை.

இவ்வசைகள், இரண்டு, மூன்று, நான்காய்ச் சேர்ந்துவரிற் சீரெனப்படும்.

இவற்றுள் நேர் நேர் | நிரை நேர் | நேர் நிரை | நிரை நிரை | இந்நான்கு மீரசைச் சீராம்.

### உதாரண வாய்ப்பாடு.

| | |
|---|---|
| தேமா=நேர் நேர்<br>புளிமா=நிரைநேர் | இவ்விரண்டும் மாச்சீரெனப்படும். |
| கூவிளம்=நேர். நிரை<br>கருவிளம்=நிரை. நிரை | இவ்விரண்டும் விளச்சீரெனப்படும். |

இந்நான்கு சீர்களும் இயற்சீரெனவு மாசிரிய உரிச்சீரெனவும் வழங்கும்.

நேர் நேர் நேர் || நிரை நேர் நேர் | நேர் நிரை நேர் | நிரை நிரை நேர் | நேர் நேர் நிரை | நிரை நேர் நிரை | நிரை நிரை நிரை | நேர் நிரை நிரை | இவ்வெட்டும் மூவசைச் சீராம்.

### உதாரண வாய்ப்பாடு.

| | |
|---|---|
| தேமாங்காய்=நேர்நேர்நேர்<br>புளிமாங்காய்=நிரைநேர்நேர்<br>கூவிளங்காய்=நேர்நிரைநேர்<br>கருவிளங்காய்=நிரைநிரைநேர் | இவைகாய்ச்சீரெனவும் வெண்சீரெனவும்படும். |
| தேமாங்கனி=நேர்நேர்நிரை<br>புளிமாங்கனி=நிரைநேர்நிரை<br>கருவிளங்கனி=நிரைநிரைநிரை<br>கூவிளங்கனி=நேர்நிரைநிரை | இவை கனிச்சீரெனவும் வஞ்சிச் சீரெனவும் படும். |

தேமா - புளிமா - கருவிளம் - கூவிள - மிவற்றுடன், தண்பூ - நறும்பூ தண்ணிழல் - நறுநிழல் என்னும் நான்கையு முறழ்ந்தாற் பொதுச்சீர் பதினாறாகுமென்க.

அசைச்சீர் வெண்பாவி னிறுதியில் வரும். இயற்சீர் அகவலிலும் வெண்பாவிலும் வரும். நேரீற்ற வுரிச்சீர் வெண்பாவிலும் நிரையீற்ற வுரிச்சீர் வஞ்சியிலும் வரும். பொதுச்சீரு முரிச்சீர்போன்று நிற்பினும் வெண்பாவினுள் வாராது. ஆசிரியத்துள்ளும் கலியுள்ளும் குற்றுகரம் வந்தாலன்றி வாராது.

காய்முன் னேர் வருவது வெண்சீர் வெண்டளை, மாமுன்னிரையும் விளமுன்னேரும் வருவது இயற்சீர் வெண்டளை, நேர் முன்னேர் வருவது நேரொன்றாசிரியத்தளை, நிரை முன்னிரை வருவது நிரையொன்றாசிரியத்தளையாம்.

தளைகள் ஒன்றும் பலவு மடுத்துவருவது அடியெனப்படும். அவ்வடிகள் இருசீரான் வந்த குறளடியென்றும், முச்சீரான் வந்த சிந்தடியென்றும், நாற்சீரான் வந்த அளவடியென்றும் ஐஞ்சீரான்வந்த நெடிலடியென்றும் ஐந்தின் மேற்படவந்த கழில் நெடிலடியென்றுஞ் சொல்லப்படும்.

தொடுக்கப்படுவது தொடையாம். அது எதுகையும் மோனையுமென விரு வகைப்படும். அடிகடோறும் முதலெழுத் தளவொத்து நிற்க விரண்டா மெழுத்தொன்றி வருவதும் மூன்றாமெழுத்து முதலியன வொன்றிவருவது மெதுகைத்தொடையாம்.

"பேதைமடமயிலைச் சூழும் பிணைமான்போற்
கோதைமடமானைக் கொண்டணைந்த - மாதர்."

இவ்வெண்பாவில் முதலெழுத் தளவொத்து நிற்க விரண்டாமெழுத் தொன்றிவந்தது.

"விண்ணரசர்நிற்க வெறித்தேன்மணமாலை
மண்ணரசர்க்கீந்த மடமாதின் - எண்ணம்."

இதில் மூன்றாமெழுத்தொன்றி வந்தது. ஓரடியின் முதற்சீரின் முத லெழுத்தோடு அவ்வடியின் மற்ற இரண்டு, மூன்று, நான்காஞ்சீர்களின் முத லெழுத்தொன்றி வருவது மோனையெனப்படும்.

"தம்பியர்கள் தற்சூழ."—இரண்டாஞ்சீரின் முதலெழுத்தொன்றல்.

"செந்தேன் மொழியாள் செறியழக."—மூன்றாஞ்சீரின் முதலெழுத் தொன்றல்.

"சந்தக்கழற்றாமரையுஞ் சதங்கையணி."—நான்காவது சீரின் முதலெ ழுத்தொன்றல்.

நான்குசீரின் முதலெழுத்து மொன்றிவருவது முற்று மோனையெனப் படும்.

| | | |
|---|---|---|
| அ. ஆ. ஐ. ஔ. தம்முளினமாம். | இ. ஈ. எ. ஏ. உ. ஊ. ஒ. ஓ. தம்முளினமாம். | ஞ. ந. ம. வ. ச. த. தம்முளினமாம். |

[செய்யுள்]

நால்வகைப்பாக்களோடும் பா, துறை, தாழிசை, விருத்தம் என்னும் நான் கையு முறழ்ந்தாற் பாக்கள் பதினாறாம். அவற்றுடன் மருட்பா வொன்றையுங் கூட்டிப் பாவினம் பதினேழாதல் காண்க-

இவற்றுள், வெண்பா, கலித்துறை, விருத்தமென்பன, பெரும்பான்மை பற்றி வருதலானும், மாணுக்கர் அவற்றை அறித லவானுகூலத்திற் கின்றிய மையா வவசியமாயிருத்தலானு மவைகளினிலக்கணங்களை மாத்திர மிங்ஙனஞ் சுருக்கிக்கூறுவேன்.

[வெண்பாவிலக்கணம்.]

1. முதன் மூன்றடிகள் நாற்சீராவிறும்.
2. நான்காமடிமுச் சீராயிறும்,

3. உரிச்சீரு மியற்சீரும் பெற்றியலும்.
4. இயற்சீர், வெண்சீர், வெண்டளைகளைப் பெறும்.
5. காசு, நாள், மலர், பிறப்பு என்னும் வாய்பாட்டான் முடியும்.
6. தனிச்சொற்பெற்று ஒருவிகற்பமாயு மிருவிகற்பமாயும்வரும்.

[வெண்பாக்கள். (1) நேரிசை. (2) இன்னிசை. (3) குறள். (4) சிந்தியல். (5) பஃறொடை என ஐவகைப்படும்.]

[இருவிகற்பமாய் வந்த - நேரிசை, வெண்பா.]

1. மறைமுதல்வ | நீயிங்கே | வந்தருளப் | பெற்றேன்
பிறவிப் | பெருந்துயர | மெல்லா | மறவே
பிழைத்தேன்யா | னொன்றுனைப் | பேராழி | யானை
அழைத்தேவல் | கொண்ட | வரசு.

நிரை நிரை நேர் | நேர் நேர் நேர் | நேர் நிரை நேர் | நேர் நேர்,
நிரை நேர் | நிரை நிரை நேர் | நேர் நேர் | நிரை நேர்,
நிரை நேர் நேர் | நேர் நேர் நேர் | நேர் நேர் நேர் | நேர் நேர்,
நிரை நேர் நேர் | நேர் நேர் | நிரைநேர். [பிறப்பென்னும் வாய்பாடு.]

[ஒரு விகற்பமாய்வந்த இன்னிசை வெண்பா.]

2. துகடீர் | பெருஞ்செல்வந் | தோன்றியக்காற் | றொட்டுப்
பகடு | நடந்தகூழ் | பல்லாரோ | டுண்க
வகடுற | யார்மாட்டு | நில்லாது | செல்வஞ்
சகடக்காற் | போல | வரும்.

நிரை நேர் | நிரை நேர் நேர் | நேர் நிரை நேர் | நேர் நேர்,
நிரை நேர் | நிரை நிரை | நேர் நேர் நேர் | நேர் நேர்,
நிரை நிரை | நேர் நேர் நேர் | நேர் நேர் நேர் | நேர் நேர்,
நிரை நேர் நேர் | நேர் நேர் | மலர்.

[ஒரு விகற்பமாய்வந்த குறள் வெண்பா.]

3. மலர்மிசை | யேகினான் | மாணடி | சேர்ந்தார்
நிலமிசை | நீடுவாழ் | வார்.

நிரை நிரை | நேர் நிரை | நேர் நிரை | நேர் நேர்
நிரை நிரை | நேர் நிரை | நேர். [நாள் வாய்பாடு]

[ஒரு விகற்பமாய்வந்த நேரிசைச்சிந்தியல் வெண்பா.]

4. அறிந்தானை | யேற்றி | யறிவாங் | கறிந்து
செறிந்தார்க்குச் | செவ்வ | னுரைப்பச் | சிறந்தார்
சிறந்தமை | யாராய்ந்து | கொண்டு.

நிரை நேர் நேர் | நேர் நேர் | நிரை நேர் | நிரை நேர்,
நிரை நேர் நேர் | நேர் நிரை | நேர் நேர் | நிரை நேர்,
நிரை நிரை | நேர் நேர் நேர் | நேர் நேர். [காசு]

[பல விகற்பமாய் வந்த பஃறொடை வெண்பா.]

5. வையக | மெல்லாங் | கழனியாய் | வையகத்துட்
செய்யகமே | நாற்றிசையின் | றேயங்கள் | செய்யகத்துள்
வான்கரும்பே | தொண்டை | வளநாடு | வான்கரும்பின்
சாறேயந் | நாட்டிற் | றலையூர்கள் | சாறட்ட
கட்டியே | கச்சிப் | புறமெல்லாம் | கட்டியுட்
டாரேனற்ற | மான | சருக்கரை | மாமணியே
யாரேனற்றான் | கச்சி | யகம்.

நேர் நிரை | நேர் நேர் | நிரை நிரை | நேர் நிரை நேர்,
நேர் நிரை நேர் | நேர் நிரை நேர் | நேர் நேர் நேர் | நேர் நிரை நேர்,
நேர் நிரை நேர் | நேர் நேர் | நிரை நேர் நேர் | நேர் நிரை நேர்,
நேர் நேர் நேர் | நேர் நேர் | நிரை நேர் நேர் | நேர் நேர் நேர்,
நேர் நிரை | நேர் நேர் | நிரை நேர் நேர் | நேர் நிரை,
நேர் நேர் நேர் | நேர் நேர் | நிரை நிரை | நேர் நிரை நேர்,
நேர் நேர் நேர் | நேர் நேர் | மலர். [வாய்பாடு]

## கலித்துறை.

நெடிலடியாக வொத்த நான்கடியால்வருஞ் செய்யுளெல்லாங், கலித்துறையெனப்படும். அது விருத்தக் கலித்துறை, கோவைக் கலித்துறை, திலதக் கலித்துறை, கட்டளைக் கலித்துறை யெனப் பலவகைப்படும்,

[கட்டளைக் கலித்துறை—இலக்கணம்.]

(1) முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் நிற்கும், (2) கடைச்சீர் விளங்காயாய் வரும், (3) இயற்சீரன்றி இடைநேர் வெண்சீர் விரவும், (4) ஐந்தாஞ்சீரின் கண்ணே மோனைவரும், (5) ஈற்றுச்சீரி னிறுதியில் ஈற்

றசை யேகாரம்வரும், (6) நேர்முதலாய்வரு மடியொற் றொழித்துப் பதினா றெழுத்தும், நிரைமுதலாய் வரின் ஒற்றொழித்துப் பதினேழெழுத்தும் வரும்.

அயில்கொண் | டவுண்கண் | மடமாது | சொற்றவை | யந்தரத்தே
பயில்கொண் | டவர்க்கி | யசரீரி | யோர்ந்தினிப் | பையலென
வெயில்கொண் | டபாணமே | போக்கிய | தென்றுவி | மேல்வருந்தாத்
துயில்கொண் | டநன்மை | துணையெனச் | சொற்றிடுந் | தோன்றலுக்கே.

நிரை நேர் | நிரை நேர் | நிரை நேர் நேர் | நேர் நிரை | நேர் நிரை நேர்,
நிரை நேர் | நிரை நேர் | நிரை நேர் நேர் | நேர் நிரை | நேர் நிரை நேர்,
நிரை நேர் | நிரை நிரை | நேர் நிரை | நேர் நேர் நேர் | நேர் நிரை நேர்,
நிரை நேர் | நிரை நேர் | நிரை நிரை | நேர் நிரை | நேர் நிரை நேர்.

[விருத்த விலக்கணம்.]

எல்லாச்சீரும், எல்லாத் தளையும், எல்லாவடியும், விருத்தத்தின் கண்ணே வரும். இன்னு மோரெதுகையாய் நான்கடியாக வொத்தவடியானுஞ் சீரானும் வரும். மாவீற்ற சீரிரண்டும், விளவீற்ற சீரிரண்டும், காயீற்றசீர் நான்கும், தம்முளொத்த சீரெனப்படும். அன்றியும் வஞ்சிச் சீரும், பொதுச்சீருந் தத்தமிடையினின்ற மாவும் விளமும்பற்றி யொப்புமை கொள்க. ஆகயி னோரடிக் கண்ணே தேமாவந்த விடத்து மற்றோரடிக்கட் டேமா வாயினும், புளிமாவாயினும் வரப்பெறினோசை வழுவாது. அன்றியும் கருவிளம் வந்த விடத்திற் கூவிளமும், தேமாங்காய் வந்தவிடத்து மற்றைக்காயும், கனிவந்த விடத்துக் கனியும் வரப்பெறினோசை வழுவாதென்க.

[அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.]

புளிமாங்காய் | புளிமா | தேமா | கருவிளம் | புளிமா | தேமா.

1. மொழியொன்று புகலா யாயின் முறுவலும் புரியா யாயின்
விழியொன்று நோக்கா யாயின் விரகமிக் குழல்வே னுய்யும்
வழியொன்று காட்டா யாயின் மனமுஞ்சற் றருகா யாயிற்
பழியொன்று நின்பாற் சூழும் பராமுகந் தவிர்தி யென்றான்.

[கலிவிருத்தம்.]

கூவிளம் | கருவிளம் | தேமா | கூவிளம்.

2. வாங்கிய சிலைநுதல் வள்ளி யென்பவள்
பூங்குர லேனலம் புனத்து ளேகியே
யாங்கன மிருத்தலு மயற்பு னத்தமர்
பாங்கிவந் தடிமுறை பணிந்து நண்ணினள்.

## செய்யுள் விகற்பம்.

**முத்தகம்.** தொடர்பின்றித் தனியே நின்று ஒரு பொருளைக் கொண்டு முடியும். **குளகம்,** பலபாட் டொருவினை கொள்ளும். **தொகை நிலைச்செய்யுள்,** பலவகைத் தொகைப் பாட்டிணைந்து வரும். **தொடர்நிலைச் செய்யுள்,** பலபாட்டாகிப் பொருளாலுஞ் சொல்லாலுந் தொடர்ந்து ஒருப்படவருவன. சிந்தாமணி முதலியன. இனிப்பொருள்சொல் இரண்டாலுந் தொடரின் அந்தாதியெனப்படும். **காவியம்,** அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு மொன்றும்பலவுங் குறைந்துவருவது. **புராணம்,** பல கதைகளை விளக்கிவருவது. **பெருங்காப்பியம்,** நிகரில்லாத பா நாயகனைக் கொண்டும், அறம்பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் விளைவித்தற் கேதுவாயுள்ளது. அது தெய்வவணக்கம், செய்பொரு ளுரைத்தல், இரண்டையுஞ் சிறப்புப் பாயிரமாய்க் கொண்டு, மலை, கடல், நாடு, நகர் பருவம் பருதியுதையம், மதியுதையம் என்னுமிவற்றின் வருணனையும், மணஞ்செய்தல், முடிசூடல், பொழில் விளையாடல், புனல்விளையாடல், சிறுவரைப் பெறுதல், கலவி, புலவி யிவைகளைப் புகழ்தல், மந்திரம், செலவு, போர், வெற்றி யிவைகளைத் தொடர்ந்து கூறலுமாம். **பரணி,** போர்முகத்தாயிரம் யானையைக்கொன்ற வீரனைப் பாட்டுநாயகனாகக் கொண்டு பாடுதலாம். அதிலுறுப்பாவன :— கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, பாலைநிலம், காளிகோயில், பேயோடு காளியும், காளியோடு பேயும் சொல்லுதல். இவைகளால் நாயகன் சீர்த்தி விளக்கலும், அவன்வழியாய் வெம்போர் விரும்பலுமாம். **உலா,** மலை, ஆறு, நாடு, ஊர், சேனை, குதிரை, யானை, கொடி, முரசு, செங்கோல் ஆகிய விப் பத்துறுப்புகளையும் விளக்கியு மிவைகளையுடைய குலமகன் நெடுந்தெரு பவனிபோம்போது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற எழுவகைப் பெண்களுமவனைத் தொழுதலும் புகழ்தலுமான வற்றை யேழுறுப்பாகவிளக்கிக் கலிவெண்பாவாற் பாடுவது.

மடல், உலாவுறுப்போடும் பாட்டுடை நாயகனைக் கண்ணுற்றமாதர்க் கெழும்பியகாதலை மற்றோருறுப்பாகக்கூட்டி அவன்பெயர் எதுகையாகக்கொண்டு ஒரெதுகையோடு பாவெல்லாம்வந்து உலாப்போல் நிற்கக் கலிவெண்பாவாற் பாடுவது. அங்கமாலை கலிவெண்பா வாலாயினும் வெளிவிருத்தத் தாலாயினும் உடலிலுள்ள உறுப்புகளெல்லாந் தோன்ற ஒவ்வொன்றாய் விரித்துப்பாடுவது. பாதந்தொட்டு மேலேறித்தலை மயிரீறுகப்புகழ்ந்து பாடுவது பாதாதிகேசமெனவும், சிரந்தொட்டுப்பாத மீறுயுள்ளவற்றை புகழ்ந்துபாடுவது கேசாதிபாதமெனவும் சொல்லப்படும். **ஆற்றுப்படை** ஒருவனைப்புகழ்ந்துவாழ்த்தப் புலவ

ரும் பாடுவோரும் பொருநரும், கூத்தருமாகிய இவர்கள் அல்லது ஒருபாலரா வழியெதிர்ப்பட்டதாகப் புகழ்ந்து ஆசிரியப்பாவாற் பாடுவது. ஆறு=வழி படை=படுத்தல். **செருக்களவஞ்சி** இரதம், கசம், துரகம், பாதாதியென விருபடை நாற்றானை யெதிர்த்துக்கணை தொடுதலும், வளை, வேல், எறிதலும் கைவாள் வீசலும், வலம் இடம் சுழலுஞ்சேரும், சினத்தகளிறும் பாயும் பரியும் ஒலிமிகுத்த பதாதியும், இவையுமின்னோரன்னவுந் தோன்றப் பற்பலவஞ்சிப் பாவொடு தொடுத்தசெய்யுளாம். **வரலாற்றுவஞ்சி** அறம்பொருள் இன்பம் வீடு எனனும் நான்கும் தோன்றவஞ்சிப்பாவான் முடித்தசெய்யுள். **அட்டமங்கலம்** பாட்டுடைத்தலைவனைக் கவிதோறும், தெய்வம் காப்பவென்று ஆசிரியவிருத்தமெட்டான்முடிவது. **பலசந்தமாலை** அந்தாதியாக நூறு ஆசிரியவிருத்தம், பாடிப் பத்து ஒவ்வொரு சந்தமாகத்தொடுப்பது. **ஊசல்** தலைமகனையு மவன் சுற்றத்தாரையும், ஆசிரியவிருத்தத்தாலாயினும கலித்தாழிசையாலாயினும் பாடுவது. **கோவை** பொருளதிகாரத்தின் கண்ணே காட்டிய களவு கற்பு என்னு மிருபாலையுமுடைய அகப்பொருட்டிணைக ளேழும விளக்கிக் கலித்துறை நானூறாற்பாடுவது. **இரட்டைமாலை** எப்பொருண் மேலும் முறையேகலந்து பத்துவெண்பாவும் பத்துக்கலித்துறையுமாய் வரத்தொடுப்பது. **மணிமாலை** எப்பொருண் மேலும் வெண்பா விருபதும், கலித்துறை நாற்பதும் வரப்பாடுவது **மும்மணிக்கோவை** அந்தாதியாகவும் முப்பதுபாட்டாகவும், அகவல் வெண்பா, கலித்துறையென விம்மூன்றும் முறையே வரத்தொடுப்பது இவ்வொழுங்குமாறி வெண்பா கலித்துறை அகவலாய்த்தொடுத்துவருவது மும்மணிமாலை யெனப்படும். **இணைமணிமாலை** வெண்பா, கலித்துறை ஆசிரியப்பா, ஆசிரியவிருத்தம என்னவிந்நான்கும், கலந்து நூறாய்வருவது. இந்நான்குமைந்தாய் வருவது, அலங்கார பஞ்சகமெனப்படும. **சதகம்** அகப்பொருள், அல்லது புறப்பொருள் ஒன்றன்மேற் கற்பித்து நூறுசெய்யுளாற் கூறுவது, **தூது** தலைமகனுந் தலைவியுந் தமமுடைய காதலைப்பாணன், பாங்கிமுதலிய பேரிடத்திலாவது கிளிமுதலிய பட்சிகளிடத்தாவது தூதுபோவெனத் தம் காதலைச்சொல்லிக் கலிவெண்பா வினாற்பாடுவது. **குழமகன்** கலிவெண்பாவால் மாதர்கடங்கையிற் கண்ட விளமைத் தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து கூறுவது. **நயனப்பத்துபயோதரப்பத்து** கண்ணையும் முலையையும் வியந்துபத்துச் செய்யுளாற் பாடுவது.

## செய்யுள் பொருத்தம்.

(1) மங்கலம் (2) சொல் (3) எழுத்து (4) தானம் (5) பால் (6) உணா (7) வருணம (8) நாள் (9) கதி (10) கணம். இப்பத்துஞ் செய்யுட் பொருத்தமாம். கங்கை மலைநிலம், கார், புயல்பொன், மணி, கடல், சொல், கரி,

பரி, சீர், புகழ், எழுத்து, அலர், திங்கள், தினகரன், தேர், வயல், அமிழ்தம், திரு, உலகு, ஆரணம், நீர், என்று சொல்லப்படுவனவும், பிறவுமிவற்றின் பரியாய நாமங்களும், மங்கலச்சொல் எனப்படும். சிறுபான்மை அடைமொழிகள் முதலாயும்வரும், "அகரமுதல்" என்றார் திருவள்ளுவர், "கருவிமா மழை" யென்று அடைகொடுத்து நைடதத்தார் கூறினார்; நன்னூலில் "மலர்தலை யுலகம்" என்றுஞ், சிந்தாமணியில் "மூவா முதலா வுலகம்" என்றும், வந்தமை காண்க.

சொல்.—சொன்மங்கலமாயிருப்பினு மையத்தையுமரிதுணர் சொல்லையும், சந்திவகையாற்றிரிந்த சொல்லையும் வழுவென்பர் "கடறவழுலகம்," "தேருருடிரிதரு," எனபனவழுவாம். எழுத்து.—முதற்சீரிலொற்று முயிர்மெய்யும் உயிருமொற்றைபட மூன்றுமைந்து மேழுமாய் நிற்பின் நல்லதாம், இரண்டும் நான்குமாறுமாக விரட்டையாய் வரின்வழுவாம். தானம்-ஐந்து குற்றெழுத்தையு மவற்றவற்றொத்த நெடிலையுங்கூட்டி அம் வருந்தானத்தில் ஐயையும் உவ்வருந்தானத்தில் ஔவையுஞ்சேர்த்தால் ஐந்தானமாகும். பால்-குற்றெழுத்தெல்லாம், ஆண்பாலெனவும், நெட்டெழுத்தெல்லாம், பெண்பாலெனவுஞ் சொல்வர். அவற்றுண் முதலிலே மாந்தரைப்புகழக் குற்றெழுத்தும், மாதரைப்புகழ நெட்டெழுத்தும்வரின் சிறப்பாம், உணவு.—அ. இ. உ. எ. என நான்கும், க. ச. த. ந. ப. ம. வ என்னும் எழுயிரும் அமுதெழுத் தெனப்படும், இவைமுன்னே சொல்லப்பட்ட தசாங்கத்தின் முதற்சீர்க்கு மயற்குமாம். அன்றியும், யா. போ. ரா. ரோ. லா. லோ. என்பவையும், இரண்டளபெடையும், அகரக் குறுக்கமும், ஆய்தமும், நச்செழுத்தாகும் இவை முதற்சீர்க்கண்ணும் தசாங்கத்தி னயற்குமாகா.

எஞ்சிய, நாற்பொருத்தங்களும் விசேஷ மின்மையால் ஈண்டு கூறுகொழிக்கப்பட்டன.

பாவினங்களின் சாதி.

| பா. | சாதி. | நிலம். | நிறம். | நாள். | இராசி. | கிரகம். |
|---|---|---|---|---|---|---|
| வெண்பா. | அந்தணர். | முல்லை. | வெள். | கார்த்திகை. &c. | கற்கட. கும்பம். &c. | தி. வி. &c. |
| ஆசிரியப் பா. | அரசர். | குறிஞ்சி | சிவப்பு | மகம். பூரம். &c. | மேடம். தனுசு. &c. | ஞா. செ. &c. |
| கலிப்பா. | வணிகர். | மருதம். | பொன். | அனு. கேட். &c. | மிதுனம். துலா. &c. | பு. ச. &c. |
| வஞ்சிப்பா. | சூத்திரர். | நெய்தல் | கருமை | அவி. சதை. &e. | இடபம். கன்னி. &c. | சுக்கிர &c. |

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
[illegible] நிலையம்

# ௯. அதிகாரம்.

## அணி.

மகளிர்க்கு மாலையுஞ், சுவர்க்குச் சித்திரமு மென்னக் கற்றோருரைகள் கவின்பெற்று எல்லோர்க்கு மெளிதில் விளங்கும் பொருட்டு, ஊன்றிய வுணர்ச்சி, பொருட்சுவை, சொற்சுவை, சத்தவின்பங்கள் தோன்றச் சிறப்பமைத்துச் சொல்வது அணியெனப்படும். அவ்வணியானது, சொல் அணி, பொருள் அணி யென விருவகையாம்.

### [சொல் அணி.]

சொன் மாறுதலுட னணி கெட்டுப்போமாயினது சொல் லணியெனப்படும். உ-ம் முல்லை நகைத்தன என்பது முல்லை, பூத்ததென்று நிற்குமாயி னணி கெட்டுப்போகும். சொல் அணி - (1) சொன்மறிதல், (2) சொன் மிகுதல், (3) சொல் ஒழிதல், (4) சொல் ஒப்பல என நான்குவகைப்படும். பொருட்பெயர் மாறி யொன்றன் பெயர் பிறிதொன்றிற் குரைப்பது மறிநிலையணி யெனப்படும். அது பின்வரு மாதிரியாய் நான்கு வகுப்புகளாகும்.

(a) பண்பு மறிநிலை உ-ம் குவளை விளிப்பன.
(b) முதன்மறிநிலை ,, பூநிழற சோலை, நறும் பொழில்.
(c) காரணமறிநிலை ,, எரினன்று எருவிடுதல்.
(d) குறிப்புமறிநிலை ,, திங்கள் ஒன்பதுஞ் சென்றன.

இவ்வகைகளில் முறையே கண்ணின் றொழிற் பண்பு, குவளைக்கும், மரமாகிய முதற்பொருள் செய்நிழல், அதன் சினையாகிய பூவிற்கும், இன்றும் மலராகிய சினைப்பொருளின் காரியமாகிய வாசனை, பொழிலாகிய முதற் பொருண் மேலும், எரின் காரியமாகிய உழுந்தொழில் அதன் காரணத்திலும் "திங்கள் ஒன்பது" என்பது குறிப்பினால் மாசத்தின்மேலு நின்றமை காண்க.

வந்தசொல் மறுபடியும் வருதல், சொல் மிகுதல் அணியாம், அல்லது மடக்கணியாம். அது இடையிடா வரவு மிடையிட் டவரவு மென விருவகைப்படும்.

என்றனை யென்றனை நீயே [முதல்யிடை யிடாமடக்கு.]

காப்பார் கண்ணிணைபோற் காப்பார் கருதியதந்து. [முதல் இடையிட்ட மடக்கு] வந்திப்பேனானானே, [கடையிடையிடா மடக்கு] அரசனும்

பணியச் செய்வது பணமே உரனையார்க்கும் கொடுப்பது பணமே. [கடையிடையிட்ட மடக்கு] இன்னு மிம்மடக்குகளானவை அதிகமாய் வருமெனக் கொள்க.

சொல் ஒழிதலாவது உணர்தற் கெளிதாய விடத்துப், பெயர், வினை, உம்மை, சொல், பிரிப்பு, என, ஒழியிசை, எதிர்மறை, இசை, குறிப்பு, என்பவற்றை யொழித் துரைத்தலாம்.

சொல் ஒப்புமைபற்றி வருவனவற்றை யொப்பணி யென்று சொல்லப்படும். அது திரிபியைபு, ஒழுகிசை, இயைபிசை, சமநிலையென நால்வகைப்படும். ஒருபெயரு மொருவினையும் பல வேறு உருபு பெற்றும், பலபெயர் பல வினையோருருபு பெற்றும், பலவழி வரத்தொடுப்பது திரிபியைபாம். உ-ம். "வழுவார்க்கு நீநிலையே, மருள்வார்க்கு, நீதெளிவே அழுவார்க்கு நீகளியே அயர்வார்க்கு நீதிதியே" என்றும் விரைவினாற் காற்றெனவும், முழக்கத்தினாற் கடலென்வும், அச்சத்தா லிடியெனவும், செய்கொலையாற் கூற்றெனவும், மதகரிவந் தெதிர்த்தப்படை முருக்கினதே. பலபெயரோருருபுபெற் றத்திரிபியைபி னானமை காண்க.

பெயரு மீரெச்சமும் உரியு மிடையும் பல பல வசனத்தி லொத்துவர வருமெழுத் தென்னொன்றுவது, ஒழுகிசை. உ-ம். "விடாது நறுநெய்பூசி நீங்கா தொளிமணி சேர்த்தி மங்காது மதுமலர்சூடி, ஒழுகிடவருத்து வனப் புறவளைத்துப் புடைப்பெழச் சொருகித் தமக் கழகாகவும், பிறர்க்கிழிவாகவும், நள்ளிருட் கூந்தலை அளகமாகச் சேர்த்தவை ரறிவிலையா தர் அன்றே."

வசனங்களினிறுதி மொழிகள் தம்முள் உருபினொப்புமையா லிசைந்துவருவது இயைபிசை யெனப்படும். உ-ம். "கைநீட்டி, இருள் ஓட்டி, யொளிகாட்டி" எனவரும்.

இருமொழி பலமொழி தம்முண் மாத்திரையானும், ஓரெழுத்தானும், வேறுபாடின்றி யொத்துவருவது சமநிலையெனப்படும். உ-ம். எரியோ வெரியோர் வங்கட் டோன்றுவது, "பாடவோ, பாடவோ வந்தாய்" என்பதானு முணர்க.

## பொருள் அணி.

சொல் மாறினும், பொருள் மாறுபடாது நிற்கில், பொருள் அணியெனப்படும். சந்திரமுகம் என்பது மதிமுகமென நின்றபோதினும், பொருளு மணியுங் கெடாம னின்றமை காண்க.

உவமை யுருவக வொழிபே யையம்
எதிர்நிலை திரிபெடுத்துக் காட்டே
யகமுறு நினைப்பே யாகும் விளக்கே
காட்சி வேற்றுமை கருதுயர் நவிற்சி
புகழ்பொருளு வமையின் வருவிளக்கு
போற்றுந் தற்குறிப் பொப்புமை கூட்டம்
மிகவாய்ப் பயிலும் பலபடப் புனைவு
மேவுமியை பின்மையாகும் பலவே.

[உவமை.]

இரண்டு பொருட் கடம்முட் குணத்தானுந் தொழில் பயன் முதலிய வற்றானும், ஒத்தனவாகக் காட்டலாம். இது விரி, தொகையென விருவகைப் படும். உபமானம், உபமேயம், பொதுத் தன்மை, உவமையுருபென வின்னு ன்கும் விரிந்துவருவது விரியுவமை. உபமேய மொழிந்த மூன்றனுள் ஒன் றும் பலவும் மறைந்து வருவன தொகை யுவமையாம். "பால்போலு மின் சொல்" இது நான்குறுப்புகளும் வெளிப்பட நின்ற விரியுவமை. "புயற் கருங்குழலாள்" இதில் போலவென்னு முருபுதொகுதலாற் தொகையுவமை.

[உருவகம்.]

உபமானத்தை மிகை, குறை, யொற்றுமை, அவையின்மை முதலிய கார ணங்களினால் உபமேயத்தில் ஆரோபித்தல். உ-ம். "இம்மான் முகமதியே யின்பு செய்யும்" இதில் மதியும், முகமு மபேதமாய் நின்றது. [ஆரோபம்- அபேத வுணர்ச்சி.]

[ஒழிபு.]

உபமான முபமேயங்களி லொன்றை இயல்பு, வேறுபாடு, காரணம், மயக்கம், சாமாத்தியம் முதலிய வேறுக்களால் மறைத்துச் சொல்வது. உ-ம்.

"பொங்குவெம்மை, பொழிதலினலிது - திங்களன்று தினகரன்றன்று- கங்குலாதலிற் கடனின்றெழீஇத் - தங்குறும்வட வைத்தழலதாகுமே" இது காரண ஒழிப்பு.

[ஐயம்.]

ஒப்புமையால் ஒருபொருளைக்கண்டு இதுவோ வெனச்சந்தேகித்தல், உ-ம். "தாதளவி வண்டுதமொறுந் தாமரைகொல் - மாதர்விழியுலவும் வாண் முகங்கொல்."

[எதிர்நிலே.]

அவர்ணியத்தை வர்ணியமாக்கியும், வர்ணியத்தையிகழ்ந்தும், அவர்ணியத்தை யிகழ்ந்தும், பலவாறுசொல்லப்படும். இது உவமையணிக்கு மாறாய் நிற்குமென்க. உ-ம, அணங்குமுகம் போல்மதி.

[எடுத்துக்காட்டு]

இயல்பிற்பின்னங்களா யிருந்தாலுமொன்றற் கொன்றுள்ள வொப்புமையினால், அபின்னங்களாகிய, உபமான உபமேயங்களுடைய தருமங்களை இரண்டு வாக்கியங்களிலே தனித்தனிசொல்லுதலாம், உ-ம், அகரமுதலவெழுத்தெல்லாம மாதிபகவன் முதற்றேயுலகு.

[நினைப்பு.]

ஒருபொருளைக்கண்டு ஒப்புமையினாலே மற்றொரு பொருளை நினைத்தலாம், உ-ம், காதலுறகஞ்ச மலர்கண்ட வெனதுமனம், கோதை முகந்தனைநினைக்கும்.

[விளக்கணி.]

வர்ணியவர்ணியங்கள், ஒருபொருளின்முடிதலாம், உ-ம், ஆதபத்தாற் சூரியனும் பிரதாபத்தினான் மேதகு வேந்தும் விளங்குமே, இதிற் சூரியனும் வேந்தனும், விளங்குதலாகிய வொருதருமத்தின் முடிந்தன.

[காட்சியணி.]

இரண்டுவாக்கிய அர்த்தங்களி னைக்கியத்தை ஆரோபித்தலாம். உ-ம். வள்ளற்குமுனிவின்மை, திங்கட்குக்களங்க மின்மையாம். இங்கே கோபமின்மையிற்களங்கமின்மை யாரோபிக்கப்பட்டது.

[வேற்றுமை அணி.]

உபமான உபமேயங்களில் ஒன்றை விசேடமுடைத்தாய்ச் சொல்வது. உ-ம், மதியும் மங்கையின் முகமுமொக்கும், மதிமண்டலத்தி னிருளைப்போக்கும், மங்கைமுகமோ மனமயக்கத்தையாக்கும், இதில் உபமானமாகிய மதிக்கு இருள்போக்குதல் அதிகமாகச் சொல்லப்பட்டது.

[உயர்வுநவிற்சி அணி.]

ஒருபொருளானது தன்னியற்பெயராற் சொல்லப்படாமற் கேட்போரை மகிழ்வித்தற்கு உபமேயத்தை உபமானச் சொல்லா விலக்கணையாகச் சொல்லுதல், உ-ம், புயலே சுமந்து பிறையே யணிந்து கயலேமணக் துகவி

னுங்கொடி. புயல்முதலிய உபமானங்கள் கூந்தன்முதலிய உபமேயங்களை யிலக்கணையால் விளக்கிற்று.

[புகழ்பொருள் உவமை அணி.]

உபமானமாய் சொல்லப்பட்டதை உபமேயமாக்கியும், உபமேயத்தை உபமானமாக்கியும் சொல்லுதல். உ - ம். தாமரைபோன் மலரு நின்முகம், நின்முகம்போற்றாமரையுஞ் செவ்விதரும்.

[பின்வருவிளக்கணி.]

முன்வாக்கியத்தில் வந்தவிளக்கச் சொல்லேனும் பொருளேனும் பின்னும் வாக்கியத்தில் வருதலாம். உ - ம். மாரனமூங்கம் பெய்யுமான் கண்ணமூங்கம் பெய்யும், வீரனின்று வாராவிடின்."

[தற்குறிப்பணி.]

ஒருபொருளினது சம்பந்தத்தை யின்னொருபொருளினது ஒற்றுமையால் அது இதுவல்லவென நிச்சயித்தறிந்தபோதும், அதுவாயிருக்குமென்று ஐயுறல். உ - ம். நேமிப்படைத் திரளிப்நெஞ்சங்களிற்றோன்றுங் - காமத் தழலிற்கதித்தோங்கு - தூமத்தின் - கூட்டமெனவே குறிக்கின்றேன், மேதினிமே - லோட்டமறை யிருளைநான்.

(ஒப்புமைக்கூட்டம்.)

வர்ணியங்களாகிய பலவற்றையேனும், அவர்ணியங்களாகிய பலவற்றையேனும், பொதுவாகிய வொருபொருளான் முடித்தலாம். உ - ம். மாமதிதோன்றக்கணவர்த்தீர்ந்த மடவார்முகமுந் தாமரைப்பூவுஞ் சோர்ந்தன, இது சோருதல் என்னுமொருபொருட் கொண்டுமுடிந்தது.

(பலபடபுனையுமணி.)

ஒருபொருளின்மேற் பலரும் பலபொருளை ஆரோபித்தல். உ - ம். ஆரணங்காணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின் காரணங்காணென்பர், காமுகரானவர் காம நன்னூலிதென்பர், என வொன்றிற்பலவற்றையாரோபித்தமைகாண்க.

(இயைபின்மை அணி.)

ஒருபொருளை உபமானமாகவும், உபமேயமாகவுஞ் சொல்லுதல். உ - ம். தேனேயனைய மொழிச்சேயிழையாள்தானே உவமைதனக்கு இப்பொருளுக்கு ஒப்புவேறொன்றில்லை யெனப்படும்.

விதிவிலக்கேது வீறுகோளே
வியப்பே தகுதியொழித்துக்காட்டல்
துதிதருஞ்சிறப்புத் துன்பமின்பம்
பொய்த்தற்குறிப்பு பொருந்துசமாதி
அதிக விகட்சியடையும் பெருமை
தன்குணமிகையே மாற்றலாகும்
துதிதரும் பொதுமை மனத்தின்மலர்ச்சி
உய்த்துணர்வென் றோதுவரணியே.

(விதி அணி.)

உலகத்திற் பெருவழக்காகிய'வோர்விதியானதின்னுமோர் அபிப்பிராயத்தோடு கூடிவருதலாம். உ - ம்.

கற்றோன் கற்றோனே கலைவல்லார் முற்படின், இதில் கற்றவன் பெருமை மற்றும் நேரத்தி லறியப்படாமல் விருப்பினும் கற்றோர்கூடிய நேரத்தில் நன்கு மதிக்கப்படுமென்பது பெறப்பட்டது.

[விலக்கணி.]

வெளிப்படையாயும், அபிப்பிராயத்தோடுங் கூடிய பொருளை விலக்கிச் சொல்லுதல். உ - ம். சூதாடுவோய் சூதமன்று, சொரிகணைகண், பீதாடு பூசலிதுமெய். இதிற் போரிற் சூதில்லை யென்பது வெளிப்படையாயும். அன்று என்றதால் நீ போரிற் சமர்த்தன் அல்லன் என்பதும், விலக்கினமைகாண்க.

[ஏது. அணி.]

காரணகாரியங்களை யொருச்சேரச்சொல்லுதல், உ - ம். பெருந்திங்கட் டோன்றுமே, பெய்வளையார் நெஞ்சிற் பொருந்தூடறீர்த் தற்பொருட்டு இதில் தோன்றுதல் காரணம். ஊடல் தீர்த்தல். காரியம்.

[வீறுகோள்.]

இது செல்வமிகுதியைக் காட்டுதலாம் (உ - ம்.) குழைகொண்டு கோழியெறிந்தாள் என்பதில் செல்வமிகுதி தோன்றியது.

[கரவுவெளிப்படுமணி.]

ஒருவர் மறைத்த செய்கையைத் தானறிந்து தன் செய்கையால் அதை வெளிப்படுத்துதலாம், உ - ம். கடிமனைக்குக் காலைவரு காவலற்குத் துஞ்

கும்.—படிவிரித்தாளோ ரணங்குபாய் இதிற்றலைமகன் இரவில் வீட்டிலில்லை யென்பது அவள் செய்கையாகிய விரித்தலாற் றோன்றியது.

[சிறப்பணி.]

ஒப்புமையாற் பொதுமையுற்ற இரண்டிற்கு, ஓர் காரணத்தினால் வேற்றுமை வைப்பது. உ - ம். விதுவெழலுஞ் சோர்வுறலான் மின்னார் முகத்திற் பதுமமலர் வேறுபடும். [விது - சந்திரன்.]

[பொதுமைஅணி.]

ஒப்புமையால் இரண்டு பொருள்களுக்கு விசேஷந் தோன்றாமையாம், இதனை வடநூலார், சாமானிய அலங்காரமென்பர். உ - ம். வண்பதுமவாவி யடைந்தமடவார் வதனம் - பண்பினறியப்படா.

[வியப்பணி.]

ஒருபயனை கருதி அதற்குப் பகையாகிய முயற்சிசெய்தல். உ - ம். ஓதுந் திறத்திலுயர்ந்தோர்கள், தாழ்குவர் எப்போது முயர் வெய்தற் பொருட்டு.

[தகுதியணி.]

இதற்கிது தகுமெனக்கூறல் உ - ம். மகுடம் மன்னர்க்குரித்து.

[ஒழித்துக்காட்டணி.]

ஒருபொருள் ஓரிடத்திலில்லையென வொழித்து மற்றோரிடத் துண்டென்று நியமித்தலாம். உ - ம், சிந்து நிகர்தானையாய் நீத்தொழிலைச் செய்வோர்கள் அந்தணரோ வுண்டோட்டகத்து. இதில் ஒழிப்புச்சொல் தொக்கிநின்றது.

[தன்பவணி.]

விரும்பிய பொருளைத்தேடும்போது விரும்பாத பகைப்பொருள் கிடைத்தலாம். உ - ம். சோருஞ் சுடர்விளக்கைத் தூண்டுகையி லவிந்தது.

[இன்பஅணி.]

இது தேடிய பூடு காலில் அகப்பட்டாற்போல் விரும்பியகாரியஞ் சித்தித்தல். உ - ம். இரப்போன் கைக்கிடைத்த திருநிதியம்.

[பொய்த்தற்குறிப்பு.]

ஒருபொருளைப் பொய்யாக்குதற்கு மற்றொரு பொய்ப்பொருளைக் கற்பித்தல. உ - ம், விண்மலர்த்தார் வேய்ந்தோனே, வேசையனைத் தன்வசமாய்ப் பண்ணுதற்கு வல்லனென்பார்.''

[சமாதி அணி.]

ஒருவன் தானினைத்த காரியத்தை யின்னொரு காரணத்தி னுதவியாற் பெற்றுக்கொளல். உ-ம். மதிறுத லாட்கியானுடல் மாற்றத் தொழும்போது தவிமுகில் செய்தன் றொலித்து. இதில் முகில் ஒலிகேட்டுப் பயந்தோடித்தழு விளைள் என்பதாம்.

[இகழ்ச்சியணி.]

ஒன்றின் குணகுணங்கள் மற்றொன்றைச் சேராமையுணர்த்தல். உ-ம். சந்திரனைப்பார்த்து நாய்குரைத்தது. இதிற் குணங்கெட்ட நாயாற் குணவீன ஞ் சந்திரனைச் சாராமை காண்க.

ரி.)

மற்றொன்றின் சார்பினாற் றனதியற்கைக் குண மிகுதலாம். உ-ம். வார் செவிசேர்காவிமலர்மானனையாய் நின்கடைக்கட் பார்வையினான் மிக்ககரும் பண்பு.

(தன்குணமாறுதலணி.)

"மேரு வடைந்தகாக்கை" இதிற் கருநிறம்பொருந்திய காக்கை மேரு வின்சார்பினாற் பொன்னிற மாயிற்றென்க.

(அகமலர்ச்சியணி,)

குற்றமொன்று, இன்னொரு குற்றத்திற்குங், குணமொன்று, இன்னொரு குணத்திற்குங், காரணமாதல். உ-ம். அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தானு சுப்பிற்கு நல்ல படா அபறை கால்களையாக் குற்றத்தா லின்னோர் குற்றம் வந்தமைகாண்க.

(உய்த்துணர்வணி.)

ஒரு காரிய மிவ்வாறு முற்றுப் பெறுமென வூகித்தலாம். இதனை வட நூலார் சம்பாவனு அலங்காரமென்பர். உ-ம். சேடுறு நங்கோன் புகழைச் சேட னவிலத்தொடங்கிற் - பீடுறவே முற்றுப்பெறும்.

# ௰. அதிகாரம்.

## பஞ்சலக்கணப்பிரயோகம்.

பதவுரைசொற்றல், பண்பைவிளக்கல்,
இதமுறமுடித்த, வினிதாய்ப் புணர்த்தல்,
சொற்றொடர்விரித்தல், சொல்லின்பாலுள,
மற்றிலக்கணமே, மயங்காவைத்தல்,
அன்னுவயஞ்செய, லடையேயாப்பை
யின்னதென்றியம்ப, விடையேவிரவுந்
தொல்பொருட்கூறல், துவன்றுமணியைப்
பல்விதங்காட்டல், பலருமுணரப்
பஞ்சலக் கணப்பிரயோ
கஞ்செயலென்றே, கழறுவர்கற்றோர்.

செய்யுட்கண்ணே, பதவுரைசொல்லுதல், பதங்களின் தன்மையைவிளக்கல், அவைகளை யையந்திரிபறப் புணர்த்தியும் முடித்துங்காட்டல், சொற்றொடர்சொல்லி லக்கணங்களைச் செவ்வேமயங்காது கூறல், அந்நுவயஞ்செய்தல், யாப்பிலக்கணத்தின் பாகுபாடுகளை யியம்புதல், மேலுமகப்பொருள், புறப்பொருள், அணி முதலான வற்றைக் காட்டுதல் பஞ்சலக்கணப் பிரயோகமென்று சொல்லப்படும். பின்னேவருஞ்செய்யுட்களி லவைகளி னமைவைக் காண்க.

வெங்கதிரோன்றானும் விதர்ப்பன்றிரு மடந்தை
மங்கலநாட்காண வருவான்போற்—செங்குமுதம்
வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்குநன்னெஞ்சிற்
றீயடங்க வேறினன்றேர்.

(இ-ள்) [பதவுரை] வெங்கதிரோன்றானும் - வெம்மையுள்ள சூரியனும் - விதர்ப்பன்றிருமடந்தை - வீமராஜன்புத்திரியாகிய தமயந்தியினது - மங்கலநாட்காண - கலியாணதினத்தைப்பார்க்க - வருவான்போல் - வருகின்றவனைப்போல் - செங்குமுதம் - செவ்வல்லிகள் - வாயடங்க - முகங்குவியவும் - மன்னற்கும் - நளனுக்கும் - வஞ்சிக்கும் - தமயந்திக்கும் - நன்னெஞ்சில் - நல்லமனதில் - தீயடங்க - விரகாக்கினி தணிந்து போகவும் - தேர் ஏறினன் - இரதத்தின்மேலேறினன்.

[பதவிளக்கம்] வெங்கதிரோன் - வெவ்விய கிரணங்களை யுடையவன் - மடந்தை - பத்தொன்பது வயசுப்பெண் - வாயென்னுஞ் சினைப்பெயரீண்டு செவ்வல்லியெனும் முதலை யுணர்த்தி நின்றது - மன்னன் - நிலைபே றுடையவன் - வஞ்சி, நெஞ்சென்பன வீண்டாகு பெயர்களாய் நின்று முறையே பெண்ணையும் மனத்தையு முணர்த்தின.

[பதமுடிவு] வருவான் - வினையாலணையும் பெயர் - வாவென்னும் பகுதி குறுகி வ, என நின்று வ், என்னுமெதிர் காலவிடை நிலையும், ஆன் என்னும் விகுதியும், பெற்றுப் பகுதி யிடைநிலை யிரண்டிற்கும் நடுவில், ருகர மெய்விரி யப்பெற்று முடிந்தது.

[பதப்புணர்ச்சி] "கதிரோன்" "விதர்ப்பன்" "வாய்" "தீ" என்னுஞ் சொற்களுள், முன்னையவிரண்டும், "ணனவல்லினம்" என்னுஞ் சூத்திரவிதிப் படியும், ஏஞ்சியவிரண்டும், முறையே "உடன்மேல்" "இ ஈ ஐவழி" என்னுஞ் சூத்திரங்களின் விதிமுறையாயும் புணர்ந்தன.

[சொல்லிலக்கணம்] தீ - பால்பகா வஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர், அடங்கவென்னும் வினைகொண்டு முடிந்தது. அடங்க - காரணப் பொருட்டாய் நின்ற வினையெச்சம் எறிஞன் என்னும் வினை முற்றைப் பெற்று முடிந்தது. எறிஞன் - உயர்திணை யாண்பாற்படர்க்கை வினைமுற்று - கதிரோன் என்று மெழுவாய்கொண்டு முடிந்தது. தேர் - அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர், ஏழுனுருபு மறையப்பெற்று நின்றது.

[சொற்றொடரிலக்கணம்] தீயடங்க - எழுவாய்த்தொடர், அடங்கவெறிஞன - வினையெச்சத்தொடர், எறிஞன்றேர் - வினைமுற்றுத்தொடர்.

(அந்நுவயம்.) கதிரோன் - எழுவாய், எறிஞன் - பயனிலை, வெம் (வெம்மை) விசேடணம், விதர்ப்பன்றிருமடந்தை......அடங்க - ஆரோபணம், செயப்படு பொருள் குன்றிநின்றது.

(யாப்பு.) இவ்வெண்பா இருவிகற்பமாய்த் தனிச் சொற்பெற்று ஒழுகிசைச்செப்ப லுடைத்தாய்க் கடைச்சீர் நாளென்னும் வாய்பாட்டால்முடிந்த நேரிசையெனப்படும்.

(பொருள்) கதிரோன்றோற்றமுங் குமுதத்தின் குவிவுங் காலைப்பொழுதையுணர்த்தின, குமுதங்குறிப்பால் மருதநிலத்தை யுணர்த்திநின்றது. மேலுமிம்மணமானது, காந்தருவமன்று பிரசாபத்தியமென்பது கதிரோனெனுங் காணவருவான்போல் எனபதாற்போதரும்.

(அணி.) "குமுதம்வாயடங்க" "நெஞ்சிற்றீயடங்க" என்பதிற் குமுதத்திற்கும் நெஞ்சத்திற்கும், அடங்காவென்னுமொரு பொருள்கொடுத்து முடித்தலால் ஒப்புமைக்கூட்டமென்னும் அலங்காரமாம்.

கட்டளைக்கலித்துறை.

கள்ளர்மகிழ்ந்தனர் காவுமுறங்கின காலைத்தே
புள்ளுமொடுங்கின வென்றுயர் சொற்றிடப் போதிலையே
நள்ளிருட்போதுமுன் னைவி யகன்றிடி னையகர் தான்
எள்ளுவரோபாங்கி யென்னுளமேற்றுவ ரென்றனையே.

[பதவுரை - பதவிளக்கம் - பதமுடிவு - பதப்புணர்ச்சி.]

(இ - ள்) கள்ளர்மகிழ்ந்தனர் — (வழிபறிக்கும்) திருடர் சந்தோஷமுற்றார்கள் - காவுமுறங்கின - சோலைகளுமசைவின்றியிருந்தன - புள்ளுமொடுங்கின - பட்சிசாலங்கள் தூங்கிவிட்டன - என்றுயர்சொற்றிட - என்னுடைய மனவருத்தத்தைச்சொல்லித் (தூதுபோக்க) — போதிலையே - இதசகுதியான

காலமாயிருக்கவில்லையே, நள்ளிருட்போதுமுன் - இந்தவிராக்காலமானது கழியுமுன் - ஆவியகன்றிடின்,—என் பிராணன் போயொழியுமேயாகில்—பாங்கி நாயகர்தான் எள்ளுவரோ—(என அன்பான) தோழி, பிரிதல்காரணமா யிவளிறந்தாளே யென்றென்னன்ப ரிகழ்வாரோ? எந்நாளுமேற்றுவ ரென்றனையே - இல்லை யிவள் அன்பின்காரணமாயே யுயிர்துறந்தாள் என்றென்னைப் போற்றுவர். கானகம் = காடு, இது ஒருசொல், எள்ளுதல் = இகழ்தல் போது = காலம், எற்றுதல் = துதித்தல், மகிழ்ந்தனர் = மகிழ் + த் + த + அன் + அர் தகரம்மெலிந்து நின்றது. ஒடுங்கின = ஒடுங்கு + இன் + அ. கள்ளர்மகிழ்ந்தனர் என்பது. "எண்மூவெழுத்" என்னும் விதியா லியல்பானது உறங்கின என்னும் முற்றின்முன் வலியியல்பானது.

[சொல்லிலக்கணம் - சொற்றொடரிலக்கணம்.]

"எள்ளுவரோ பாங்கியெந்நாளு மேற்றுவரென்றனையே" எள்ளுவரோ பயனிலையாய்நின்று நாயகர் என்னுமெழுவாயேற்றது.—பாங்கி - பெயர்விளிக்கப்பட்டுநின்றது - நாயகர் - பெயர், எற்றுவர் வினைமுற்றுப்பயனிலை,

கள்ளர் மகிழ்ந்தனர் - எழுவாய்த்தொடர், காவுறங்கின - எழுவாய்த்தொடர்.

(அந்நுவயம்.)

வசனங்கள்.

| | |
|---|---|
| 1. கள்ளர் மகிழ்ந்தனர் | 4. போதுஇலை. |
| 2. கா உறங்கின | 5. பாங்கி (சொல்லாய்) |
| 3. புள் ஒடுங்கின | 6. நாயகர் எற்றுவர். |

இந்த ஆறு வாக்கியங்களிலும், கள்ளர் - கா - புள் - போது - பாங்கி - நாயகர், என்பன வினைமுதல்களாயும், மகிழ்ந்தனர் - உறங்கின - ஒடுங்கின - இலை - சொல்லாய் - எற்றுவர் என்பன பயனிலைகளாயும் நின்றன.

[யாப்பு.]

முதற்சீர்நான்கும் வெண்டளை பிழையாமற் கடைச்சீர் விளங்காயாகியும் முதற்சீருக்கு மோனையாகியும், ஈற்றிலேகாரம்பெற்று, ஒற்றொழித்துப் பதினாறு யிர்பெற்று நின்ற கட்டளைக்கலித்துறை,

[பொருள்.]

கள்ளர்மகிழ்தலாற் சாமவேளையென்றும், கானகமென்பதாற் குறிஞ்சித்திணையென்றும், புள் என்றதாற் கிளிமுதலிய பட்சிகளென்றும் பொருள் கொள்ளப்படும். இது காமநோயால் மரணவஸ்தைப்படுந் தலைமகள் தோழியைநோக்கிச் சொன்னதென்க.

காவுமுறங்கின என்பது ஒருபொருளின் றொழிற்பண்பை யின்னொன்றிற் கேற்றிச்சொன்ன சமதையென்னுமலங்காரம். மேலும், காமநோயால்

மனம்வருந்தி யுயிர்துறந்தாளே யிவள் பேதையென நாயகனிகழ்வாரோ வென்றையுற்றுப் பின்னிறத்தலுக்கன்பே காரணமன்றி வேறின்றாகையா லிகழமாட்டார் புகழ்ந்துகொள்வாரெனத் துணிந்தவாறறிக.

இவ்வகையே செய்யுட்கடோறும் பஞ்ச விலக்கணங்களையு மொட்டிக் காண்க.

## பரீக்ஷை வினாக்கள்.

### அதிகாரம் க.

மாணாக்கர் கடவுளைத் தியானம் பண்ணவேண்டிய விசேஷ காலங்களெவை? அவர்களெவ்விதமாய் நூலைக் கற்றல்வேண்டும்? ஆரை மரியாதை செய்யவேண்டும்? மாணாக்கர் ஆபரணங்களென்ன? நூலை யையந் திரிபறக் கற்கும் வழியென்ன? கல்வியாலாகுங் குணங்களென்ன? அதின் பயனென்னை? ஆதியில் மனுஷர் இருப்பிடமெது? அதன் பின்னவர் பரந்துபோன நியாயமென்ன? ஆரியமென்பதி னர்த்தமென்னை? ஆதியிலாரியர்க்கு மைரோப்பியருக்குஞ் சம்பந்தமுண்டா? அதை யத்தாட்சிப் படுத்துவதென்ன? தமிழ் என்பதி னர்த்தமென்ன? அது பிறந்த அடியென்ன? வடமொழி தமிழ் மொழிக்குத் தாய் மொழியோ? தமிழ் வழங்கிய கால மெத்தனை பிரிவுகளாகும்? அவையென்ன? சேரசோழ பாண்டியதேசப் புலவர் யாவர்? அவர்களின் நாமங்களென்ன? ஈழதேசப் புலவர்கள்யாவர்? அவர்கள் நாமங்களென்ன? ஆதீனங்களெவை? அவை முதலாரா லேற்படுத்தப்பட்டன? ஆதீன விசிட்ட தேசிகரின் நாமங்களென்ன?

### காரம உ.

பெயர், குணப்பெயர், தொழிற்பெயர், வினையாலணையும்பெயர், வினைமுற்று, எச்சம், பதம், பகுதி, விகுதி, பகுபதம் ' ாப்பதம், இவைகளின் வரைவிலக்கண மென்ன? பெயர், வினை எனபவற்றின் பிரிவுகளென்ன? பெயர்க்கும், குறிப்புவினை முற்றிற்குமென்ன பகுதிகளாய்வரும்? வினைப் பகுபதங்கட்குப் பெரும்பான்மை யென்னவுஞ் சிறுபான்மை யென்னவும் பகுதிகளாய்வரும்? பொதுப்பகுபத மென்பதியாது? தொகாநிலை, தொகைநிலைத் தொடர்களெவை? வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி, இருபெயரொட்டுப் பண்பு என்னுந் தொகைகளின் வரைவிலக்கண மென்ன? காலமெத்தனை வழியாலறியலாம்? தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது பெறும் விகாரமென்ன? என்னென்ன விகுதி கெட்டுப்புணரும்? என்னென்னத்தின் முன் வலியியல்பாம்? எதிர்மறையாவதென்ன? எதிர்மறை, எதிர்மொழி யிரண்டிற்கும் வேறுபாடென்ன? எதிர்மறை யிடைநிலைகள் யாவை? அவற்றுளாகார விடைநிலையைப் பற்றி யென்ன சொல்லப்பட்டது. முன்மொழி, பின்மொழி மறைகளென்பதென்னை? எதிர்மறை யெத்தனை வகையாற் பெறப்படும்? பெயரினும் வினையினு மெதிர் மறுப்பவைகளென்ன? அது என்னென்ன பொருளில்வரும்? உபசர்க்கங்களென்றா லென்ன? வடமொழி தமிழ்மொழி யிரண்டினு முபசர்க்கங்கள் என்னத்தோ டிணைந்துவரும்? "யக்கு" என்பதியாது சனுக்கிர

கம, சங்க்ஷகம், அவப்பிரபஞ்சனம், பாகதம், தற்பவம், தற்சமம், என்பவைக ளென்ன? வடமொழி தமிழ்மொழி யிரண்டிற்கும் வேறுபாடென்ன?

## அதிகாரம் ௩.

[Vide Pages. 13, 14, 15, &c.]

விகாரமுதல் - கெடுதல் - பெரும்பான்மை மேற்கோள் &c., இவைகளின் பரியாய நாமங்களென்ன? வேற்றுமை - இலக்கணை - ஆரோகணம் - அவரோகணம் - பிரேரிதல்—பிரதியாகரித்தல் - அநுவாதம் - ஆகாரியரோபம - கதியம் - பதியம் - கவி - கமகன - வாக்கி, &c., &c, - இவைகளின் வரைவிலக்கணமென்ன? [இடைநிலை, இடைச்சொல்] [இலக்கணை, ஆகுபெயர்] [வினையாலணையும் பெயர், தொழிற்பெயர்] [எழுவாய்த்தொடர், வினைமுற்றுத் தொடர்] &c., &c, - இவைகளின் வித்தியாச மென்ன? அவத்தை, அலங்காரம், அளவை, அந்நுவயலக்கணம், இசை - இடை - உரி - தானம் &c., &c, இவை யொவ்வொன்றுந் தொகையி லெத்தனை.

## அதிகாரம் ௪.

பகுபதம், பகாப்பதம, பகுதி, சாது, பதம் என்பவைகளென்ன? தொடர் தொகை, என்பன யாவை? அவை யெத்தனை? சொற்றொடர், சொல்லிலக்கண மென்பன யாவை.

## அதிகாரம் ௫.

செய்யுள் என்பதென்ன? பொருள் நடையென்ப தென்ன, செய்யுளிற் பொருள் கொள்ளும்போது விசேஷமா யறியவேண்டிய தென்ன? பொருள், இடம், புடையுரை, அந்நுவயம், மெய்ப்பாடு, தொகை, வகை, சார்பு, இனம், இடம், சிறுபொழுது, பெரும்பொழுது, என்பவை யென்ன? அடைமொழி யென்பதென்ன? அதன் பரியாய நாமமென்ன? என்ன அடையாய் வரும், ஆரோபணமென்றால் என்ன? இனமுள்ள, இனமில்லாத அடைமொழிகள் என்றால் என்ன? இயற்பெயரையோ சிறப்புப் பெயரையோ முன்வைத்தல் சிறப்பு? வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன மொழிகளிற் பொருள் எங்கே சிறக்கும்? வேற்றுமை யுருபு, வினைமுற்று, எச்சம் இவையை முடிக்கவருஞ் சொல் எங்கே நிற்கும். ஆறனுருபும், பெயரெச்சமும் முடிக்குஞ் சொல்லுக்கு முன்னோ பின்னோ நிற்கும? பெயர், இடை, உரி, என்பன தத்தம மாத்திரையி னிற்பதன்றிச் செய்யுளில் வேறென்ன வாய்ப்பிறழ்ந்துவரும? காரியங் காரணமாயும், காரணம் காரியமாயும் மாறுமோ? குணங் குணியாயும், குணவினை குணி வினையாயும் வருமோ? செய்யுளிற் பொருள் கொள்ளும்போது, விகுதி, உவமை, பண்பு, உருபு, இவைகளை பிரித்துஞ் சேர்த்துங் கொள்ளலாமோ? எண்வகைப்பொருள்கோள் என்பதென்னை?

## அதிகாரம் ௬.

அந்நுவய மென்பதென்ன? அதன் பாகு பாடுகள் என்ன? எழுவாய் பயனிலையென்ப தென்ன? விசேடணம், விசேடியம், கிரியை, என்பனவென்ன? பாட்டில் என்ன எழுவாயாய் வரும்? என்ன பயனிலையாய் வரும்? என்ன விசேடணமாய் வரும? என்ன ஆரோபணமாய் வரும்? என்ன கர்

டிகமாய் வரும் ? வினையின் விசேடணம ஒன்ருய் நிற்பதன்றிப் பலவாய் நின்றடுக்கலும் வருமோ ?

## அதிகாரம் ஏ.

பொருள் என்ருல் என்ன ? அகப்பொருள் புறப்பொருள் என்ருலென்ன ? அவை முறையே யென்னத்தை யுணர்த்தும். மேலும் அவற்றின் நோக்கமென்ன ? திணையென்பதென்ன ? அதின் ஒழுக்கமுறையெப்படி ? வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை என்பன முறையே எனைத்தை யுணர்த்தும் ? கருப்பொருள் என்ன ? அது எத்தனை வகைப்படும் ? உரிப்பொருள் யாது ? ஐந்து திணையுமென்ன ? அவைகளின் எல்லைகள் யாவை ? அவற்றின் கருப்பொருள்கள் முறையே யென்ன ? பெரும்பொழுது யாது ? அதின் காலவரையறை, உரிமைகள் என்ன ? சிறுபொழுது அதின் கால எல்லை, உரிமையென்பன என்ன ? திணைமயக்க மென்பது என்னை ?

## அதிகாரம் அ.

யாப்பு என்பதென்னை, அதின்பயனென்னை ? செய்யுள், அசை, எழுத்து, சீர், அடி, தொடை, தளை, என்பவற்றின் கருத்தென்ன ? முறையேயவையின் கூறுகளென்ன ? நேர் அசை நிரை அசைகள் என்ன ? இயற் சீர், உரிச்சீர், கனிச்சீர், பொதுச்சீர்களினிலக்கணங்களென்ன ? அவைகளின்வாய்பாடென்ன ? இச்சீர்கள் விரவுஞ்செய்யுட்களென்ன ? நேர் ஒன்று ஆசிரியத்தளை நிரையொன் ருசிரியத்தளை என்பன என்னை ? ஒன்றியவஞ்சித்தளை, ஒன்ருதவஞ்சித்தளை, இயற்சீர்வெண்டளை, வெண்சீர்வெண்டளை என்பவைகள்யாவை ? இத்தளைகள் சேர்ந்துவரும் செய்யுட்களென்ன ? அடி என்பதென்ன ? நெடிலடி, சிந்தடி, குறள் அடி, கழிநெடிலடி, இவைகளின் வித்தியாசமென்ன, எதுகை, மோனை என்பதென்ன ? மோனையெழுத்துக்களெவை ? பாவென்பதியாது, பாவினத்தின் தொகையென்ன ? ஒருவிகற்ப மிருவிகற்பமாவன என்ன ? (நேரிசை - இன்னிசை) (குறள் - சிந்தியல்) (நெடில, கழில் நெடில்) இவைகளின் வித்தியாசமென்னே ? வெண்பா விலக்கணமென்ன ? கலித்துறை யிலக்கணமென்ன ? விருத்த விலக்கண மென்ன ? மடல, அங்கமாலை, ஆற்றுப்படை, செருக்களவஞ்சி, வரலாற்று வஞ்சி, அட்டமங்கலம், பலசந்தமாலை, கோவை, மணிமாலை, இரட்டைமணிமாலை, இணைமணிமாலை, தூது, குழமகன், இவைகளின் விபரமென்ன! செய்யுட்பொருத்தம் யாது, அது எத்தனை வகைப்படும். பாவினங்களின் சாதி வகையென்ன ?

## அதிகாரம் கூ.

அணியென்ன ? அதின்பயனென்னை ? அது எத்தனை வகைப்படும் ? சொல்லணியாது ? பொருளணியாது ? இரண்டிற்கும் வேறுபாடு என்னை ? சொல்லணியின் பிரிவுகள் என்ன ? பண்பு மறிநிலை, காரணமறிநிலை, முதன் மறிநிலை, குறிப்புமறிநிலை, இவைகள் என்ன? மடக்கு என்பதென்ன? இடையிடாமடக்கு, மிடையிட்டமடக்கு இவற்றின் வேறுபாடியாது! ஐயம் - எதிர்நிலை - எடுத்துக்காட்டு - நினைப்பு - விளக்கு - காட்சி - வேற்றுமை - விதி - விலக்கு - ஏது - வீறுகோள் இவைகளின் வரைவிலக்கணங்களென்ன !

## கோரம் ௰.

பஞ்ச இலங்கணங்கள் யாவை? பிரயோகமென்பதென்னை? இப்பிரயோகஞ் செய்வதிற் கருவிகளாய் நிற்பன யாவை?

## இலக்கணநூல்களின் பெயர்.

(1) குமாரம்
(2) ஐந்திரம்
(3) அகத்தியம்
(4) தொல்காப்பியம்
(5) அரியவிதி
(6) இலக்கணத்திரட்டு
(7) இலக்கணவிளக்கம்
(8) இலக்கணக்கொத்து
(9) இலக்கணவிளக்கச்சூறாவளி
(10) இறையனார் அகப்பொருள்
(11) வீரசோழியம்
(12) நேமிநாதம்
(13) குவலயானந்தம்
(14) தொன்னூல்விளக்கம்
(15) கல்லாடம்
(16) நன்னூல்
(17) காரிகை
(18) யாப்பருங்கலம்
(19) நாற்கவிநம்பியகப்பொருள்
(20) புறப்பொருட்பன்னிருபடலம்
(21) தண்டியலங்காரம்
(22) மாறனலங்காரம்
(23) சிதம்பரப்பாட்டியல்
(24) வரையறுத்தபாட்டியல்
(25) செய்யுளியல்
(26) பொருத்தவியல்
(27) வெண்பாப்பாட்டியல்
(28) பிரபந்ததீபம்
(29) அவனியம்
(30) மயேச்சுரம்
(31) பல்காயம்
(32) நற்றத்தம்
(33) சினேந்திரம்
(34) வாமனூல்
(35) கையனார்நூல்
(36) காக்கைபாடினியம்
(37) கவிசாகரம்
(38) பிரயோகவிவேகம்

இன்னுமனேக விலக்கண நூல்களுள ; இவைகளின் பெயரையறிதலிலக்கணம் வாசிக்கப்புகுமாணுக்கர்க்கு யுபயோகமாம்.

## பஞ்ச காவியங்கள்.

சிந்தாமணி-சிலப்பதிகாரம்-வளையாபதி-குண்டலகேசி-மணிமேகலை.

முற்றிற்று